பதிவு இலக்கம் : 105267

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepamtv.asia

26.01.2020 விலை - 30.00 இதழ் - 213

விவேகானந்த அச்சகம்
VIVEKANANDA PRESS



For all your Printing needs...
Graphic Design, Print, Copy, Binding and other Servic
No. 10 - 14 Stanley Road, Jaffna. Mobile : 077 199 8747



## அரசியல் தெரியாத விமல் ஒரு முட்டாள் இனவாதி



மனோகணேசன்





## அரசியலில் இருந்து சுமந்திரன் ஒதுங்குவாரா?

– சுகாஸ்






## அரசியல்வாதிகள் பலரின் குரல்வளையை நெரிக்கும் ரஞ்சனின் குரல் பதிவுகள்



ரஞ்சன் ராமநாயக்க



## யாழ். நகரில் ஒரு அருங்காட்சியகம்

யாழ். வர்த்தக சந்தை வெற்றிபெற
எமது வாழ்த்துக்கள்.

JITF 2020



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 221 7578, 021 221 7678
077 614 0361, 077 722 6247



HOTLINE : 077 722 6247

ஒடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664, 070 301 3016
கே.கே.எஸ் வீதி, மல்லாகம். 021 224 3393, 070 301 3014
வங்களாவடிச் சந்தி, வேலணை. 021 221 5472, 070 301 3012
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 070 255 4135
இல.281c, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம். 021 222 8004, 070 301 5004
பழைய கண்டி வீதி (பிரதான வீதி) சாவகச்சேரி. 021 225 2454, 070 510 2484
E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com




# வேஷம் போட்ட கழுதை!

ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அந்தக் கழுதைக்கு தேவையான தீவனத்தை வைக்க முடியவில்லை. வயிறார புல் மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும் இல்லை. இந்தக் காரணத்தால் கழுதை நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. சலவைத் தொழிலாளி கழுதையின் நிலை கண்டு மிகவும் கவலைப்பட்டான். ஒருநாள் சலவைத் தொழிலாளி காட்டு வழியாக நடந்து வந்துக் கொண்டிருந்தபோது ஒரு புலி செத்துக் கிடப்பதைக் கண்டான். அதைக் கண்டதும் சலவைத் தொழிலாளிக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தப்



புலியின் தோலை உரித்து அதைக் கழுதை மீது போத்தி நெல் வயல்களில் விட்டு மேயச் செய்தால் உண்மையாகவே புலி மேய்வதாக எண்ணிப் பயந்து கொண்டு வயலுக்குச் சொந்தக்காரர்கள் பேசாமலிருந்து விடுவார்கள். கழுதை வயிறார மேயும் என்று சலவைத் தொழிலாளி நினைத்து கொண்டான்.

இறந்து கிடந்த சிங்கத்தை தூக்கிக் கொண்டு அவன் வீட்டிற்கு சென்றான். அன்று இரவு சிங்கத்தின் தோலை உரித்தான். மறுநாள் கழுதை மீது புலித் தோலைப் போர்த்தி விளைந்திருந்த வயல்கள் பக்கமாக போகச் செய்தான்.

புலிதான் பயிரை மேய்கிறது என்று எண்ணிக் கொண்டு குடியானவர்கள் அதை விரட்டப் பயந்து கொண்டு பேசாமலிருந்து விட்டார்கள். கழுதை விளை நிலத்தில் அன்றாடம் வயிறார மேய்ந்து நன்றாக கொழுத்துவிட்டது. ஒரு நாள் கழுதை புலித் தோலைப் போர்த்திக் கொண்டு நெல் வயலில் மேய்ந்துக் கொண்டிருந்தது. அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒரு பெண் கழுதை உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கியது. அதைக்கேட்ட புலித்தோல் போர்த்திய ஆண் கழுதை பெண் கழுதையின் குரலைக் கேட்டதும் உற்சாகமடைந்து தானும் உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கிவிட்டது. குடியானவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. எல்லோரும் ஒன்று சேர்ந்து தடிகளை எடுத்துக் கொண்டு வந்து கழுதையை நன்றாக அடித்துக் கொன்று விட்டார்கள்.

# குண்டு குண்டு மல்லிகை



குண்டு குண்டு மல்லிகை
குழந்தைச் சிரிப்பு மல்லிகை!
கண்டு மகிழும் மல்லிகை,
கமகமக்கும் மல்லிகை!

மங்கை சூடும் மல்லிகை
மணக்கும் நல்ல மல்லிகை
தங்கை சூடும் மல்லிகை
தரத்தில் உயர்ந்த மல்லிகை!

உள்ளம் கவரும் மல்லிகை
உயர்ந்த வாச மல்லிகை!
வெள்ளை நிறத்து மல்லிகை
விரும்பிச் சூடும் மல்லிகை!

# தமிழ் படிப்போம்


மரபுச் சொற்கள்

அ


| | |
|---|---|
| அரக்கப் பரக்க | அவசரம் அவசரமாக |
| அவசரமும் பதற்றமும் | |
| அள்ளி இறைத்தல் | அளவுக்கு மேல் செலவழித்தல் |
| அள்ளி விடுதல் | ஒன்றை மிகைப்படுத்திக் கூறுதல் |
| அவசரக் குடுக்கை | ஒரு செயலை அவசரப்பட்டுச் செய்து செய்துவிடுபவன் |

ஆ

| | |
|---|---|
| ஆறப் போடுதல் | ஒரு காரியத்தைக் காலந்தாழ்த்தி செய்தல் |
| ஆழம் பார்த்தல் | ஒருவருடைய உள்ளக் கருத்தை அறிந்து செயல்படுதல் |




# மைக்கேல் ஃபாரடே!!



- மைக்கேல் பாரடே அவர்கள் ஒரு அறிவியல் விஞ்ஞானி.
- மின் காந்தவியல், மின் வேதியியல் ஆகிய துறைகளில் பல புதிய கொள்கைகளை கண்டறிந்தவர்.
- மைக்கேல் பாரடே அவர்கள் 1791 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி இங்கிலாந்தில் லண்டன் நகரில் பிறந்தார்.
- இவரது தந்தை ஜேம்ஸ் பாரடே, அவரொரு கொல்லர்.
- வறுமையின் காரணமாக, 14 வயதில் புத்தங்களை கட்டி(பைண்டிங்) விற்கும் பணியில் இணைந்தார்.
- ஆனால் இவர் புத்தகங்களை விற்பதற்கு முன்னர் முடிந்தளவு வாசித்து விடுவார்.
- இவரது வாசிப்பு பழக்கமே பின்னாளில் அவரை விஞ்ஞானியாக்கியது.
- இவர் தொடர்பில் சர் ஹம்ப்ரி டேவிட் கருத்து தெரிவிக்கையில், 'கண்டுபிடிப்புகளில் சிறந்தது மைக்கேல் பாரடேயினதே' என,
- இவரது கண்டுபிடிப்புக்களாக, ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படுகின்ற புட்சன் சுர் அடுப்பின் ஆரம்ப வடிவம், டிரான்ஸ்போமர், மின்மோட்டர், டைனமோ என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.
- தன்னைப் போன்ற ஏழைச்சிறுவர்களும் அறிவியலில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக லண்டன் ராயல் கழகத்தில் 'கிறிஸ்துமஸ் விரிவுரைகள்' என்ற தொடரை ஆரம்பித்து வைத்தார்.
- இன்றும் அது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதனால் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன் அடைகின்றனர்.
- "மெழுகுவர்த்தியின் வேதியியல் வரலாறு" என்ற புத்தகத்தை எழுதினார்.
- இது எளிய மனிதர்களும் அறிவியலை புரிந்து கொள்ளும் படி இருந்தது.
- இறுதிவரை எளிமையான வாழ்க்கையையே வாழ்ந்த மைக்கேல் பாரடே 1867 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதி அவருடைய 76 ஆவது வயதில் காலமானார்.


## உங்கள் பதில் என்ன ?

1. பாம்புக்கு எத்தனை நுரையீரல்கள் உள்ளன?
2. ஒரு குருவியின் கழுத்திலுள்ள எலும்புகள் எத்தனை?
3. நீந்தத் தெரியாத மிருகம் எது?
4. தவளையின் இரத்தம் என்ன நிறம்?
5. மிக விரைவில் இனப்பெருக்கம் செய்யும் பாலூட்டி எது?

விடைகள்

1.இரண்டு 2. 23 3. ஒட்டகம் 4. கறுப்பு 5. சுண்டெலி

## டோடோ பறவை






டோடோ பறவை சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு பெருமளவில் காணப்பட்ட இப்பறவையினம் தற்போது பூமியில் இல்லை. இது வான்கோழியை விடப் பெரியது. இதன் கால்களும் இறக்கைகளும் குட்டையானவை. ஆகவே இதனால் பறக்கவோ வேகமாக ஓடவோ முடியாது. மொரீசியஸ் அருகாமை தீவுகளுக்கு முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள் டோடோ பறவைகளை உணவுக்காகக் கொன்று அழித்துவிட்டனர். மேலும்அவர்கள் கொண்டு வந்து வளர்த்த பன்றிகள் இப்பறவைகளின் முட்டைகளைத் தின்று இதன் இனத்தை அடியோடு அழித்து விட்டன. எனவே டோடோ பறவையை முற்றழிந்த பிராணிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. பாடம் செய்யப்பட்ட டோடோ பறவையை இங்கிலாந்து ஒக்ஸ் போர்ட் பல்கலைகழகப் பொருட்காட்சி சாலையில் இன்றுவரை காணலாம்.

வார இதழ்
தீபம்

"யாமார்க்கும் குடியல்லோம்"

26.01.2020 இதழ் - 213

gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# பௌத்த தர்மத்தின் பேரால் பேரினவாத சர்வாதிகாரம்

கடந்த பல தசாப்த காலமாக இந்நாட்டின் சிறுபாண்மை இனத்தவர்கள் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் சந்தித்து எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் அனைத்திற்கும் மூலகாரணம் பேரினவாத, பௌத்தமதவாத, மேலாதிக்க சிந்தனை கொண்ட ஆட்சியாளர்களின் அரசியல் நகர்வுகள் மட்டுமேயாகும்.

ஆரம்பகாலத்தில் தனிச்சிங்கள ஆட்சிமொழி கொள்கையின் அடிப்படையில் ஆரம்பித்த மொழியின் அடிப்படையிலான அடக்குமுறை, 1958 ஆம் ஆண்டின் இனக்கலவரத்திற்கு மூலவிதையாயிற்று.

பௌத்த சிங்கள நாடாக இந்த நாட்டை அடையாளப்படுத்தும் பேரின வாத வெறிக்கு அடித்தளமிட்ட பிதாமகரான பண்டார நாயக்கா பின்னர் இந்த நாட்டை இனக்கலவர பூமியாக அடையாளப்படுத்தி விட்டு ஒரு புத்த தேரராலேயே சுட்டுக்கொலை செய்யப்பட்டது வெட்கக் கேடான ஒரு வரலாறாகும்.

அவரைத் தொடர்ந்து ஆட்சிப்பீடம் ஏறிய சகல சிங்களத் தலைவர்களுமே இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவரின் ஜனநாயக உரிமைகளை உதாசீனம் செய்து, மேலாதிகாரம் செய்யும் குரூர மனித நேயமற்ற சிந்தனைக் கருவுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்ததே, இன்று இந்த நாடு சந்தித்துவரும் சகல அவமானங்களுக்கும், துயரங்களுக்கும் காரணமாகும்.

சக மனிதரின் சமூகவியல், அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை முற்றாகப் புறந்தள்ளி அவர்கள் நியாயம் கேட்க நிமிர்ந்தெழுந்த போதெல்லாம் - ஆயுத முனையில் அடக்கி ஒடுக்க அழித்து வந்த அரசி யல் மரபொன்றைத் தமதாக்கி கொண்ட சிங்கள ஆட்சியாளர் அதனை சோஷலிசத்தின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால், பௌத்த தர்மத்தின் பெயரால் அடையாளப்படுத்தத் தீவிரம் கொள்வதே அவமான கரமான விடயமாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை, புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்கியதன் மூலம் பௌத்த சிங்கள சர்வாதிகார ஆட்சி முறையொன்றை நிறுவி, அதனையும் ஜனநாயகத்தின் பெயரில் அடையாளப்படுத்தியவர் 'தர்ம இஷ்டர்" என்று தன்னைத் தானே அடையாளப்படுத்த முயன்ற ஜே.ஆர் .ஜெயவர்த்தனாதான் 'யுத்தமா? சமாதானமா?" என்று தமிழ் மக்களை நோக்கிச் சவால் விட்ட பௌத்த சிங்கள தலைவராவார்.

அவரின் ஆட்சிக்காலத்தில் இங்கு அரங்கேறிய இனக்கலவரங்கள், போர்க்கால மனித உரிமை மீறல்கள், போன்றவை இலங்கை வரலாற்றை தமிழ் மக்களின் கண்ணீராலும் இரத்ததாலும் எழுதி வைத்துள்ளது. அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்தவர்களும் அவரது அணுகுமுறையை வெவ்வேறு பெயர்களில் கடைப்பிடித்த போதும் தாங்கள் ஜனநாயகவாதிகள் தான் எனத் தொடர்ந்தும் பிரகடனம் செய்தே வந்தனர்.

அவையெல்லாம் ஏற்கனவே பேசு பொருளான விடயங்களேயாகும். இப்போது பதவியிலிருக்கும் புதிய ஆட்சியாளரும் புதிய நம்பிக்கைகள் எதனையும் தருபவர்களாக இல்லை. பௌத்தம், சிங்களம், நிறைவேற்று அதிகாரம் இவை மூன்றையும் வலியுறுத்தியபடி சிறுபான்மை மக்களின் பாவம் அற்றவர்களாகவே தமது ஆட்சியினை தொடர்ந்தும் நடத்த விரும்புகின்றனர். இனத் தலைவர்கள் வெளிப்படையாகவே தெரிவிக்கவும், அதன் மூலம் எச்சரிக்கை மற்றும் மிரட்டல் அரசியலைத் தொடரவும், திடசங்கற்பம் பூண்டிருப்பதை, ஆட்சியில் இருக்கும் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மூலம் அன்றாடம் விடுத்துவரும் அறிக்கைகள் மூலமும் உறுதிப்படுத்தி வருகின்றனர்.

எதுவானாலும் இவையனைத்தையும் பௌத்த தர்மத்தின் பெயராலும், பௌத்த மத பீடங்களின் ஆசியுடனும், பௌத்த துறவிகளின் அதிகார ஆணைகளின் படியும் மேற்கொள்வது தான் துயரம் தரும் விடயமாகும்.

பௌத்தம் சர்வாதிகாரத்தை, எதேச்சதிகாரத்தை, மனித தர்மத்திற்கு எதிரான கோட்பாடுகளை அங்கீகரித்ததாக வரலாறே இல்லை.




மனிதரில் ஆயிரம் ஜாதி- என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை:
மனிதரும் மாமரம் ஒன்று - அதில்
காய்களும் பிஞ்சுக் கனிகளும் உண்டு.

பூவில் உதிர்வதும் உண்டு- பிஞ்சைப்
பூச்சி அரித்துக் கெடுவதும் உண்டு
நாவிற் கினியதைத் தின்பார்- அதில்
நாற்பதினாயிரம் சாதிகள் சொல்லார்.


ஒன்றுண்டு மானிட சாதி- பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்:
இன்று படுத்தது நாளை - உயர்ந்
தேற்றம் அடையும் உயர்ந்த திழியும்.

நந்தனைப் பேரல் ஒரு பார்ப்பன்- இந்த
நாட்டினில் இல்லை: குணம் நல்லதாயின்,
எந்தக் குலத்தின ரேனும் - உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்.


## சுந்தரச் சிரிப்பு

### (வி)சித்திரவதை

உணவகத்தில் சமையல்காரரை கஷ்ரப்படுத்திய முதலாளிக்கு யமலோகத்தில் கிடைக்கும் தண்டனை.



அலுவலகத்தில் கடமைநேரத்தில் தூங்கிய அதிகாரிக்கு யமலோகத்தில் கிடைக்கும் தண்டனை.



நன்றி - சிரித்திரன் சித்திரக்கொத்து

உலக அரசியல்

# ட்ரம்பின் ஆட்சி தொடருமா?

உலக எஜமானாய் வலம்வரும் அமெரிக்க சனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான பதவி நீக்க விசாரணையே, சமகால சர்வதேச அரசியலின் பிரதான தீனியாக ஈரான்-அமெரிக்க விவகாரத்தில் இருந்து உருமாறி வருகின்றது. அமெரிக்க சனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான பதவி நீக்க விசாரணையானது, அமெரிக்கா சனாதிபதி பதவி நீக்க விசாரணை வரலாற்றின் தொடராக அமையுமா என்பது தொடர்பிலும், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 59 ஆவது சனாதிபதித் தேர்தலில் இதன் தாக்கம் எத்தகையதாய் காணப்படப் போகின்றது, என்பது தொடர்பிலும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் அவதானம் பதவி நீக்க விசாரணையில் குவிந்துள்ளது. இக்கட்டுரை அமெரிக்க வரலாற்றில் அமெரிக்க சனாதிபதி மீதான விசாரணையின் வரலாற்று தொடர்ச்சி தன்மையின் அடிப்படையில் ட்ரம்ப்க்கு எதிராக பதவி நீக்க போக்கின் தன்மையை எடுத்துக்காட்டுவதாகவே அமையவுள்ளது.

அமெரிக்க அரசியலமைப்பை பொறுத்தவரையில் தேசத்துரோகம், ஊழல் அல்லது பெரிய குற்றங்களில் ஈடுபட்டால் சனாதிபதியாக இருப்பவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார். சனாதிபதிபதவி நீக்கத்துக்கான குற்றச்சாட்டு முதலில் விசாரணைகுட்படுத்தப்பட்டு உறுதியானால் பிரதிநிதிகள் சபையில், சனாதிபதிக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படும். பெரும்பாண்மை ஆதரவு தெரிவித்தால், தொடர்ந்து 100 உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபைக்கு கொண்டு செல்லப்படும், அங்கு மேற்கொள்ளப்பட்டு சனாதிபதிக்கு எதிரான பதவி நீக்க விசாரணை 2ஃ3 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றால் சனாதிபதி பதவி விலகவேண்டும். இதுதான் அங்குள்ள நடைமுறை. அமெரிக்க வரலாற்றில் சனாதிபதிக்கு எதிரான பதவி நீக்க விசாரணைப் பொறிமுறை, டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக மூன்றாவது முறையாக இடம்பெறுகின்றது. இதற்கு முன்னதாக 1868ஆம் ஆண்டு அன்ட்ரூஜான்சன் மற்றும் 1998 ஆம் ஆண்டு பில் கிளின்டன் ஆகியோர் சனாதிபதி பதவி நீக்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆயினும் இதுவரை அமெரிக்காவின் எந்த ஒரு ஜனாதிபதியும் குற்றச்சாட்டின் விளைவாக பதவியிலிருந்து நீக்கப்படவில்லை.

அமெரிக்காவின் 17ஆவது சனாதிபதியாக இருந்த அன்ட்ரூ ஜான்சனுக்கு எதிராக 11 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சனாதிபதி பதவி நீக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதுவே, அமெரிக்க வரலாற்றின் முதலாவது சனாதிபதி பதவி நீக்க விசாரணையாக அமைகின்றது. ஜான்சன் 1867 ஆம் ஆண்டு காங்கிரஸில் உருவாக்கப்பட்ட சுயாதீன உடன்படிக்கை அலுவலக சட்டத்தை மீறியதாகவும் குறிப்பாக போரின் செயலாளரான எட்வின் எம். ஸ்டான்டனை பதவி நீக்கியமை சட்டத்திற்கு மீறிய செயலென்பதே பிரதான குற்றமாக முன்வைக்கப்பட்டது. இதனடிப்படையிலான விசாரணையில், காங்கிரஸின் பிரதிநிதிகள் சபையில் பதவிநீக்கத்துக்கு ஆதரவாக 126 வாக்குகளும் எதிராக 47 வாக்குகளை பெற்று வெற்றி பெற்று, செனட் சபையின் விசாரணைக்கு அனுப்பப்பட்டு விசாரணை முடிவில் 35 வாக்குகள் ஆதரவாகவும் எதிராக 19 வாக்குகளும் பெற்று பெரும்பான்மையாய் வெற்றி பெற்றது. எனினும் செனட் சபையில் 2ஃ3 பெரும்பான்மையை பெற 1 வாக்கு போதாமையால் ஜான்சனுக்கு எதிரான பதவி நீக்க விசாரணை தோல்வியுற்றது. எனினும், பதவி நீக்க விசாரணையின் அரசியற் தாக்கம் அடுத்த சனாதிபதி தேர்தலில் ஜான்சனால் களமிறங்க முடியவில்லை.

1998 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 42 ஆவது ஜனாதிபதியான பில்கிளிண்டனுக்கு எதிராக பதவி நீக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குறித்த விசாரணை பில்கிளின்டனுக்கு எதிராக பௌலா ஜோன்ஸ் என்ற பெண்ணால் தாக்கல் செய்த பாலியல் துன்புறுத்தல் வழக்கிலிருந்தே குற்றச்சாட்டுகள் எழுந்தன. மேலும் வெள்ளை மாளிகை பயிற்சியாளரான மோனிகா லெவின்ஸ்கி என்ற பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. இதனடிப்படையில் பில்கிளின்டன் சத்தியம் மற்றும் நீதிக்கு எதிராக இருந்தார் எனக்கூறி, காங்கிரஸின் பிரதிநிதிகள் சபையில் நான்கு தடவை பதவி நீக்க விசாரணை கொண்டுவரப்பட்டது. அதில், இரண்டு தடவை பதவி நீக்க விசாரணை பிரதிநிதிகள் சபையில் பெரும்பாண்மை வெற்றி பெற்று செனட் சபையின் விசாரணைக்கு கொண்டு செல்பட்டது. செனட் சபையில் முதன்முறையாக பதவி நீக்க விசாரணைக்கு ஆதரவாய் 45 வாக்கும் எதிராய் 55 வாக்கும் பெற்று, சாதாரண பெரும்பாண்மையே இன்றி விசாரணை தோற்கடிக்கப்பட்டது. செனட்டில் இரண்டாம் முறை ஆதரவு, எதிராக 50:50 என்ற வாக்குகள் கிடைக்கப்பெற்று மீளவிசாரணை தோற்கடிக்கப்பட்ட நிலையில் பில்கிளின்டன் பதவி நீக்க விசாரணையிலிருந்து காப்பற்றப்பட்டார். தொடர்ந்து, 2001ஆம் ஆண்டு வரை சனாதிபதியாய் பில்கிளின்டன் இருந்த போதிலும் தொடர்ந்து வந்த, 54 ஆவது சனாதிபதி தேர்தலில் பில்கிளின்டனின் சனநாயக கட்சியால் தொடர்ச்சியாக ஆட்சியை தக்க வைத்து கொள்ள முடியவில்லை.

இதுவரை, அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட சனாதிபதி பதவி நீக்க விசாரணை முடிவுகள் யாவும், கட்சி செல்வாக்குட்படுவதனை உறுதிசெய்கின்றது. மேலும், இருகட்சி முறைமை உள்ள அமெரிக்காவில் செனட்டில் 2/3 பெரும்பாண்மையை குறித்த, ஒரு கட்சி பெற முடியாது என்ற யதார்த்தத்தில், அமெரிக்காவில் சனாதிபதி பதவி நீக்கம் என்பது காங்கிரஸின் பிரதிநிதிகள் சபை வரையான, ஒரு வெற்றிகரமான செயல்முறை என்பதே யதார்த்தம் என்பதை வரலாறு சுட்டுகின்றது. மாறாக, சனாதிபதியைப் பதவி நீங்க வேண்டுமாயின் குற்றஞ்சாட்டப்படும் சனாதிபதி, சனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் போன்று, தனது தார்மீக பொறுப்பை உணர்ந்து பதவி விலக வேண்டும். 1964ஆம் ஆண்டு அமெரிக்காவின் 37ஆவது சனாதிபதி ரிச்சர்ட் நிக்சனுக்கு எதிராக வாட்டர்கேட் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டை முன்வைத்து, 38 பேர் கொண்ட நீதித்துறை குழு பதவி நீக்க விசாரணை நகர்வுகளை மேற்கொள்கையிலேயே நிக்சன் சனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார்.

இவ்வரலாற்றுப் பின்னணியோடு ட்ரம்பின் அரசியல் பயணத்தையும் பகுப்பாய்வு செய்தே, சமகால ட்ரம்ப் மீதான பதவி நீக்க விசாரணையையும் அணுக வேண்டியுள்ளது. அமெரிக்க வரலாற்றில் பதவி நீக்க விசாரணை பொறி முறைக்குள், உட்படுத்தப்படும் மூன்றாவது சனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் காணப்படுகின்றார். அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக 2016ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற காலத்திலிருந்தே பல்வேறு சர்ச்சைகளில் சிக்கி வந்துள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்று ஜனவரி பதவியேற்பதற்கு முன்பாகவே பதவி நீக்க விசாரணை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான, முன்னர் யதார்த்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பாக ட்ரம்ப் சனாதிபதி தேர்தலுக்கு முன், 13 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிட்டது, எனினும் வழக்கு கைவிடப்பட்டது. மேலும், ட்ரம்ப் பல்கலைக்கழகத்தில், ட்ரம்ப் மோசடி செய்துள்ளதாக மாணவர்கள் குற்றஞ் சுமத்திய நிலையில் தற்காப்புக்காக பல்கலைக்கழகத்தையே மூடினார் போன்ற குற்றச்சாட்டுக்கள் நிறைந்த மனிதனாகவே தேர்தலை சந்தித்து வெற்றியும் பெற்றார். பல்கலைக்கழக சட்டபேராசிரியர் கிறிஸ்டோபர் லூயிஸ் பீட்டர்சன் ட்ரம்பை குற்றச்சாட்டுக்கு உட்படுத்துவது காங்கிரஸிற்கு ஏன் சரியானது எனப் பகுப்பாய்வு செய்து 23 பக்க கட்டுரை ஒன்றையே 2016இல் சமர்ப்பித்திருந்தார். யாவற்றையும் கடந்தே ட்ரம்ப் தனது முதல் ஆட்சி காலப்பகுதியின் இறுதிக்கு வந்துள்ளார் என்பது அவரின் அரசியல் பயணத்தின் எடுத்துக்காட்டாகும்.


2020 நவம்பர் நடைபெறவுள்ள, 59ஆவது சனாதிபதித் தேர்தலினை மையப்படுத்தியே ட்ரம்பிற்கு எதிரான பதவி நீக்க விசாரணை சமகாலத்தில் பிரதானப்படுகின்றது. குடியரசு கட்சியின் வேட்பாளராக இரண்டாம் முறை களமிறங்க உள்ள இவருக்கு, எதிராக ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை சனாதிபதி ஜோபிடன், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் ட்ரம்ப் தனது தேர்தல் வெற்றிக்காக ஜனநாயக கட்சியின் போட்டியாளர் ஜோபிடன், உக்ரேனில் செய்துவரும் தொழில் தொடர்பாக அவர் மீதும் அவரது மகன் மீதும் ஊழல் விசாரணை மேற்கொள்ள, உக்ரைன் அரசின் மீது அழுத்தம் கொடுத்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததாகவும், இது தொடர்பான விசாரணையில் நாடாளுமன்றத்திற்கு இடையூறு செய்ததாகவும் குற்றம் சாட்டப்பபட்டுள்ளது. குறித்த, குற்றச்சாட்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மறைமுக விசாரணைகளை தொடர்ந்து, பொதுமக்கள் முன்னிலையிலானா விசாரணையில் உக்ரைன் தூதர் வில்லியம் டெய்லர், ஜோபிடன் மீதான ஊழல் விசாரணை குறித்து ட்ரம்ப் நேரடியாகக் கேட்டார் எனக் கூறியது. ட்ரம்ப் பதவி நீக்க விசாரணையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. எனினும் ட்ரம்ப் தொடந்து தான் குற்றமற்றவர் என்றும், சனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெற கூடாது என்பதற்காக சனநாயக கட்சியினரின் சூழ்ச்சிதான் தன் மீதான பதவி நீக்க தீர்மானம் என கூறியுள்ளார்.



கடந்தவாரம், காங்கிரஸின் பிரதிநிதிகள் சபையில் ட்ரம்பை பதவி நீக்க கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக, 230 பேரும் எதிராக 194 பேரும் வாக்களித்துள்ளனர். பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள குறித்த தீர்மானத்தை சபாநாயர் நான்ஸி பெலோஸி கையெழுத்திட்டு செனட் சபையின் விசாரணைக்கு அனுப்பியுள்ளார். செனட் சபை விசாரணை மேற்கொள்ள, செனட் சபை உறுப்பினர்கள் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, ஜான் ராபர்ட்ஸ் முன்னிலையில் பாரபட்சமில்லாத நீதியையே வழங்குவோம் என்று உறுதிமொழி ஏற்றுள்ளனர். செனட் சபையின் விசாரணை பொறிமுறை, ஜனவரி 21ஆம் தேதி ஆரம்பிக்கின்றது. செனட் சபையில் தற்போது ஆளும் குடியரசு கட்சியின் சார்பில் 53 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியான ஜனநாயகட்சி சார்பில் 47 உறுப்பினர்களும் உள்ளனர். இதனால், வரலாற்றின் தொடர்ச்சியாக முதல் இரண்டு பதவி நீக்க பொறிமுறையின் முடிவினை போன்றே ட்ரம்புக்கு எதிரான பதவி நீக்க விசாரணையும் செனட் சபையால் கட்சி அடிப்படையில் தோற்கடிக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. எனினும் விசாரணையின் திருப்பங்கள் தேர்தல் முடிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாய் அமையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஐ.வி.மகாசேனன் -

# கண்ணீர்விட்டோ வளர்த்தோம்?



பாராளுமன்றத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள் ளது. தமிழ்ப்பிரதேசங்களில் ஏகப்பட்ட முயற்சிகள் இடம்பெறு கின்றன. தமிழ்த் தேசியப் பரப்பிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என மூன்று அணிகள் போட்டியிடுகின்றன. தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளி டையே ஆசனப்பகிர்வுகள் முற்றுப் பெற்றுவிட்டாலும் ஏனைய அணி களிடையே அவை முழுமையடைய வில்லை. விக்கினேஸ்வரன் அணியின் குழப்பம் இன்னமும் தீரவில்லை. சமபங்காளர்கள் என்ற எண்ணக்கரு ஏற்கப்படாததினா லேயே குழப்பங்கள் நீடிக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

விக்கினேஸ்வரனின் கட்சி அரசியல் பீடத்தில் 50 வீதமும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வேட்பாளர் பட்டியலில் 40 வீதமும் கேட்கின்றது. சுரேசின் கட்சிக்கு 20 வீதமும், ஏனையவற்றிற்கு 10 வீதமும் வழங்கலாம் என அக் கட்சி கூறுகின்றது. பங்காளிக் கட்சிகள் அதனை ஏற்கவில்லை. ஜங்கரநேசனின் 'தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்' சம பங்காளிகள் என்ற எண்ணக்கரு ஏற்காத கூட்டில் தனது கட்சி சேர விரும்ப வில்லை எனக் கூறிவிட்டது. அனந்தியின் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் பங்காளிக் கட்சிகளிடையே கலந்துரையாடாமல் முடிவினை மட்டும் அறிவிக்கும் கூட்டில் சேர எனது கட்சி விரும்பவில்லை எனக் கூறியிருக்கிறது. சிறீகாந்தாவின் தமிழ்த்தேசியக் கட்சியும் சமத்துவமற்ற கூட்டிற்கு எதிர்ப்புத்தெரிவித்துள்ளது. எஞ்சியவை விக்கினேஸ்வரனின் கட்சியும், சுரேசின் கட்சியும் தான். அங்கும் சுரேசின் கட்சியின் பெயரையும், சின்னத்தையும் பாவிப்பது தொடர்பான நிபந்தனைகளில் உடன்பாடு ஏற்படாததினால் குழப்பம் தொடருவதாக் கூறப்படுகின்றது.

கஜேந்திரகுமார் தலைமையி லான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அணி சேர்க்கைபற்றி இதுவரை எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. தேர்தலுக்கான வேலைத்திட்டங்களை தனித்தே மேற்கொள்கின்றது. "மாற்றுத்தரப்பு தாங்கள் தான் " என்பதை நிரூபிப்பதில் அக்கட்சியினர் உறுதியாக நிற்கின்றனர். எனி னும் உள்ளூர்த் தலைவர்களை வளர்க்கும் வகையில் கட்சியின் நிறுவனக் கட்டமைப்புக்களை சீராக்காமை, அரசியல் என்பது மூலோபாயத்தை மட்டுமல்ல தந்திரோபாயத்தையும் உள்ளடக்கியது. என்பதை சிறிது கூட கவனத்தில் எடுக்காமை, யதார்த்தத்திற்கு பொருந்தாத தூய்மைவாதம் போன்ற குறைபாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசிய பரப்பிற்கு வெளியேயும் நான்கு அணிகள் களத்தில் இறங்கியுள்ளன. ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மகிந்தரின் பொதுஜன முன்னணி, சந்திரகுமாரின் கட்சி என்பனவே அவையாகும். இவற்றில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி தான் சற்று பலமான நிலையில் உள்ளது. அக்கட்சிக்கு ஒரு ஆசனம் நிச்சயமாக கிடைக்கும் என்பதால் இரண்டாவது ஆசனத்தை பெறுவதற்காக கடும் முயற்சியில் இறங்கியுள்ளது. தேர்தல் வேலைகளும் மும்மரமாக ஆரம்பிக்கப்பட்டு விட்டன. உள்ளூர் தலைவர்களும் சுறுசுறுப்பாக செயற்படத் தொடங்கியுள்ளனர். சந்திரகுமாரின் கட்சியும் தமது கட்சி எவற்றிற்கும் சளைத்தது அல்ல என நிரூபிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. அடித்தள மக்கள் மத்தியில் தங்களது பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. இந்த ஏழு கட்சிகளுக்கு வெளியே பல குழுக்கள் சுயேட்சையாக இறங்குவதற்கும் முயற்சிகளைச் செய்து வருகின்றன. ஜனநாயகப்போராளிகள் கட்சி ஒரு கூட்டணியாக களம் இறங்க உள்ளது. செந்திவேல் தலை மையிலான மாக்சீச லெனி னிச கட்சியும் சுயேட்சையாக போட்டியிடும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. சாதி வாதத்தை அதிகளவில் அது தூக்க முயல்கின்றது. அடிநிலை மக்கள் மத்தியில் செயற்படும் பல்வேறு பொது அமைப்புக்களுடனும் பேசி வருகின்றது வரதராஜப்பெருமாள் தலைமையிலான சமூக ஜனநாயகக்கட்சி கூட்டணி அமைக்கக் கட்சிகளைத் தேடுகின்றது. எதுவும் அகப்படாவிட்டால் தனித்துப் போட்டியிடும் நிலையிலேயே உள்ளது. ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் களத்தில் இறங்கும். கூட்டாக போட்டியிடுமா? என்பது இன்னமும் தெளிவாகவில்லை. தாய்நிலம் மக்கள் கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாகப் போவதாகவும் செய்திகள்' வருகின்றன. வேறும் பல குழுக்கள் சுயேட்சையாகப் போட்டியிடலாம். அனந்தியும், ஐங்கரநேசனும், சிறீகாந்தாவும் என்ன முடிவுகளை எடுக்கப் போகின்றனர் என்பது இன்னமும் உறுதியாகவில்லை அனந்தி பாராளுமன்றத் தேர்தலை விட மாகாணசபைத் தேர்தலிலேயே அக்கறையாக இருக்கின்றார்

கிழக்கில் நிலைமை சற்று வேறுபடலாம். அங்கு கூட்டமைப்புக்கும் பிள்ளையானின் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்குமே போட்டி அதிகமாக வரலாம். பிள்ளையானின் கட்சி உதிரிக்கட்சிகளையெல்லாம் தன்னுடன் இணைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. கிழக்குத் தமிழர் ஒன்றியம் இது விடயம் தொடர்பாக முழுமை யான ஈடுபாட்டை காட்டுகின்றது. வியாழேந்திரன் அக் கூட்டணியில் இணைந்தால் அதற்குச் சற்று வலிமையைக் கொடுக்கலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் இதன் செல்வாக்கு அதிகமாக இருக்கும் எனலாம். திருகோண-மலை மாவட்டத்திலும், அம்பாறை மாவட்டத்திலும் செல்வாக்கினைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. அம் மாவட்டங்களில் கிடைக்க இருக்கும் ஒரு ஆசன-மும் இல்லாமல் போகலாம் என்ற அச்சம் தமிழ் மக்களிடம் இருப்பதே இதற்கு காரணமாகும். திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து தமிழ்த்தரப்பும் ஒரு குடையின் கீழ் போட்டியிட்டு முதலா வது நிலைக்கு வந்தால் போனஸ் ஆசனத்தையும் பெறக்கூடிய நிலை உருவாகும். 2004 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் இந்த நிலை உருவாகவில்லை

வரலாற்றில் ஒரு போதும் நிகழாத வகையில் தமிழ்த் தேசிய வாக்குகள் இந்தத் தடவை பலவாகச் சிதறும். இது ஏனைய தரப்புக்கள் தமிழ்த் தாயகத்தில் காலூன்றுவதற்கான நிலையையே உருவாக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் - 01, வன்னியில் - 01, திருகோண-மலையில் -01,மட்டக்களப்பில் - 01, தேசியப்பட்டியலில் - 01 என 05 ஆசனங்களைத் தமிழ்த் தேசியப்பரப்பு இந்தத் தடவை இழக்கலாம். தமிழ்த் தேசியக்கட்சிகள் ஒரே அணியாக போட்டியிட்டால் யாழ்ப்பாணம் - 06, வன்னி -05, திருகோணமலை - 02, மட்டக்களப்பு -04,அம்பாறை - 01, தேசியப்பட்டியல் - 02 என மொத்தம் 20 ஆசனங்களை பெற்றுக்கொள்ளக்கூடியநிலை ஏற்படும்.

இந்த வாக்குச் சிதறி-னால் பலத்த அடியை வாங்கப் போவது கூட்டமைப்புத்தான். யாழ் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களுக்கு மேல் அதற்கு கிடைப்பது கடினம். சிறீதரனும், சித்தார்த்தனும், சுமந்திரனும் வெற்றி பெறலாம். இந்த மூன்றுக்குள் எவ்வாறாவது தான் வர வேண்டும் என்பதற்காக சுமந்திரன் கடுமையாக உழைக்கின்றார். மாவட்டத்திலுள்ள சனசமூகநிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயல்கின்றார். மாவை உட்பட ஏனையவர்கள் தோல்வியடையும் நிலையே உண்டு. இதனைத் தவிர்ப்பதற்காக மாவை போட்டியிடாமல் தேசியப் பட்டியலில் ஆசனத்தைப் பெற விரும்புவதாகவும் ஒரு தகவல். இந்தத்தடவை யாழ் மாவட்டத்தில் கூட்டமைப்பு - 03, தமிழ் மக்கள் கூட்டணி - 01, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 01, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி - 01 என்றே ஆசனங்கள் கிடைக்கலாம். மீதிவாக்கில் கிடைக்கும் ஆசனம் விஜயகலாவிற்கோ, அங்கஜன் இராமநாதனுக்கோ, சந்திரகுமாருக்கோ செல்லலாம். வன்னியில் கூட்டமைப்புக்கு - 03, சிவசக்தி ஆனந்தனுக்கு - 01, முஸ்லீம் தரப்பு - 02 என ஆசனங்கள் செல்லலாம். சிங்களத்தரப்பு ஒரு ஆசனத்தை அங்கு பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வடக்கில் அமுலாக இருக்கும் மேற்கூறிய சூத்திரம் முன்னர் கூறியது போல கிழக்கில் நிகழப் போவதில்லை. கூட்டமைப்புக்குவெளியே பிள்ளையானின் கட்சிக்கு மட்டும் ஒரு ஆசனம் அதுவும் மட்டக்களப்பில் கிடைக்கலாம். ஏனையவை கூட்டமைப்புக்குச் செல்லவே வாய்ப்புக்கள் உண்டு. மட்டக்களப்பில் யார் வெல்வார்கள் என உறுதியாகக் கூறுவது கடினம். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் அங்கு நல்ல பெயர் கிடையாது. புதுமுகங்கள் வெல்லக் கூடிய நிலை ஏற்படலாம். தமிழரசுக்கட்சியின் செயலாளர் துரைராசசிங்கம் களம் இறங்கப் போவதாகவும் ஒரு தகவல். மாகாண அமைச்சராக இருந்த காலத்தில் அவர் பற்றி நிறைய விமர்சனங்கள் உண்டு. மனித உரிமை வாதியான பெண் ஒருவர் இறக்கப்படலாம் என்றும் செய்திகள் வருகின்றன. அவர் வெற்றி பெறலாம். திருகோண-மலை மாவட்டத்தில் சம்பந்தன் போட்டியிடப் போவதில்லை என அறிவிப்பு வந்தது. கனடா வில் இருந்து வருகை தந்த குகதாஸ் என்பவரையே சம்பந்தன் விரும்புவதாகவும் தகவல்கள் வருகின்றன. குகதாஸ் ஜனாதிபதி செயலணியின் கிழக்குமாகாண இணைப்பாளராக சம்பந்தனால் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தார். எனி னும் திருகோணமலையின் மூத்த உறுப்பினர்கள் குகதாசை பெரியளவிற்கு விரும்பவில்லை என்றும் கதைகள் வருகின்றன. குறிப்பாக முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் தண்டாயுதபாணியும் அவரது அணியினரும் விரும்பவில்லை என்றும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக சம்பந்தனையே வேட்பாளராக நிற்குமாறு வலியுறுத்துவதாகவும் செய்திகள் வருகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு வேறு தெரிவு இல்லாததினால் சம்பந்தன் வெற்றி.பெறுவார். ஆனால் வாக்குகள் குறையலாம்.

அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் மீது கடுமையான விமர்சனங்கள் உள்ளன. கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தரம் உயர்த்துதல் விடயத்தில் போதியளவு அவர் செயற்படவில்லை என்ற அதிருப்தி பரவலாக உள்ளது. இம்மாவட்டத்தில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகம். தமிழ்ப் பிரதேசங்களும் சிதறியே உள்ளன. துறை நீலா வணை தொடக்கம், பொத்துவில் வரையான நீண்ட பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே கவனிக்க வேண்டும். தமிழ் முஸ்லீம் முரண்பாடுகளை இலாவகமாக கையாள வேண்டும். இந்தத் தகைமை தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் இருந்ததில்லை. இதனால் ஒவ்வொரு தடவையும் தமிழ் மக்கள் புதியவர்களையே தெரிவு செய்கின்றனர். இந்தத் தடவையும் புதியவர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

மொத்தத்தில் தமிழ்த் தேசிய அரசியலுக்கு இக்காலம் ஒரு கெட்ட காலம். சனி மாற்றம் நன்றாக இல்லையோ தெரியவில்லை. தென் இலங்கையில் பேரினவாதம் பாசிசமாக வடிவெடுக்கின்ற நிலையிலும், சர்வதேச அரசி யலைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்ற நிலை யிலும், தமிழ்த் தேசிய அரசியல் பலவீனப்படுவது கவலைக்குரியது. கூட்டமைப்பும், மாற்று அரசி யலை முன்னெடுத்தவர்களும் இப்போக்கிற்கு பொறுப்புச் சொல்லியே ஆக வேண்டும்.

**'கண்ணீர் விட்டோ வளர்த்தோம்'**

**சர்வேசா!**

**கருகத்திருவுளமோ...**



# உடையுமா கூட்டமைப்பு?

தமிழ் கட்சிகளுக்குள் அடிக்கடி பிரளயம் உண்டாவது சகஜம். அப்படிப் பிரளயம் எதுவும் நடக்காவிட்டால் அது தமிழ் கட்சியும் அல்ல, தமிழருக்கான கட்சியும் அல்ல என்றது, தமிழர் அரசியல் பண்பாட்டை சற்று ஆராய்ந்தவர்களுக்கு நன்கு தெரிந்த விடயம். ஆனால் பெரும்பாலும் இவ்வாறு நடைபெறும் கட்சிச் சண்டைகளும், முரண்பாடுகளும் சந்திக்கு வருவது இல்லை. வந்தாலும் தமிழ் மக்கள் அதனை இறுக்கமாகப் பார்ப்பதுமில்லை. ஏனெனில் நான் மேற்கூறிய விடயமே காரணம் எனலாம். எனவே, அவை கட்சியைப் பாதிப்பதாகவும் இருப்பதில்லை. ஆனால் கடந்த வாரம் நடைபெற்ற விடயங்களை, நாம் முன்னர் குறிப்பிட்டதைப் போல சாதாரணமானதாக எண்ணிக் கடந்து விட முடியாது. ஏனெனில் தேர்தல் அறிவிப்பு நெருங்க நெருங்க இந்த விடயம் இன்னும் காராசாரமாகச் சூடு பிடிக்கலாம். ஏனெனில், தமிழர் கூட்டமைப்பைப் பொறுத்தவரை ஆசனப் பங்கீடு என்பது ஒரு சிக்கலுக்குள் இருக்கின்ற விடயம். அது மட்டுமல்ல, கட்சிப் பேச்சாளராக இருக்கின்ற சட்டத்தரணி மதியாபரணம் சுமந்திரன் தொடர்பாகக் கூட்டுக்குள் எழுந்திருக்கும் சர்ச்சைக்குரிய விடயங்களும் காரணம் என நடப்புகள் தெரிவிக்கின்றன.

தமிழர் கூட்டமைப்புக்குள் இருக்கின்ற வயதான பெரும்பான்மைக் கட்சியான தமிழரசுக் கட்சிக்குரிய பங்கீட்டுக்கான ஆட்களைத் தெரிவதென்ற விடயத்தில் பெருத்த இழுபறி நிலவுவதாகத் தெரிகிறது. மொத்தமாக உள்ள ஆசனங்களில் சித்தார்த்தனுக்கும், அடைக்கலம் செல்வநாதனுக்கும் ஒதுக்கப்படும் இடங்கள் போக, மிகுதியைத் தமிழரசுக் கட்சிக்குள் பங்கிடவேண்டும். ஆனால், அண்மைக்காலமாகத் தமிழ் கூட்டமைப்புக்குள் வந்து தொற்றிக் கொண்ட சுமந்திரன் தன்னைக் கட்சிக்குள் பலப்படுத்த, தனக்குரிய அணி ஒன்றை உருவாக்குவதாக ஒரு குற்றச்சாட்டும் உண்டு. அதில் அவர் பழைய முகங்கள் இல்லாது, மக்கள் செல்வாக்குப் பெற்றவர்கள் எனத் தான் கருதுகின்ற தனது "செல்லக் குட்டிகளை" முன்னிலைக்குக் கொண்டு வந்து, தனக்குரிய ஒரு அணியை, பழையவர்களில் தான் தங்கி நில்லாது அமைப்பதிலே தீவிரமாக இருப்பது குறித்த கட்சியின் உள் வட்டாரத்தில் அடிபடும் பேச்சுவார்த்தைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அதன் முதற்கட்டமாகப் பலத்த போட்டிகளுக்கிடையே ஆனோல்ட்டை யாழ்.மாநகர முதல்வராகக் கொண்டு வந்தது. யாழ். மாநகரத்தைப் பரிபாலனம் செய்ய தனக்கு விசுவாசமான ஒருவரை முதல்வராக்கியதில் அவர் மாநகர் பற்றியோ, மக்கள் பற்றியோ சிந்தித்துச் செயற்பட்டதாக இல்லை. அத்துறைப் புலமையற்ற ஒரு-வரை ( அரசியல் அனுபவ ஆளுமையற்ற), அதுவும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய ஒருவரை ஒரு நிர்வாக அலகுக்குள் கொண்டு வருவதில், அவர் கவனம் செலுத்தி இருக்க வேண்டும்! என்றும் அத்தகையதொரு துறை சார்ந்த புலமையற்ற ஒருவரின் பிரவேசத்தாலேயே இன்னும் பல நிர்வாகச் சீரழிவுகள் தொடர்கின்றன. சரியான நெறிமுறையற்ற கழிவகற்றும் பணி, நகரைச் சுற்றித் தேங்கிக் கிடக்கும் சாக்கடை, போக்குவரத்து நெரிசல், இடையே கைவிடப்பட்ட தொலைத் தொடர்புக் கோபுரச் செயற்பாடுகள் என அவர் மீது வைக்கும் புகார்கள் எனப் பலவற்றைச் சுட்டிக்காட்டுகின்றனர் மாநகர மக்கள்.

தற்போது சுமந்திரன் அவர்கள் ஆனோல்ட் மற்றும் வட மாகாண உறுப்பினராக இருந்த சயந்தன் ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருப்பதாகப் பல செய்திகள் உண்டு. அந்தச் செய்தி உண்மையானால் அவர்களுக்குப் பொதுத் தேர்தலில் வேட்பாளராக்குவதற்கு ஆசனங்களை ஒதுக்க வேண்டும் எனில், ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற யாராவது இருவரை இடைநிறுத்த வேண்டும். அங்ஙனம் இடைநிறுத்திப் பெறும் வெற்றிடங்கள் மூலமே புதியவர்களை நிரப்பலாம். இதற்கு ஏதுவாக முதலாவதாகச் சுமந்திரனால் குறிவைக்கப்பட்டவர் மாவை என்றும், அது பிசு பிசுத்துப் போன தாகவும் இணையச் செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் குறி தவறியதும் பின்னர் அவர் கவனம் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள வன்னியைச் சேர்ந்த ஸ்ரீதரனிலும், உதயன் குழுமத் தலைவர் சரவணபவன் மீதும் விழுந்திருப்பதாகவும், இதனை அவர் மாவை சேனாதிராசாவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் ஊடகச் செய்திகள் சொல்லுகின்றன.


ஆனால், கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாட்டின் றோட்டில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின், யாழ். மாவட்டத் தொகுதிக் கிளைக் கூட்டத்தில் இது தொடர்பாகப் பெரும் சர்ச்சையொன்று கிளம்பியிருந்ததாகவும், கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் உரையாற்றியபோது "இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தனிமனிதர்களின் நடவடிக்கைகளாலேயே கட்சி சீரழிவைச் சந்தித்து வருகிறது. எனவே எதிர்வரும் காலங்களில் தனிமனிதர்கள் எடுக்கும் முடிவுகளுக்கு ஆதரவு கொடுக்க முடியாது" எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து அதுவரை தமக்குள் உட் புகைந்து கிடந்ததை அங்குள்ளவர்கள் கொட்டித் தீர்த்ததாகவும் செய்திகள் உண்டு. கட்சிக்கு என்று ஒரு தெரிவுக் குழு உண்டு. அதுவே தேர்தல் வேட்பாளர்களைத் தீர்மானிக்க வேண்டும் எனவும் அதுவே ஆசன ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கடுமையாகத் தமது கருத்தைப் பலர் முன்வைத்ததைத் தொடர்ந்து தெரிவுக் குழுவே அதனைத் தீர்மானிக்க வேண்டும் எனவும், தொகுதிக் கூட்டங்களை நடத்தி அதன் மூலம் அவர்களது அபிப்பிராயங்களை அறிந்து கொண்டு மேற்கொண்டு நடவடிக்கையை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் சொல்லுகின்றன.

அதற்கிடையில் "மாற்று அணி உருவாக்கம் தமிழர்களுக்கு எதிரான சதி" எனச் சுமந்திரன் கடுமையாகச் சாடி இருப்பதாகவும் ஒரு செய்தி உண்டு. மாற்று அணி என்ற விடயத்தில் சுமந்திரன் ஏன் இவ்வளவு கோபப்பட வேண்டும்?. மாற்று அணி எனத் தமிழ் மக்கள் தானே வருவார்கள். வாறவர்கள் வரட்டும். அவர்கள் தமக்குரியவர்களா? இல்லையா என மக்கள் தீர்மானிக்கட்டும். மக்களை அறிவி லிகள் என்று எண்ணவேண்டாம். கடந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டுப் பல தேசியம் சார்ந்த விடயங்களைப் புறந்தள்ளிய போது மக்கள் தாமாகக் கிளர்ந்தெழுந்து பல போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றனர். இவர்கள் தமக்காகச் செய்வார்கள், தமக்கானதைத் தேடித்தருவார்கள் என்று எண்ணி மக்கள் மௌனமாக இருப்பதை வைத்துக் கொண்டு மக்களுக்கு அரசியல் தெரியாது என்று சுமந்திரன் தீர்மானிப்பார் என்றால் அங்கே தான் அவர் அரசியல் ஞானம் விடைபெறப் போகிறது." என வாசகர் ஒருவர் கருத்து சொல்கிறார்.

அது மட்டுமல்ல மேற்சொன்ன விடயத்தை சுமந்திரன் வெளிப்படுத்தியிருக்கும் விதமும் அவ்வளவு ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. கூட்டமைப்பில் இருந்தவர்கள் நொண்டிச் சாட்டுக்களைச் சொல்வதை விட்டு மீண்டும் வந்து கூட்டமைப்பில் சேருமாறு அழைப்பதில் இருந்து, அவர் ஏதோ ஒன்றை எண்ணிக் கிலேசப்படுவது தெரிகிறது. அதனை அவர் பகிரங்கமாகவே சொல்லியும் இருக்கிறார். அதாவது மாற்றுத் தலைமை எங்களுக்குத் தேவையில்லை. அது வரக்கூடாது. அதுவும் விசேடமாக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தலைமையில் இது வருமானால் அது படுபாதகமானது. அது அவர் வேலை. அவர் உருவாக்க விரும்பினால் உருவாக்கட்டும். ஆனால் பாதிக்கப்படப்போவது தமிழ் மக்களே. கூட்டமைப்புக்கு அது தாக்கத்தைச் செலுத்தாது. மக்கள் மத்தியில் சிறு குழப்பத்தை ஏற்படுத்தும். அவ்வளவுதான். என்று அவர் முன்னுக்குப் பின் முரணானவைகளைச் சொல்லிப் புலம்புவதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஒருபுறம் முதலமைச்சரின் நடவடிக்கை கூட்டமைப்பைத் தாக்காது என்கிறார். மக்களைப் பாதிக்கும் என்று வேறு சுட்டிக் காட்டுகிறார். எனவே கூட்டமைப்பென்பது என்ன? மக்கள் என்பது யார்? மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சியே கூட்டமைப்பு என்று வேறு சொல்லிக் கொள்ளுகிறார். மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள் என்றும் கவலைப்படுகிறார். அப்போ மக்களை அது பாதித்தால் கூட்டமைப்பை அது பாதிக்காதா?

மக்களையும், கட்சியையும் பற்றிக் கவலைப்படுகின்ற சுமந்திரன் முதலில் தன் மீது கட்சிக்குள்ளும், வெளியிலும் வைக்கப்படும் விமர்சனங்களை முற்றாகக் களைந்தெறிந்துவிட்டு பிற கட்சிகள் பற்றியும், மாற்றுத் தலைமையை ஏற்படுத்துவார் என்று சொல்லும் முன்னாள் முதலமைச்சர் மீது வைக்கும் விமர்சனங்களையும் முன்வைக்கலாம் என்பதே மக்கள் எதிர்பார்ப்பு. பிறரை அயோக்கியன் என்று சொல்லும் ஒருவர் முதலில் பார்க்க வேண்டியது தான் எந்த அளவுக்கு யோக்கியானாக இருக்கிறேன் என்பதையே. அதைவிட்டுப் பிறர் பற்றிப் பேசுவதும், பிறர் மீது விமர்சனங்களை முன்வைப்பதுமான. செய்கைகள் தன்னை நோக்கித் திரும்புவதற்குச் சந்தர்பங்களும் உண்டு என்று சுமந்திரன் உணரவேண்டும். சுமந்திரனின் சேவையை வேணுமென்றால் கட்சிக்குள் இருக்கின்ற ஒரு சில உறுப்பினர்கள் தேவை என்று எண்ணலாம்.பாராட்டலாம். ஆனால் மக்கள் அப்படி எண்ணவில்லை என்பதைத் தற்போது பரவலாக அவருக்கெதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கூடாக அறியலாம்.




- லம்போதரன் -


கூட்டமைப்புக்குள் இருந்த கூட்டாளிக் கட்சியான ரெலோவும், விந்தன் கனகரட்ணம் தொடர்பானதொரு நெருக்கடியை எதிர் நோக்குவதாகவும் அறியக் கிடக்கிறது. மற்றைய கட்சியான சித்தார்த்தனின் கட்சியும் ஒரு கட்டமைப்பாக இல்லை. அவர் இன்னும் தர்மலிங்கம் எம்.பி என்ற பதாகையின் கீழ்செயற்பட்டு வருகி றார். இன்னும் தர்மலிங்கம் என்ற பெயருக்கே மக்கள் வாக்களிக்கிறார்கள். தர்மலிங்கம் என்ற பெயரை எப்பொழுது மக்கள் மறக்கின்றனரோ, அன்றே அவர் கட்சியும் அஸ்தமனப்பட்டுவிடலாம். எனவே இறுதியாகக் கூட்டமைப்பு, கால் உடைந்த நாற்காலிபோல தமிழரசுக் கட்சி என்ற ஒற்றைக் காலிலேயே நிற்க வேண்டி வரும். தமிழரசுக் கட்சியும் தனிமனித செயற்பாட்டால் தகர்த்தெறியப்படுமானால் அவர்களை நம்பி இருக்கின்ற வாக்காளர்களுக்குரிய மாற்றாக வரப்போகும் மாற்றுத் தலைமையே கைகொடுக்கலாம்?

# விக்கினேஸ்வரனின் தமிழ்நாட்டு உலாவும், அறிக்கையும்

## 'ஒரு பார்வை'

- செம்பருத்தி -

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஓய்வு பெற்ற நீதிபதியு- மான விக்கினேஸ்வரன் அண்மையில் தமிழ் நாட்டிற்குச் சென்று ஒரு கூட்டத்தில் உரையாற்றியுள்ளார். உலக பாரம்பரியத் தமிழ் மக்கள் என்ற நிறுவனம் நடத்திய விழாவிலேயே அவர் உரையாற்றியுள்ளார். அதில் இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கைத் தமிழரின் பாதுகாப்பே உறுது ணையாக இருக்கும் என்று பேசியுள்ளார். அது அவருடைய நம்பிக்கையான கருத்தாகவுமிருக்கலாம். அதன் பின்னர் அவர் இரண்டு பேரைச் சந்தித்துவிட்டு நாடு திரும்பியுள்ளார் . அவர் அங்கு சென்று விட்டு இலங்கைக்குத் திரும்பிய பின்னர் தனது சந்திப்புப் பற்றிய அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இவற்றை




நோக்கும் பொழுது தந்தை செல்வா தமிழ் நாட்டிற்குச் சென்று வந்த பழைய நிகழ்வு தான் நினைவுக்கு வருகிறது.

தந்தை செல்வா பொதுவாக வெளிநாட்டிற்குச் செல்வதை விரும்பாதவர். 1961 இல் தடுப்புக் காவலில் இருந்தபொழுது அவருக்கு ஒரு பெரிய அறுவைச் சிகிச்சை தலையில் செய்யவேண்டியிருந்ததால் இங்கிலாந்துக்குச் சென்று அறுவைச் சிகிச்சை பெற்று வந்தார். அதன் பின்னர் பொதுவுடைமை நாடான ருமேனியாவின் குடியரசுத் தலைவர் இலங்கைக்கு வந்த பொழுது செல்வாவைக் கண்டு அவர்தான் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் அரசியல் தலைவர் என்பதை அறிந்து வியப்படைந்து இந்த அகவையிலும் மெலிந்த உருவமும், ஒட்டிய கன்னங்களும் அவரது உரிமை வேட்கையை காட்டுகிறது. என்று கூறிய ருமேனிய அதிபர் தனது நாட்டுக்கு வருமாறு செல்வாவிற்கு அழைப்பு விடுத்தார் . ஆனால் செல்வா போக மறுத்து விட்டார். அதன் பின்னர் தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்களுக்கு ஈழத் தமிழரின் உண்மை நிலைமையை விளக்க வேண்டும மென்று பலர் செல்வாவிடம் கூறி அங்கு செல்லுமாறு கேட்டனர். இதில் முக்கிய பங்கு ஆற்றியவர் மாமனிதர் இராசரத்தினம் ஆவார். இந்தியாவில் செல்வாவின் சந்திப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறியதுடன் ஏற்ற ஒழுங்குகளையும் அவர் கவனித்தார்.தந்தை செல்வா தமிழ் நாட்டிற்கு அப்பொழுது தான் சென்றிருந்தார்.


தந்தை செல்வா தமிழ் நாட்டிற்குச் சென்று அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்தார். ஆளும் கட்சி எதிர்க்கட்சி தேர்தல் அரசியலில் இல்லாத தலைவர்கள் என்று பலரையும் சந்தித்து ஈழத்து தமிழர்களின் நிலையை விளக்கிக் கூறினார். அங்கே உள்ள கட்சிகளில் சில கட்சிகள் தமிழரசுக்கட்சியின் மேலும் செல்வாவின் மேலும் அதிகளவு பற்றுக்கொண்டவர்களாக இருந்தும் செல்வா அவர்களை மாத்திரம் சந்தித்து விட்டுத் திரும்பலாம் என்ற எண்ணம் சிறிது கூட இல்லாமல் அனைவரையும் சமமாகப் பாவித்து சகலரையும் சந்தித்து ஈழத் தமிழினம் எதிர்நோக்கும் ஆபத்துகளை விளக்கிக் கூறினார். ஆனால் இதற்குப் பின்னர் தமிழகம் சென்ற அரசியல்வாதிகள் சில கட்சிகளை சார்ந்தவர்களை மட்டுமே சந்தித்து வந்தனர் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் தான் பதவி வகித்த காலங்களில் மனித உரிமை மாநாடுகளுக்கோ ஜெனிவாவிற்கோச் சென்று எவ்வளவோ பணியாற்றியிருக்கலாம். ஆனால் அங்கு செல்லாமல் இலங்கையிலும் இருக்காமல் ஓய்வு எடுப்பதற்காகத் தமிழ் நாட்டிற்குத் தனிப்பட்ட பயணங்களை மேற்கொண்டுள்ளார். அப்பொழுது அவர் அங்கு சென்று கொலை வழக்கில் சிறையிலிருந்த பிரேமானந்தாவின் ஆச்சிரமத்தில் தங்கிவிட்டு வருவார். ஆனால் இம்முறை சென்னைக்குச் சென்ற



விக்கினேஸ்வரன் அந்த விழா வில் பங்குபற்றிவிட்டு முதலில் நடிகர் ரஜனி காந்தையும் பின்னர் பாரதிய சனதாக்கட்சியின் முன்னாள் தமிழ் மாநிலத் தலைவரும் இந்நாள் ஆந்திர ஆளுநருமான தமிழிசை சௌந்தரராசனையும் சந்தித்துவிட்டு நாடு திரும்பியுள்ளார். இது ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்க அமைய ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்புகளே ஆகும். இது தன்னுடைய தனிப்பட்ட சந்திப்பு என்று காட்ட முயற்சிக்கிறார் அவர். ரஜனியை ஒரு நடிகராகவே சந்தித்ததாகவும் இதில் எந்த அரசியலும் கலந்திருக்கவில்லை என்று கூறியுள்ளார், விக்கினேஸ்வரன். அவருக்குப் பிடித்த நடிகர் அவரது மகன்மாருக்குப் பிடித்த நடிகர் என்றும் கூறியுள்ளார். ஆனால், மருமகள்மாருக்கு ரஜனியைப் பிடிக்குமா என்று கூறவில்லை. அவர்,





இவ்வாறு அங்கே சந்தித்துவிட்டுத் திரும்பியவர் தான் ரஜனியைச் சந்தித்தது பற்றி ஒரு பக்க அறிக்கையும் விட்டுள்ளார், ஆனால், அரசியல்வாதியான தமிழிசை யைச் சந்தித்தது பற்றி ஒரு வரிகூட அவ்வறிக்கையில் கூறாது தவிர்த்து விட்டார். இது தான் இங்கே புதைந்துள்ள மர்மமாகும். ரஜனிகாந் ஒரு நடிகர் என்றாலும் அரசியலுக்கு வருவதாகக் கூறிக் கொண்டிருக்கும் நடிகர்.தமிழ் நாட்டில் ஜெயலலிதாவோ கருணாநிதியோ இல்லாத நிலையில் ரஜனிகாந் மூலம் பாரதிய சனதாக்கட்சி காலூன்ற பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆன்மீக அரசியல்வாதியாகத் தான் வரப்போவதாக ரஜனிகாந் கூறிக்கொள்வதிலிருந்து அவர் பயணிக்க இருப்பது பாரதிய சனதாக்கட்சியின் குதிரையில் தான் என்பது வெளிப்படையாக தெரிகிறது. இந்நிலையில் தான், விக்கினேஸ்வரன் ரஜனிகாந்தையும் தமிழிசையையும் சந்தித்துள்ளார். அவ்வாறு சந்தித்தவர் ரஜனிகாந்துக்கு புகழ்மாலை போடுகிறார், நற்சான்றிதழ் வழங்குகிறார். பந்தா இல்லாதவர் என்கிறார், எளிமையானவர் என்கிறார். தான் அவரது வீட்டிற்குச் சென்றதும் ஓடிவந்து மகிழ்ந்து கதவைத் திறந்து அழைத்தமை, பின்னர் திரும்பும்போது மகிழ்ந்துவரை வந்து கதவைத் திறந்து தன்னை ஏற்றி அனுப்பியவர் . இது அவரின் பந்தா இல்லாத தன்மையையும் எளிமையையும் காட்டுவதாகக் அறிக்கையில் கூறிப் புகழ்கிறார். காஜா புயல் வீசி மக்களின் வாழ்வை முற்றாக அழித்து விட்டது.மூன்று ஆண்டுகள் கடந்தும் அம்மக்கள் இயல்பு நிலைக்கு இன்னமும் வரவில்லை. ஆனால், இம்மக்களின் துன்பம் இந்த ரஜனிக்கு தெரியாது. வரலாறு காணாத வெள்ளம் சென்னையைப் புரட்டிப்போட்டது. சில இலட்சங்கள் பெற்று நடிக்கும் நடிகர்கள் தங்கள் பங்காகக் கோடி ரூபாய் கொடுத்தார்கள். வெள்ளத்தில் சிக்கியவர்களிடம் சென்று உணவு , உடை என்பனவற்றைக் கொடுத்து இருபத்தி நாலு மணி நேரமும் உழைத்து அவர்களைக் காப்பாற்றிப் பிற இடங்களுக்கு அழைத்து வந்தார்கள். இதைப்பற்றி எந்தக் கவலை யும் இல்லாமல் இருந்துவிட்டுப் பல கோடி சம்பளம் பெறும் நடிகர் ஆகப் பத்துலட்சம் காசு மட்டுமே கொடுத்தார். ஆனால், அவரது ரசிகர்களோ பத்துக்கோடி காசு என்றும் நூறுகோடி என்றும் மிகவும் கேவலமாகப் பரப்புரை செய்தார்கள். ஆனால் மற்ற குறைந்த வருமானம் பெறும் நடிகர்கள் நடிகைகள் கொடுத்ததோ ஏராளம். இதெல்லாம் தெரியாமல் ரஜனி எளிமை யானவர் என்று விக்கினேஸ்வரன் அறிக்கை விட்டு மகிழ்ந்துள்ளார்.

இது மட்டுமல்ல சூரியா, கார்த்தி போன்றவர்கள் 'அகரம்' என்ற நிறுவனம் மூலம் ஏழை மாணவர்களுக்கு உயர் கல்வி பெற்றுக்கொடுத்து, பொறியாளர்களாகவும் மருத்துவர்களாகவும் ஆக்கி மகிழ்கிறார்கள். இலங்கைப் பிள்ளைகளும் இவ்வாறு பலன்களை அவர்கள் மூலம் பெறுகின்றனர். ஆனால், ரஜனியின் மனைவி நடத்தும் பள்ளியில் அறவிடப்படுவதோ உயர்ந்த கட்டணம். ஆனால் அவரால் அக்கட்டத்திற்கான வாடகை கொடுக்க முடியாமல் அது வழக்கு மன்றம் வரை சென்றுள்ளது. இந்நிலையில் ரஜனிகாந்தைப் புகழ்ந்து பேசுவது ஏன் என்பது விக்கினேஸ்வரனுக்குத் தான் தெரிந்த உண்மையாகும். மக்களுக்கு நன்கு தெரியும் ரஜனிகாந்தின் உண்மையான முகம்.

**தன்னைத் தாழ்த்திக் கொண்ட விக்கினேஸ்வரன்**

இவர் இத்துடன் நில்லாது அதற்கும் மேலே சென்று ஒரு கருத்தைத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 'போயஸ் தோட்டம்' என்றால் உலகின் மூலை முடுக்கெல்லாம் தெரிந்த பெயர் ஜெயலலிதா என்பது மட்டுமே. வேறு யார் எந்தக் கொம்பன் அங்கு வசித்தாலும் அவர்களை எவரும் நினைப்பதில்லை. அந்தளவுக்குப் பெயர் பெற்றவர் ஜெயலலிதா. அவருடைய அரசியல் கருத்துகளை இங்கு தவிர்த்து விட்டுப் பார்க்க வேண்டும். அந்தப் பெண்மணி இறந்து சில ஆண்டுகளும் போய்விட்டது. ஆனால் விக்கினேஸ்வரன் தனது அறிக்கையில் அவரைப்பற்றிக் குறிப்பிட்டுத் தனது தரத்தை மிகவும் தாழ்த்தியுள்ளார். அவர் ரஜனியைப் பந்தா இல்லாதவர் எளிமையானவர் என்று கூறிவிட்டு அடுத்த வீட்டுக்காரியிடம் இது எதுவுமில்லை என்கிறார். இவர் ஜே யின் வீட்டுக்குச் சென்றபொழுது அவர் வந்து மகிழ்ந்து கதவைத் திறந்து விடவில்லையா? ஏன் இந்தப் பிதற்றல் ரஜனியின் வீட்டிற்கு ஒருவர் வருகிறார். அவரது மகிழ்ந்து கதவைத் திறந்து நடிப்பதால் அவர் எளிமையாகி விட்டாரா என்பதுதான் புரியாமல் இருக்கிறது.


ஜெயலலிதாவின் அரசியல் எப்படியும் இருக்கட்டும். ஆனால் அவர் தமிழ் நாட்டின் முதல்வராக ஆறுமுறை பதவி வகித்தவர். இந்தியா முழுவதும் மதிக்கப்படும் தமிழகத்தின் தலைவி என்பது மறுக்கப்பட முடியாததாகும். அவர் ஈழத் தமிழின த்திற்காகச் சட்டசபையில் நிறைவேற்றிய சர்வதேச விசாரணை, தமிழ் மக்களிடம் கருத்துக்கணிப்பு, இனப்படுகொலை போன்ற வற்றை எந்த ஈழத் தமிழனும் மறக்க மாட்டான். இங்கே நடந்தது இனப்படுகொலை தான். சர்வதேச விசாரணை வேண்டும், பொது வாக்கெடுப்பு வேண்டும் என்று கூறுவாரா? அந்த நடிகர். ஜெயலலிதாவின் உடையில் இருக்கும் எளிமையை விக்கினேஸ்வரன் கண்டதில்லையா? அவர் எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் எந்த நகையும் போடாமல் எளிமையாகத் தானே வாழ்ந்தவர். அவரிடம் எளிமை கிடையாது, பந்தா உடையவர் என்றும், அடுத்த வீட்டுக்காரி என்றும் வடமாகாண முதலமைச்சராக இருந்தவர் அறிக்கையில் தெரிவிப்பது வடமாகாண மக்கள் அனைவருக்கும் பெரும் இழுக்காகும்.


இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அங்கு சென்று சந்தித்தவருக்கு அதை மூடி மறைக்க ஒரு வழி தேவைப்பட்டது. அதற்காகவே இறந்துபோன ஒரு தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த பெண்ணை அடுத்த வீட்டுக்காரி என்று மிகவும் தாழ்ந்த, சிந்தனையுடன் விக்கினேஸ்வரன் விளித்து அறிக்கையிட்டது ஓர் பண்பாடற்ற மனநிலையுடையவரின் கருத்தாகவே பார்க்கப்படுகிறது.

இவ்வாறான சிந்தனையும் கருத்துக் களும் கொண்டவர் எவ்வாறு ஒரு அமைப் புக்குத் தலைமை தாங்க முடியும் என்று தான் கேட்கத் தோன்றுகிறது. அடுத்த வீட்டுக் காரி என்ற சொல்லை தமிழ் நாட்டில் வாழும் மக்கள் கேட்டால் தமிழ் நாட்டிற்கு இனிமேல் இவரால் போக முடியுமா? என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

# ரஞ்சன் ராமநாயக்கா ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள்

இலங்கை நாடாளுமன்றம் 1948 முதல் இற்றைவரை எத்தனையோ சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது.காரசாரமான விவாதங்களைக் கண்டிருக்கிறது. முதலில் காலிமுகத் திடலில் இப்பொழுது சனாதிபதிச் செயலக மாக இருக்கும் அழகான கட்டிடமே முன்பு நாடாளுமன்றமாக இருந்தது. ஜே ஆர் காலத்தில் யப்பான் நாடு ஜெயவர்த்தனபுரவில் இப்பொழுதுள்ள நாடாளுமன்றத்தைக் கட்டிக்கொடுத்தது.





இந் நாடாளுமன்றங்களில் தான் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன .குடியேற்றத் திட்டச சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுத் தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டன.சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி, நீதிமன்றங்களில் சிங்களமே நிர்வாக மொழி போன்ற பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுத் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.இவற்றின் பின்னர் இலங்கையை ஒரு குடியரசாக்கும் அரியல் யாப்பு 1970 இல் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.இவ்வரசியல் யாப்புத்தான் சிங்களத்தை அரசியல் யாப்பின் மூலம் நாட்டின் நிரந்தர ஆட்சிமொழிச் சட்டமாகவும், பௌத்தத்தை நாட்டின் மதமாகவும் ஆக்க வழிகோலியது .இதன் பின்னர் 1977 இல் இவ்வரசியல் திட்டத்தைத் தூக்கி எறிந்து விட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறைமையான அரசியல் யாப்புக் கொண்டு வரப்பட்டது.புதிய அரசியல் யாப்பு என்று கூறினாலும் தமிழர்களைப் பொறுத்த மட்டில் சிங்களமே நாட்டின் ஆட்சி மொழி,பௌத்தமே நாட்டின் மதம் என்ற நிலைப்பாட்டில் இருந்து சிறிதளவும் மாற்றம் இல்லாமலே புதிய யாப்பும் சிங்கள பௌத்த மேலாண்மையைக் கொண்டதாக இருந்தது.

எது எப்படியிருந்தபோதிலும் முன்னர் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குரிய பண்பைப் பேணிவந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பாரபட்சமான சட்டங்களைக் கொண்டு வந்திருந்தாலும், நாடாளுமன்றத்தின் மரபு பெருமை என்பன அவ்வளவு மீறப்படாமல் மதிக்கப்பட்டே இருந்தது.அப்பொழுது இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் குறிப்பாக இடதுசாரித் தலைவர்களின் பங்களிப்பு நாடாளுமன்றத்துக்குப் பெருமை தரும் வகையில் நாடாளுமன்ற மரபு கண்ணியம் காக்கப்பட்டு வந்தது என்பதே உண்மை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மதிப்புக்கு உரியவர்களாகவே அங்கு நடந்து கொண்டனர். இரவிரவாக விவாதங்கள் நடந்தபோதிலும், விவாதங்கள் மிகவும் சூடாக இருந்தபொழுதிலும் நாடாளுமன்றப் பண்பு காப்பாற்றப்பட்டே வந்துள்ளது.

1956 இல் தான் முதன் முதலாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டபொழுது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் தரத்திலும் மாற்றம் ஏற்பட்டதாகக் கூறுவர். இவ்வாறு கூறியவர்களில் முக்கியமானவர் அதற்கு முன் பிரதமராக இருந்த சேர். ஜோன் கொத்தலாவலை ஆவார். அவர் ஐம்பத்தாறில் ஏற்பட்ட மாற்றத்தை 'தகுதியில்லாதவர்கள் அலங்கரிக்கும் நாடாளுமன்றம்' என்று பொருள்படும் சொற்களைக் கூறினார்.பண்டாரநாயக்காவின் ஆட்சியில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையே அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.இதே நிலை தான் தொடர்ந்தும் வளர்ந்து வந்து இன்று ரஞ்சன் ராமநாயக்காவால் பெருந்தளவில் அம்பலப்படுத்தப்பட்ட நிலைக்கு வந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் நிலை வினாக்குறியாக்கப்பட்டுள்ளது. இவர்கள் எதற்காக நாடாளுமன்றம் செல்கிறார்கள். மக்கள் பணிக்காகச் செல்கிறார்களா? அல்லது சுய இலாப நோக்குடன் செல்கிறார்களா? என்று கேள்வி எழுகிறது. அந்தப் பதவியை வைத்து என்னவெல்லாம் செய்துள்ளார்கள் என இன்று அவரது உரை மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கா தான் பேசிய சிலருடைய உரையாடல்களைப் பதிவு செய்ததாக முதலில் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுதலையாகினர். அதன் பின்பு நடந்த விசாரணைகளின் மூலம் அவர் நீதிபதிகள், சில சட்டத்தரணிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பலருடன் தொலைபேசியில் உரையாடி நீதிமன்றத் துறையில் தலையீடு செய்ததாக மீண்டும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் தான் அவர் நேற்றுத் திங்கள்கிழமை ( 2020-01-21 ) நாடாளுமன்றத்தில் நீண்ட உரை ஒன்றை ஆற்றியுள்ளார். இவ்வுரையானது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் திறமையையும் நேர்மையையும் பலத்த கேள்விக்குள்ளாக்கி உள்ளது.அவரைக் கைது செய்து அடைத்து விட்டு வழக்குகள் மூலம் அவரில் குற்றம் சுமத்திவிட்டால் அனைத்தும் மறைந்து விடும் என்று இருந்தவர்களுக்கு அவர் நேற்று ஆற்றிய உரை பெரியளவில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று தான் எண்ண முடிகிறது

அவர் இன்றைய பிரதமர் உட்பட ஏராளமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேல் விரலைச் சுட்டிக்காடுகிறார். நாடாளுமன்றத்தில் நூறு சாராய அனுமதிப்பத்திரம் உடைய வியாபாரிகள், மணல் அனுமதிப்பத்திரம் உள்ள எழுபத்தைந்து பேர் எதநோல் கொண்டு வரும் நான்கு பேர்,போதைப்பொருள் கொண்டு வரும் இருவர், சூதாட்டம் நடத்தும் ஒருவர் ஆகிய பலர் உள்ளனர் என்று கூறி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறிவைத்துப் பேசியுள்ளார் ரஞ்சன் ராமநாயக்கா. இருநூற்று இருபத்தைந்து உறுப்பினர்களில் இத்தனை பேர் இவ்வாறான தகைமை யுடன் நாடாளுமன்றத்திலுள்ளனர் என்று அவர் குறிப்பிடும் பொழுது உண்மையில் எத்தனை பேர் உண்மையான மக்கள் சேவை மனதுடன் அங்கே உள்ளனர் என்பது விடை தெரியாத வினாவாகவே உள்ளது.



குரல் பதிவுகள் தொடர்பாக விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்சா கூறியதை வரவேற்பதாகக் கூறியுள்ள அவர் மகிந்த ராஜபக்சாவின் ஆறு அல்லது ஏழு உரையாடல்கள் தன்னிடம் பதிவில் இருப்பதாகவும் கூறியுள்ளார். 'வன் சொட்' என்ற திரைப்படத்தைத் தானும் மகிந்தவும் ஒன்றாகப் பார்த்து விட்டு ஒருமிக்கத் திரும்பும் பொழுது 'வன் சொட்' திரைப்பட வழக்கிலிருந்து தன்னாலேயே நான் விடுதலை ஆனேன் என்று அவர் கூறிய வைகளும் பதிவில் இருப்பதாகப் பெரிய குண்டைப் போட்டு உடைத்துள்ளார். அதாவது நீதிமன்றத்தில் தான் தலையிட்டதாக மகிந்த ஒப்புக்கொள்ளும் பதிவு அது என்று கூறுகிறார் ராமநாயகா.

தான் பலருடையல் உரையாடல்களைப் பதிவு செய்தேன் என்று காரணம் கூறும் ராம நாயக்கா தன்னிடம் குரல் பதிவுகள் மட்டுமல்ல ஒளி-ஒலிப் பதிவுகளும் இருப்பதாகவும் கூறியுள்ளார். தன்னிடம் இருந்து பெறப்பட்ட பதிவுகளில் அரச தரப்பினரின் குரல் பதிவுகள் மூடி மறைக்கப்படுகின்றன. அரசினால் மூடிமறைக்கப்படும் அரசுத் தலைவர்கள். அமைச்சர்கள்.அவர்களின் மனைவிமார். பிள்ளைகள் ஆகியோரின் குரல் பதிவுகள் தன்னிடம் உள்ளதாகவும் அதில் முக்கிய விடயங்கள் உள்ளதாகவும் அமைச்சர்களின் மனைவிமார் தன்னிடம் உதவி கேட்ட குரல் பதிவுகள் கூட உள்ளதாகவும் அவற்றில் சிலவற்றை நாடாளுமன்றச் சபாபீடத்தில் வைப்பதாகவும் கூறிப் பெரும் குண்டைப்போட்டுள்ளார்.

ராமநாயக்க கூறிய மிகவும் முக்கிய தகவல் என்னவென்றால் கடந்த காலங்களில் திருட்டைப்பிடிக்க நாங்கள் செயற்படுகையில் திருட்டைப் பிடிப்பவரும் திருடர்களும் ஒன்றாக இணைந்து வழக்குகளை மாற்றினர்.இதனால் தான் நான் நீதிபதிகள், வழக்குத் தொடர்ந்தவர்கள், பிரதிவாதிகள் உள்ளிட்டோரின் குரல் பதிவுகளை மேற்கொண்டேன். கடந்த நல்லாட்சி அரசாங்கம் 2015-01-8 ஆம் நாள் திருடர்களைப் பிடிப்பதற்கென்றே வந்தது. நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு விமான நிலையத்தை மூடுவதாகக் கூறிக்கொண்டு திருடர் வீட்டுக்குச் செல்வதற்காக உலங்கு வானூர்தியை வழங்கியது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கிறார். அதாவது நல்லாட்சி அரசு முதல் இருந்த சனாதிபதியைத் தப்பிக்க வழி செய்தது

**- சிலம்பு -**


என்று கூறுகிறார் அவர்...இந்த நல்லாட்சி அரசைத்தான் கூட்டமைப்பினர் இதுவரை ஆதரித்தார்கள் என்பது இங்கு தமிழ் மக்களால் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதுபோல் பிணைமுறி மோசடியில் அலோசியஸ் தன்னுடன் கதைத்துப்,பணம் தருவதாகக் கூறிய தொலைபேசிக் குரல் பதிவுகளும் தன்னிடம் இருக்கின்றன. இதனால் யாரும் தன்னிடம் இருந்து தப்பிக்க முடியாது என்று பெயரைக் குறிப்பிடாமல் முன்னாள் பிரதமரையும் சுட்டிக்காட்டுகிறார்.இதே போன்று தான் நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்குவதில் அச்சத்துடன் இருந்ததாகவும், தீர்ப்புகள் வழங்கினால் நீதிபதி அம்பேபிட்டியவுக்கு நடந்தது தங்களுக்கும் நடந்து விடுமோ என்று அஞ்சியதாகவும் அவைபற்றியே பேசியதாகவும் கூறியுள்ளார் அவர்.

ரஞ்சன் ராமநாயாகாவைக் கைது செய்து விட்டு அரசு சார்ப்பனவர்களின் பதிவுகளை மூடி மறைத்துவிட்டு வழக்குகளைச் சோடித்து நடாத்தி அவர் மேல் குற்றம் சுமத்திவிட்டுத் தாங்கள் தப்பித்துவிடலாம் என்று இருந்தவர்களுக்கு ரஞ்சன் ராமநாயக்காவின் நாடாளுமன்ற உரை பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதே யதார்த்தமாகும்.

# நாவற்குழியில் ஒரு அருங்காட்சியகம்







யாழ்.மக்களின் நீண்டகாலக் கனவொன்று நனவாகப் போகிறது. யுத்த காலத்தில் அரும்பெரும் பொக்கிஷமாகக் காணப்பட்ட தமிழ் மக்கள் பண்பாட்டுச் சின்னங்களாக இருந்த பல மரபு சார்ந்த பொருட்கள் அவர்கள் கையைவிட்டுப் போய்விட்டன. அதன் அருமைபெருமை அறிந்த சிலர் அதனைப் பேணிப் பா்துகாத்துத் தம்வசம் வைத்திருக்கின்றனர். அவர்களில் சிலர் அதனை பொருத்தமான இடத்துக்குக் கையளிக்க விரும்பினாலும், அப்படிப்பட்ட இடம் ஒன்று இல்லையே என ஏங்கினர். அப்படிப்பட்டவர்களுக்காக, நா்வற்குழியில் எதிர்வரும் 25 அம் திகதி காலத்தால் அழியாத அரும் சிவபூமி பொருட்காட்சியகம் ஒன்று பொதுமக்கள் பார்வைக்காகத் திறக்கப்படவுள்ளது!

அந்தக் காட்சியகம் பெரும் பொருள் செலவில் சிவபூமி அறக்கட்டளையினால் உருவாக்கப்பட்டுள்ளது. திருவாசக அரண்மனையை அமைக்கத் தன்னை அர்ப்பணித்த சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனே இதனை அமைப்பதிலும் முனைப்பாக ஈடுபட்டிருக்கிறார். எனவே அவரிடம் இப் பணிகள் பற்றிக் கேட்டோம். அதுதொடர்பில் அவர்தெரிவித்ததாவது:

சுமார் 12 பரப்பு காணியில் 3 மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் நுழைவாயிலில் சங்கிலிய மன்னன், எல்லாள மன்னன் இருவரின் உருவச் சிலைகள் அலங்கரிக்கின்றன. உள்ளே யாழ்ப்பாணப் பேரரசை ஆட்சி செய்த 21 மன்னர்களின் உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் அனைவருக்கும் உருவச் சிலை அமைப்பது வரலாற்றில் இதுவே முதன்முறையாகும். இதுவரை சங்கிலியனுக்கு எல்லாளனுக்கு பண்டாரவன்னியனுக்கு சிலை எழுப்பியிருக் கின்றோம். ஆனால் முதன்முறையாக யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாகிய நாவற்குழியில் எமது வரலாறுகளிலே பதியப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தை அடிப்படையாக வைத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தமிழ் மன்னர்களின் பெயர்களோடு அவர்கள் ஆட்சி செய்த ஆண்டுகளைப் பதிவு செய்து அவர்களது மாதிரி உருவச்சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி எமது முன்னோர்கள் பயன்படுத்திய வண்டிகள் - கூடார வண்டில், திருக்கை வண்டில், சவாரி வண்டில் உள்பட எங்களுடைய போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களோடு 1950ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவந்த 17 மோட்டார்க் கார்களும் இங்கு காட்சிப் படுத்தப்படவிருக்கின்றன. விசேடமாக 'தட்டி வான்' என்று சொல்லப்படுகின்ற, 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அறிமுகமான, மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்திய வாகன-மும் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

முதலாவது தளத்திலே எங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புடைய பாரம்பரியமான பொருள்கள், தமிழர் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. பித்தளைப் பாத்திரங்கள் தொடக்கம் ஆரம்பகாலத்தில் வெளிவந்த கடிகாரம், வானொலிப் பெட்டி, எம் முன்னோர் பயன்படுத்திய அருவிவெட்டும் கருவி, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்து நாணயங்கள், அதன்பின்னர் வெளிவந்த ஆங்கிலேயர் காலத்து நாணயங்கள், ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணம் உள்பட நாடுமுழுவதும் உள்ள பகுதிகளின் ஒளிப்படங்கள் என இவை எல்லாம் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இரண்டாவது தளத்திலே ஈழத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், பாடசாலைகளை நிறுவிய நிறுவுனர்கள் மற்றும் எமது சமய, கலாசார நிகழ்வுகளான சூரன்போர், நல்லூர் கந்தசுவாமி ஆலய மிகப் பழமை வாய்ந்த தோற்றங்கள், நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றை வெளிப்படுத்துகின்ற பெயர்கள், கீரிமலை நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம் உள்ளிட்ட ஆலயங்களின் ஆதி ஒளிப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பழைய பத்திரிகைகள் - 1800ஆம் ஆண்டுகளிலிருந்து யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகள் - முதலாம் நாள் வெளிவந்த பத்திரிகைப் பிரதிகளின் முன் பக்கம்-போன்றன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இரண்டாவது தள மாடியிலே சுமார் 3 ஆயிரம் ஒளிப்படங்களைக் கொண்டு வரலாற்று அடையாளங்களும், மூன்றாவது தளத்திலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்திரமும் வடிவமைப்பும் என்ற துறைசார்ந்த மாணவர்களால் வரையப்பட்ட மரபு ரீதியான ஓவியங்கள் - எங்களுடைய கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மிகப் பெறுமதியான வரலாற்றுத் தடயங்களைக் காட்சிப்படுத்தவிருக்கின் றோம். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக் கெனச் சொந்தமானதொரு அரும்பொருள் காட்சியகம் இல்லை என்றது நீண்ட காலமாகப் பேசப்பட்ட விடயம். அதுபற்றிய அறிவும், ஆர்வமும் எமது சமுதாயத்திலே இல்லாமல் போனதன் காரணமாக இங்கே இருந்த எமது அடையாளமெனக் காணப்பட்ட பொருள்களை தென்னிலங்கை வியாபாரிகள் வந்து வாங்கிச் சென்று தென்னிலங்கையில் விற்றவிட்டார்கள். வெளிநாடுகளுக்கும் அனுப்பிவிட்டார்கள்.

அவ்வாறு பழைய வீடுகளிலிருந்த பொருள்கள் எல்லாம் கைவிட்டுப் போய் விட்டன. அவற்றோடு எமது அடையாளங் கள் பலவும் போய்விட்டன. ஆலயங்களில் இருந்த மிகப் பெறுமதியான வாகனங்கள் கூட விற்பனையாகிவிட்டன. தற்போது தென்னிலங்கையிலும் வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்து வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இது மிகக் கவலையான விடயம். எங்களுடைய மண்ணிலே ஓர் அரும்பொருள் காட்சியகம் உருவாக வேண்டும் என்று பலர் விருப்பப்பட்டனர். காலஞ்சென்ற கலைஞானி செல்வரட்ணம் என்கின்ற இந்தத் துறையிலே ஆவர்மானவர். அவர் எவ்வளவோ முயற்சிகளை எடுத்தார்.

பேராசிரியர் கனகரட்ணம் மற்றும் குரும்சிட்டிக் கனகரட்ணம் என்று சொல்லப்படுகின்ற கண்டியில் வாழ்ந்த ஓர் அறிஞர் வீரகேசரிப் பத்திரிகை தொடக்கம் பலவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தவர், எப்படியாவது யாழ்ப்பாணத்தில் ஓர் அரும்பொருள் காட்சியத்தை உருவாக்கி மக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று காத்திருந்தார். எனினும் போர்ச் சூழலால் முடியவில்லை, அவர்கள் எல்லாம் மறைந்துவிட்டனர். அவர்கள் தேடி வைத்த பல பொருள்களும் அழிந்துவிட்டன.இருந்தும் அவற்றின் பிரதிகள் புதிய தொழில் நுட்பத்தினூடாகப் பாதுகாக்கப்பட்டிருப்பதாக அறிந்தோம்.

இந்த நிலையிலேதான் சிவபூமி அறக்கட்டளை என்கின்ற எமது அமைப்பு 17 ஆண்டுகளாக வடபுலத்திலே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை, உறவுகளால் கைவிடப்பட்ட முதியோர்களுக்கான இல்லம் மற்றும் கீரி-மலை புண்ணிய தலத்திலே - 11 மடங்கள் போரினால் அழிவடைந்த நிலையில் - அங்கே ஒரு மடத்தைக் கட்டி எங்களுடைய பாரம்பரியங்களைப் பாதுகாக்கின்றனர். அதேபோன்று கிளிநொச்சியிலே மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாட-சாலை, திருகோணமலை கோணேஸ்வரம் ஆலய காணியிலேயே மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை மற்றும் மடம் அமைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் திருவாசக அரண்மனை என்கின்ற அரண்மனையை 2018ஆம் ஆண்டு அமைத்து அங்கே 652 திருவாச-கப் பாடல்களையும் கருங்கல்லியே செருக்கியுள்ளோம். அத்துடன், யாழ்ப் பாணம் சிவபூமி என்பதை நிலைநாட்டும் வகையில் 108 சிவலிங் கங்களை அமைத்துள்ளோம். இவற்றுக்கு அடுத்த பணியாக "சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம்" அமைத்து நிறைவேற்றியிருக் கின்றோம். இது தமிழர்களின் சொத்தாகும். என்னைப் பொறுத்தவரை சிறியேன் எத்தனையோ ஆண்டுகள் கண்ட கனவு இப்போது நனவாகிறது. நான் சேகரித்த பொருள்களை தமிழ் மக்களிடம் கையளிப்பதற்காகத்தான் இந்தப் பெரிய அரும்பொருள் காட்சியகத்தை அன்பர்களின் உதவியோடு அமைத்து நிறைவு செய்துகொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய மன்னர்களைப் புத்தகங்களில் படித்தோமே தவிர, அவர்களை எமது குழந்தைகளுக்குக் காட்சிப்படுத்தத் தவறிவிட்டோம். இங்கே 21 மன்னர்கள், அவர்கள் காட்சி செய்த காலம் எல்லாம் காட்சிப்படுத்து கின்றோம்.

இது அற்புதமான சொத்தாகும். சூரியன், சந்திரன் வானத்திலே நிலைத்திருப் பது போல, இந்த அரும்பொருள் காட்சியகமும் பல தலைமுறைக்கு இந்த மண்ணிலே நிலைத்திருக்கவேண்டும் என்று எல்லாத் தெய்வங்களிடமும் நான் பிராத்திக்கின்றேன்.

பொதுமக்களாகிய நீங்கள் இதனைக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும். உங்களிடமும் ஏதாவது அரும்பொருள்கள் இருந்தால் அவற்றையும் இங்கு கொண்டுவந்து குடும்பத்தின் பெயரைப் பொறித்துப் பாதுகாப்பாக வையுங்கள். எதிர்காலத்திலே வன்னி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிலும் மலையகத்திலும் தமிழர்களுடைய பண்பாடுகளை வெளிப்படுத்தும் அரும்பொருள் காட்சியங்கள் இதைப் பார்த்து உருவாகவேண்டும்.பலர் இந்த முயற்சிலே ஈடுபடவேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொள்கின்றேன்.

இது ஓர் முன்மாதிரியான பணி. இது எந்தவொரு அரசியல் நோக்கத்துக்கா கவோ அல்லது வாணிப நோக்கத்துக்காகவோ உருவாக்கப்பட்டதோ அல்ல. ஈழத் தமிழர்களுடைய வரலாற்றைக் கண்ணால் கண்டு எமது எதிர்காலச் சந்ததி உணரவேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சியாகும்.

இந்த அரும்பொருள் காட்சியகத்தை பார்வையிட வருவோருக்கு முதல் மூன்று நாள்களும் இலவச அனுமதி வழங்கப்படும். அதன் பின்னர் இந்த அரும்பொருள் காட்சியகத்தை பேணிப் பாதுகாப்பதற்காக பாடசாலை மாணவர்களுக்கு 50 ஷரூபாயும்,ஏனையோருக்கு 100 ஷரூபாயம் அனுமதிக் கட்டணமாக அறவிட சிவபூமி அறக்கட்டளை தீர்மானித்துள்ளது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை சிங்கள மக்கள் எத்தனையோ அரும்பொருள் காட்சியங்களை வைத்துள்ளனர். எத்தனையோ வரலாற்றுத் தடங்களை அவர்கள் பாதுகாக்கிறார்கள். நாங்கள் ஊரிலே எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று சோகத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. நாங்கள் நல்ல காரியங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தவேண்டும். இந்தப் பணிக்கு உதவிகளை வழங்கிய அத்தனை பேருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் - என்றார் அவர்.

மக்களாகிய நாமும் இதனை சிவபூமி அறக்கட்டளையின் தனிப்பட்ட முயற்சியாகக் கருதாமல், இதனை ஒரு சமூகம் சார்ந்த பணியாகக் கருதி எமது கடந்த மற்றும் இன்றைய வரலாறுகளை அடுத்த தலைமுறைக்கும் பகிரக் கூடியதாக இந்த அருங்காட்சியகத்தை முன்கொண்டு செல்லத் துணை நிற்போமாக.

(நன்றி - முகநூல்)

# சுமந்திரனை நோக்கி வீசப்படும் எறிகணைகள்

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அரசியல் களநிலவரம் மாறி இருக்கின்றது. அதற்கேற்றாற் போல அரசியல் கட்சிகளுக்கும் நிலைமைகள் மாறத் தொடங்கி இருக்கின்றன. தமிழ் அரசியல் தலைமைகளால் தொடர்ச்சியாக சொல்லப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வென்ற விடயத்தில் மக்களுக்குச் சத்திய வாக்கை அதிகம் கொடுத்தவர் என்றவகையில் தமிழ் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமிந்திரன் பக்கம் பலரது கவனமும் திரும்பியிருக்கின்றது. அவரது தூண்டுதலால்தான் சம்பந்தனும் தீர்வு வரும் காலக்கெடு என்று தீபாவளி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் என்று பல இலக்கைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதற்கிடையில் கடந்த ரணில் தலைமையின் கீழ் இருந்த ஆட்சிக்காலத்தில் தீர்க்கமாகத் தனது முடிவை அறிவிப்பது போல இந்த ஆட்சிக் காலத்தில் தீர்வைப் பெற்றுத்தரா விட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதோடு அரசியலில் இருந்தும் ஒதுங்குவேன் என்று ஒரு தடவை அல்ல பல தடவை சொல்லி இருக்கிறார் உண்மையிலே ஒரு நம்பிக்கை அவரிடம் இருந்ததா அல்லது அப்போதைய நாட்களைக் கழிப்பதற்கா அப்படிச் சொன்னாரா என்ற தெரியவில்லை ஆனால் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அதில் உண்மை இருப்பதாக நம்பினர்

ஆனால் அவர்கள் அப்படி எதிர்பார்த்ததற்கும் ஒரு காரணம் உண்டு ரணில் எப்படியாவது அரசாட்சியைத் தொடரலாம் இல்லாவிடில் புதியதாக வரும் எந்த அரசாங்கத்துக்கும் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் தாமே அரசைத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பர். அதனால் பேரம்பேசியே தமது நிலையைத் தக்கவைக்கலாம் என்ற ஆரூடத்திலேயேதான் அவர்கள் மக்களைப் பற்றியோ அவர்களுக்குத்தாம் கொடுக்கும் வாக்குகளைப் பற்றியோ அவதானமாக இருக்கவில்லை.

ஆனால் கள நிலவரம் தலைகீழாகியது பெரும்பான்மை மக்களின் தனித்த வாக்குகளால் ஜனாதிபதி ஆசனத்தைக் கைப்பற்றிக் கொண்டார். கோத்தாபய தேர்தலுக்கு முன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சஜித்துக்கு வாக்களிக்கும் படிகேட்டு சஜித்துக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதற்குக் கூறிய காரணம் கோத்தாபய மீண்டும் வந்தால் தமிழருக்கு எதிரான பல நடவடிக்கைகளை அவர் எடுப்பார் அதனால் அவர் தோற்றகடிக்கப்பட வேண்டும் என்பதே.

இப்படி கோத்தாபயவுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டவர்களால் பின் கோத்தாபயவின் வெற்றியை நோக்கி தமது காய் நகர்த்தல்களை செய்யத் திண்டாடினர் சர்வதேசமும் ஜனாதிபதி கோத்தாபயவின் வெற்றியைக் கண்டு சற்றுச் சிந்திக்கத் தொடங்கியது. அதுவரை சர்வதேசம் என்ற சொல்லிக் கொண்டிருந்த தமிழர் கூட்டமைப்புக்கு அது சத்திய சோதனையாக இருந்தது இதில் அதுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்புக் களபாட்டும் நானே பாவமும் நானே என்று சகல விடயங்களிலும் கூட்டமைப்புக்குள் தன்னாட்சி செய்து வந்த சுமந்திரனே கட்சியின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாயிருந்தார் என்று சொல்லப்பட்டு அவரை நோக்கியே எறிகணைகள் வீசப்படுவதாகவும் சொல்லலாம்


இதில் அதுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கள் பாட்டும் நானே பாவமும் நானே என்று சகல விடயங்களிலும் கூட்டமைப்புக்குள் தன்னாட்சி செய்துவந்த சுமந்திரனே கட்சியின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் காரணமாயிருந்தார் என்று சொல்லப்பட்டு அவரை நோக்கியே எறிகணைகள் வீசப்படுவதாகவும் சொல்லாம்.

தமிழ்தேசிய கூட்டமைப்பிலிருந்து விக்கி அணியும் சுரேஸ் அணியும் விலகிய பின்னர் கூட்டமைப்பு என்பது ஒரு பலவீனமான அணியாக மாறியதுடன் அதனை கட்டியெழும் வலிமையான கட்சியாக தமிழரசு கட்சியே விளங்கியது. அதிரடி முக்கிய முடிவெடுக்கும் நபராக சம்பந்தனும் தனது இயலாமை காரணமாகவோ என்னவோ தலையாட்டும் நபராக ஆகியதால், கூட்டமைப்பே சுமந்திரன் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒன்றாக ஆகியது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, சுமந்திரன் தந்திரம் பலிக்காமல் போனதில் இப்போது கூட்டமைப்பிற்குள்ளேயே அவர் கடுமையான எதிர்ப்புகுள்ளாகி வருகிறார். அவரை நோக்கி பல தரப்பில் இருந்தும் சுமந்திரனுக்கு எதிராக எறிகணைகள் வீச ஆரம்பித்துள்ளது.



# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளை பெரும் குத்துப்பாடாம். குத்துப்பாட்டுக்குக் காரணம் சுமந்திரன் எம்பி எண்டு ஆக்கள் கதைக்கினம். அவர் தனக்கு வேண்டின ஆக்களை எம்பியாக் கொண்டு வாறதுக்காக பழைய ஆக்களைக் கழிச்சுவிடவேணும் எண்டு பழைய ஆக்களைக் கழட்ட வேணும் எண்டு மாவையிட்டைச் சொன்னதாலைதான் இப்ப கட்சிக்கை இடி இடிக்கத் தொடங்கி இருக்கு. இதை இப்ப இணைத்திலையும் செய்தியாப் போட்டுக் கிடக்கெண்டு கதைக்கினம்.

முதலிலை மாவையை வெளியாலை பிடிச்சு விடுவம் எண்டுதான் யோசிச்சவராம். அது சரிவரேல்லை. ஏனெண்டால் சுமந்தரனோடை ஒப்பிடேக்கை மாவையின்ரை தியாகம் பெரிசு. ஒரு ஹோட்டலிலை பாத்திரம் கழுவி. எடுபிடி வேலை செய்து உளைச்சு அப்பிடி ஒரு ஹோட்டலுக்கு முதலாளியான மாதிரித்தான் கட்சிக்கை மாவையின்ரை பங்கு. 74 களிலை சிறையிலை இருந்த 42பேரிலை மாவை ஓராள். அப்ப சுமந்திரன் அரைக் காற்சட்டை போடத் துவங்கியும் இருக்கார். அப்ப துவங்கினது மாவையின்ரை கட்சி வேலை. இப்பவும் மாவையைத் தெரிஞ்ச அளவுக்கு மாவையை ஆர் எண்டு தெரியாது. சரவணபவன் எம்பிக்கு அடுத்த தேர்தலிலை சீற்றுக் குடுக்க வேண்டாம் எண்டு சுமந்திரன் மாவையிட்டை இரகசியமாச் சொன்னதை ஏன் இணையத்திலை பப்ளிக்காக்கினவை எண்டு தான் இப்ப சமசியம்? அது சனத்தின்ரை நாடியைப் பிடிச்சுப் பாக்கிற விளையாட்டோ தெரியாது எண்டும் யோசிக்க வேண்டி இருக்கு. அதோடை வன்னி மாவட்டத்திலை ஸ்ரீதரனையும் கழட்ட வேணும் எண்டும் அவர் யோசனை தெரிவித்திருக்கிறாராம். இது சுமந்திரன் நெருப்போடை விளையாடுறார் எண்டு சனம் கதைக்கினம்.

சுமந்திரன் 2010 இலைதான் கட்சிக்குள்ளை அப்புக்காத்து வேலைக்கு ஆள் தேவை எண்டு தேசியப் பட்டியலிலை கட்சீக்கை கொண்டு வந்ததாத்தான் கதை . அதுவும் வலி வடக்குக் காணிப் பிரச்சினை கதைக்க வந்தவர் அடுகிடை படுகிடையா தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கை படுத்திட்டார் எண்டும் அது மாத்திரமில்லை அவர் சம்பந்தற்றை "உள்ளம் கவர் கள்ளன்" எண்டு மாறீட்டார் எண்டும் சனம் கதைக்கினம். அதிலை எது சரி ? எது பிழை எண்டு எனக்குச் செவ்வையாத் தெரியேல்லை!

அப்பிடி வந்தவர் கட்சீக்கை தன்ரை பாட்டைப் பாத்துக் கொண்டு இருந்திருக்கலாம். தடி எடுத்து மற்றாக்களை அதட்டவும் வெளிக்கிட்டிட்டாராம். "நீ வெளியாலை போ, நீ உள்ளை வா" எண்டு தனக்கு வேணுமெண்ட மாதிரி கட்சி உறுப்பினருக்கு ஆப்பு வைக்க வெளிக்கிட்ட உடனைதான் பிரச்சினை சாதுவாப் புகைக்கத் துவங்கி இப்ப அது சரவணபவனையும், ஸ்ரீதரனையும் வெளியாலை போடவெண்டு வெளிக்கிட்ட உடனை விஸ்வரூபம் கொண்டிட்டுது எண்டும் சனம் கதைக்கினம்.

இப்ப அதை அவையின்ரை பிரச்சினையை எண்டிட்டு விடுவம் எண்டால் உவையின்ரை புடுங்குப்பாட்டாலை கடைசியாப் பாதிக்கப்படுகிறது நாங்கள் தானே? அதாலை உதைச் சும்மா விடேலாது எண்டு தமிழரசுக் கட்சிக்கை இருக்கிற உறுப்பினர் பலபேர் கொந்தளிக்கத் துவங்கியிருக்கினமாம். கட்சீக்கை தனிமனித ஆட்சிக்கு இடம் விடேலாது. அதாலைதான் கட்சி பேரழிவைச் சந்திக்கிது எண்டும், வேட்பாளர் தெரிவுக்கு எண்டு ஒரு குழு இருக்கேக்கை உவை ஏன் தங்கடை, தங்கடை பாட்டிலை தெரிய வெளிக்கிடுகினம் எண்டும் சுமந்திரன்ரை பேரைச் சொல்லாமல் உறுப்பினர் கனபேர் கடுப்பிலை இருந்தவை எண்டும் இணையச் செய்தியிலை போட்டிருக்காம்.

இதைப் பாத்திட்டுப் பேப்பர் கடை வாசலிலை வாற சனம் சொல்லுது "மற்றவையைக் கழட்ட வெளிக்கிடுறவர் கொஞ்சம் தன்ரை நிலைமையையும் தட்டிப் பாக்க வேணும். இவரைச் சனம் கழட்ட வெளிக்கிட்டால் என்ன செய்வராம்? எக்கணம் துண்டை காணேல்லை, துணியைக் காணேல்லை எண்டு ஓடுறதாத் தான் இருக்கும். இவர் நம்பியிருக்கிற ஆனோல்ட், சயந்தன் ஆக்களிலையும் சனம் அவ்வளவு திருப்தியாயுமில்லை. அப்ப இவர் அவையளையும் நம்பி அதிரடி வேலையிலை இறங்கிறதும் அவ்வளவு புத்திசாலித்தனமா எனக்குப் படேல்லை.

முதலிலை சுமந்திரன் ஆள் மாறாட்டம் செய்து கட்சியைக் குழப்பாமல் கட்சியை மறு சீரமைச்சு, புதுக் கருத்துருவாக்கத்தையும் செய்ய வேணுமே ஒழிய, ஏற்கனவே கட்சீக்கை கோமாளியள் எண்டு சனம் பரிகாசம் செய்யிறவையளைக் கொண்டு வந்து எம்பி சீற்றுக்குப் போட்டி போடுங்கோ எண்டு விடேலாது.

சுமந்திரன் நினைக்கிறமாதிரிச் செக்கு மாடுகள் இல்லை தமிழ் சனம். நுகத்தலை பூட்டிவிட்டால் செக்கைச் சுத்திச் சுத்தி வாறதுக்கு. சனம் தீர்மானம் எடுத்தால் உவை எல்லாம் கிட்ட நிக்கேலாது. எண்டு உவைக்குத் தெரியேல்லை. புது அரசாங்கத் வந்திருக்கு. அதிலை இருக்கிறவையள் வாய் கூசாமல் வாய்க்கு வந்தபடி எல்லாம் கதைக்கிறாங்கள். அதைக் கேக்க நாதி இல்லை. நிமிசத்துக்க நிமிசம் அவையள் சொல்லுறதைக் காது குடுத்துக் கேட்டால் பொலிடோல் குடிக்க வேணும் போலை கிடக்கு . பெரிய அப்புக்காத்து எண்டு இருக்கிறவர் நினைச்சால் என்னென்னத்தைச் செய்யலாம். இது அதை விட்டிட்டு தேன் கூட்டைக் கலைக்கிறமாதிரி அவையைக் கழட்டுவம், இவையைக் கழட்டுவம் எண்டு வெளிக்கிட்டிருக்கிறார். சரிவராது!

# சிலந்தி வலை

- முனைவர் அப்துல் ரகுமான் -

மரம் வேறு மலை வேறு, நீர் வேறு, நெருப்பு வேறு, இருள் வேறு ஒளி வேறு, 'நான்" வேறு, 'நீ' வேறு.

இப்படித்தான் நாம் நினைக்கிறோம். காரணம் இப்படித்தான் நமக்குத் தெரிகிறது.

'தெரிகிறது", ஆம் அதுதான் உண்மை.

இவை வெவ்வேறாகத் 'தெரிகின்றன". உண்மையில் இவை வெவ்வேறல்ல ஒன்றுதான்.



பலவாகத் தெரிவது அஞ்ஞானத்தின் விளைவு. அஞ்ஞானம் அகங்காரத்தின் விளைவு.

'நான்' என்ற உணர்வே அகங்காரம். இந்த 'நான்' என்ற உணர்வே 'நீ' என்று பிரித்துக் காண்கிறது.

அகங்காரம் மறைந்தால அஞ்ஞானம் மறைந்து விடும்.

அஞ்ஞானம் மறைந்தால் வேற்றுமை உணர்வு மறைந்துவிடும்.

எல்லாம் ஒன்றுதான் என்பது புரிந்து விடும். இந்தப் புரிதலே ஞானம்.

ஞானமாவது
அபேத தரிசனம்
என்கிறது மைத்ரேயீ உபநிடதம்.

'ஒன்றாகக் காண்பதுவே காட்சி' என்கிறார் பிற்காலத்து ஔவையார்.

இங்கே 'காட்சி' என்பது 'தரிசனம்' என்ற பொருளில் வருகிறது.

இறைவனை தரிசிக்க முடியுமா? என்ற சந்தேகம் பலருக்கு இருக்கலாம்.

தரிசிக்க முடியும்.

எல்லாம் ஒன்றே என்பதை அறிவதே கடவுள் தரிசனம்.

ஏனெனில் அந்த ஒன்றுதான் இறைவன்.

ஏகத்துவம் என்றால் இறைவன் ஒருவனே எனக் கொள்வதுதான் என்று சிலர் நினைக்கிறார்கள்.

இல்லை. இது பாமர ஏகத்துவம்.

எல்லாம் ஒன்றே என அறிவதுதான் ஏகத்துவம்.

நிலா குளத்திலும் பிரதிபலிக்கிறது குளத்திலும் பிரதிபலிக்கிறது.

நதியிலும் பிரதிபலிக்கிறது கடலிலும் பிரதிபலிக்கிறது

குளத்து நிலா வேறு குட்டை நிலா
வேறு. நதி நிலா
வேறு கடல் நிலா
வேறு என்று யாராவது சொன்னால் நகைக்கத்தானே தோன்றும். ஆனால் நாம் அப்படித்தான் சொல்லுகிறோம்.

ஒரே பூதாத்மாதான்
ஒவ்வொர் உயிரிலும்
நிலைபெற்றிருக்கிறது.
அது ஒன்றாயினும்
நீரில் நிலாவைப் போல்
பலவாகக் காணப்படுகிறது.

என்கிறது அமிருத பிந்து உபநிடதம்.

எவன் அனைத்தையும் ஒன்றாகக் காண்கிறானோ அவன் மோட்சம் அடைகிறான்.

எவன் பலவாகக் காண்கிறானோ அவன் துயரம் அடைகிறான்.

எவன் பலவாகக் காண்கிறானோ
அவன் சாவிலிருந்து
சாவை அடைகிறான்.

என்கிறது சூக்ம பிரபோத உபநிடதம்.

கைவேறு கால் வேறு என்கிறோம். கண்வேறு காது வேறு என்கிறோம்.

உண்மையில் இவை ஒரே உடலின் உறுப்புக்களே. ஒரே மூலத்தால் ஆனவையே.

பிறப்பின் மூலமாகிய விந்துத் துளியில் கை எங்கே கால் எங்கே?

கண் எங்கே? காது எங்கே?

எல்லாமே அந்த விந்துத் துளியில் பரிணமித்து வருபவையே.


நம் உறுப்புகள் நம் உடலில் இணைக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரிகிறது.

வெவ்வேறாகத் தெரியும் படைப்புக்களுக்கு இடையே உள்ள இணைப்பு நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

இந்த இணைப்பைக் காண்பதே ஞானம்.

ஜப்பானிய ஞானக் கவிஞர் பாஷோ கூறுகிறார்

பிரபஞ்சம் சிலந்தி வலை போன்றது. சிலந்தி வலையில் ஏதேனும் ஓர் இடத்தை நாம் தொட்டால் வலை முழுவதும் அதிர்கிறது. அதைப் போலவே ஓர் இலையை நாம் தொட்டால் வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் நடுங்கும்.



இலையைத் தொடும்போது நட்சத்திரங்கள் நடுங்குவது நம் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம். படைப்புகள் எல்லாம் அந்தரங்கத்தில் உறவு கொண்டிருக்கின்றன.

எனவே நாம் இலையை அசைக்கும் போது நட்சத்திரங்கள் அசையாமல் இருக்க முடியாது.

மனிதனுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் பலவாகக் காணும் வேற்றுமை உணர்வுதான்.

என் சாதி, உன் சாதி என்கிறோம். என் மதம், உன் மதம் என்கிறோம். என்நாடு, உன் நாடு என்கிறோம்.


இந்த வேற்றுமை உணர்வால் பகைமை பிறக்கிறது. பகைமையால் சண்டை பிறக்கிறது. சண்டையால் அமைதி குலைகிறது.

ஒன்றென்று உணர்பவன் சாந்தியை அடைகிறான்.

சாந்தியை அடைந்தவன் ஆனந்தம் அடைகிறான்.

ஆனந்தத்தை அடைகிறவன் ஆண்டவனை அடைகிறான்.

சாந்தியும், ஆனந்தமும் இறைவனின் சுவைகள்.






## கண்ணீரும், வலியும் எல்லோர்க்குமானது

அமெரிக்க இராணுவ வீரர்கள் தம் நேசத்திற்குரியவர்களைப் பிரித்து போர்க்களம் செல்ல ஆயத்தமாகும் படங்கள் பல பார்வைக்குக் கிடைத்தது. உண்மையிலேயே மனதை உருக்கும் காட்சிகள் இவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனாலும், இதே அமெரிக்க இராணுவ வீரர்களாலும், அவர்களின் அதிகார மையங்களாலும் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், சிரியாவிலும், ஈழத்தில் மறைமுகமாகவும், இன்னும் உலகின் பல பிரதேசங்களில் இரகசியமாகவும் படுகொலை செய்யப்பட்ட எண்ணற்ற மனிதர்களிற்கும் ஒரு குடும்பம் இருந்து. அந்தக் குடும்பங்களிற்கு ஒரு வாழ்க்கை கனவும் இருந்தது. அதையெல்லாம் நிர்மூலமாக்கி உலகெங்கும் எண்ணற்றவர்களைப் படுகொலை செய்தது அமெரிக்கா.

படுகொலை செய்யப்பட்ட அந்த மனிதர்களின் உறவுகளை நடுத்தெருவில் அலையவிட்டது அமேரிக்க அரசு. அமெரிக்க இராணுவ வீரர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டால் கௌரவத்துடன் பெரும் பண உதவியும் அவர்கள் சார்ந்தவர்களிற்குக் கிடைக்கும். ஆனால் அமெரிக்காவால் உலகம் முழுவதும் கொல்லப்பட்டவர்களிற்குப் பயங்கரவாதிகள் என்னும் பெயர் கிடைக்க, அவர்கள் குடும்பங்கள் நடுத்தெருவில் நாதியற்று அலையும். பல-பரும் விடுதலை மாந்தர்கள் இதே அமெரிக்க அரசால் கொல்லப்பட்டார்கள் என்பதை நாம் ஒரு போதும் மறக்ககூடாது. இன்றும் அன்பிற்குரியவர்களைப் போர்க்களம் அனுப்பி, கண்ணீர் சிந்தும் இதே அமெரிக்கர்கள் தான் கடும்போக்குவாதி ட்ரம்பைத் தெரிவு செய்தவர்கள் என்பதும் கசப்பான உண்மை.

பத்து ஆண்டுகளிற்கு முன்பு நாம் கதறக், கதறச் சிங்கள அரசுடன் சேர்ந்து, மேற்குலகமும், இந்தியாவும் எம்மை இனப்படுகொலை செய்ததை நாம் ஒரு போதும் மறக்கமாட்டோம். ஆதலால் தான் சொல்கின்றோம், கண்ணீரும் வலியும் எல்லோர்க்குமானது.








தீபம் சிறுகதை

# மதிப்பிற்குரிய அடிமை

- கே.டானியல் -



ஓவியம் - சசிவதனி கந்தையா

ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடந்திருக்க வேண்டும். அல்லது அப்படி நடந்துவிடுவதற்காகச் சூழ்நிலைக்குள் சிக்கியிருக்க வேண்டும். இல்லாவிட்டால், சூசை முத்தனின் முகம் இப்படிச் சுண்டிப் போயிருக்காது.

மாலைப்பொழுதெனில், ஏதோ எப்படியோ வந்து சேர்ந்துவிட்ட மயக்கத்தில் இப்படி முகம் கண்டிப்போகும். ஆனால், இவ்வளவு அதிகாலையோடு இப்படி ஒரு நிலை ஏற்பட்டதெனில் சூசைமுத்தனைப் பொறுத்தமட்டில் மிகவும் புதினந்தான்.

ஊருக்கெல்லாம் சூசைமுத்தன் பெரியவன். பெரியவன் என்றால் அப்படி இப்படி என்றல்ல. சபையை ஆக்கவும் சபையைக் கலைக்கவும், வல்லமை உண்டு.

அதிகாலையோடு மூப்பர் அவனை அழைத்துச் சென்றார். 'குருவானவர் உன்னைக் கையோடை கூட்டியரட்டாம்', என்று பிடிவாதமாக நின்றுதான் மூப்பர் அழைத்துச் சென்றார். சூசைமுத்தன் பல விதத்திலும் உழட்டிப் பார்த்தும் மூப்பர் விடவில்லை. அவனை இழுத்தே சென்றுவிட்டார்.

முன்பென்றால் மூப்பர் இப்படி அவனை அவஸ்தைப்படுத்த வேண்டியதில்லை. மூப்பர் முகத்தைக் காண இவனாகவே எழுந்து சென்றுவிடுவான். இப்போவெனில் மூப்பர் இவனை இப்படி அவஸ்தைப்படுத்தி இழுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

குருவானவருக்கு முன்னால் போவதென்பது சூசை முத்தனுக்கு இலேசுப்பட்ட காரியமல்ல.

பல வருடங்களாகக் குருவானவருக்கு இவன் 'டிமிக்கி' கொடுத்து வருகிறான்.

'வருஷத்தில் ஒரு தடவை என்கிலும், நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து, தேவ நற்கருணை பெற வேண்டும்' என்பது திருச்சபையின் கட்டளை. இந்தக் கட்டளை சூசைமுத்தனுக்குத் தெரியாத ஒன்றல்ல. பாவத்துக்கான பிரிவுகளான, 'ஜென்மபாவம், கன்மபாவம், அற்பபாவம், சாவான பாவம்' ஆகியவைகளுக்கான வரைவிலக்கணங்களைப் புரிந்து கொள்ள முடியாத வயதிலிருந்து இருபதாவது வயதுவரை இந்தக் கட்டளைகளுக்குப் பணிந்து நடந்தவன் சூசைமுத்தன். இந்த உத்தம கத்தோலிக்கனுக்கு இருபதாவது வயதில் வந்ததே ஒரு வினை! அன்றிலிருந்து இன்றுவரை அது அவனை இப்படி வைத்திருக்கிறது.

இப்போது இருக்கும் மூப்பர், அப்போதைய மூப்பருக்கு மகனாக மட்டுந்தான் இருந்த காலம்! சூசை முத்தனும், மூப்பருக்கு மகனும் இணைபிரியாது வாழ்ந்த காலம்!

அப்போது, 'குருவானவர் உன்னை வரட்டுமாடா, வாடா' என்று உரிமையோடு இழுத்துச் சென்று சுவாமியாருக்கு முன்னால் நிறுத்தினான் இவன்.

'சாவான பாவமென்றால் என்ன?'

'பூரண அறிவு அவதானத்துடனும், முழுச் சம்மதத்துடனும் கனாங் கொண்ட காரியத்தில் தேவ கட்டளைளயை மீறுவதே சாவான பாவம்!"

'பத்துக் கற்பனைகளுள் ஆறாங் கற்பனை எது?'

'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக!'

'நீ கனாங்கொண்ட காரியத்தில் தேவ கட்டளையை மீறினாய்! விபச்சாரஞ் செய்தாய்!'

' இல்லை தேவரீர்! நான் கள்ளச் சத்தியம் செய்ய மாட்டேன் தேவரீர்!'

'பொய் பேசாதே. இந்தக் காரியத்தில் பொய் பேசுவது இரட்டைப் பாபம்!'

'பாபத்தை ஒப்புக்கொண்டு அதற்காக மனஸ்தாபப்படு பிள்ளாய். அப்போது, உனது பாபம் கர்த்தரால் மன்னிக்கப்படும். பாவிகளுக்காக இரத்தம் சிந்தி, சிலுவையிலே அறையுண்ட தேவகுமாரனின் திருப்பாடுகள் உனது பாபத்தைக் கழுவும்! சூசைமுத்து, அப்பக்கடை அன்னம்மாளுக்கும், உனக்கும் நாளைப் பூசைப் பலியில் முள்முடி வைத்து அவதாரம் தரப்படும்'

'ஐயோ தேவரீர், மூப்பற்றைமோன்'

'பேசக்கூடாது! எனக்கு எல்லாந் தெரியும். மூப்பரின் மகன்தான் உன்னைக் கையுங்களவுமாகப் பிடித்தான்'

'இல்லை தேவரீர்!'

'சரி, கண்டவன் வேறு யாராக இருக்கட்டும். நீ தேவ கட்டளையை மீறினாய்! உன்னை அவன் கண்டான். அவன் உங்களக் கண்டதைக் கண்டவர்கள் இருக்கின்றனர். போ! போய்விட்டு நாளைக்குப் பூசைக்கு வந்துவிடு. போ சூசைமுத்து.'

குருவானவருடன் நடந்த இந்தத் தர்க்கத்துடன் வெளியே வந்தவன் தான் சூசைமுத்தன். இன்றுவரை அந்தக் கோவிலுக்கோ அல்லது அதற்குப்பின், கோவிலுக்கு மாறி வந்த குருவானவருக்கு முன்னோ இவன் போகவில்லை.

மனம் மரத்துப் போய்விட்டது. ஆரம்பத்தில் இப்படி மரக்க வைப்பது கடினமாகத்தான் இருந்தது. பின்பெல்லாம் இந்த மரப்புத்தான் ஓர் இலக்குக் கட்டையாக மாறிவிட்டது.

சூசைமுத்தனின் அப்பனின், அப்பனான கணபதி மனைவி சகிதமாக 'குடிமகன்' என்ற தோரணையில் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். அந்தக் காலம், இந்தக் காலம் போல் பொல்லாத காலமல்ல: மகா பொல்லாத காலம்!

ஜாதிகள் என்ற விதத்தில், பலவிதப் படிகள், படிகளுக்குள் படிகள்: சிறுபடிகள்: அதற்குள்ளும் பெரும்படிகள்: சிறுபடிகள். ஒவ்வொன்றுக்கும் மாத்திரைக்கு மாத்திரை இலக்கணம் வகுத்துக்கொண்டிருந்த காலம்.

அந்தோனியார் கோவிலைச் சுற்றிக் கொண்டு வாழ்ந்த மீன் பிடியாளர்களுக்கென அப்போது அடிமை குடிமை எதுவுமே இல்லை. சுண்டி எடுக்கப்பட்ட வேறொரு கூட்டத்தினர், அடிமை குடிமை வைத்து, கொடி கட்டிவாழ்ந்த காலமென்றால் அவர்களை அண்டித்தான் மற்றவர்கள் பிழைத்துப்போக வேண்டும். அப்போதுதான் அந்தோனியார் கோவிலின் கட்டளைக் குருவாக வெள்ளைத் தோல் மனிதர் ஒருவர் வந்து சேர்ந்தார். இந்த மீன்பிடி மக்களுக்குக் 'குருகுலத்தவர்' என்று பெயரிட்டுப் பெருமைப்படுத்தினார். திவ்விய யேசுவின் சிஷ்யர்கள், மீன்பிடியாளர் என்பதனால் இவர்களைக் 'குரு குலத்தவர்' என்று பெயரிட்டுப் பெருமைப்படுத்தியபோது, இந்த குருகுலத்தவர்களின் பெருமையின் நடைமுறைக்கு அடிமைகள், குடிமைகள் எல்லாமே வந்தாக வேண்டி இருந்தது.

மயிர் வெட்டும் தொழிலுடன் 'குடிமகன்' என்ற அந்தஸ்துப் பெற்று வந்து சேர்ந்த கணபதி 'அடைக்கல முத்தன்' என்று ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிற்று.

இந்த அடைக்கலமுத்தன் தனிக்குடும்பமாகிவிட்டான். உறவினர்கள் என்று பலர் இருந்தாலும் 'இவன் தொழிலுக்காகப் படியிறங்கிவிட்டமையால் அவர்கள் இவனைத் தள்ளி வைத்துவிட்டனர். என்று மொட்டையாகச் சொல்லிவிட்டால் போதாது. சபை, சந்தி, சம்மந்த உம்மந்தம் எல்லாவற்றையுமே வெட்டிவிட்டனர் என்று விரிவாகக் கூறினால்தான் பொருத்தம்.

அந்த அடைக்கலமுத்துக்குச் சவிரிமுத்தன் என்ற ஒரே மகன். அந்தச் சவரி முத்தனுக்கு எப்படியோவந்து சேர்ந்த மனைவி சவுனத்தின் உதிரத்தில் உதித்தவன் தான் சூசை முத்தன்.

சூசை முத்தனின் பேரன், 'கணபதி' என்ற அடைக்கலமுத்தன் படி இறங்கியதன்மெல் மெதுவாக நகர்ந்த சந்ததிப் பெருக்கம் சூசை முத்தனோடு வெட்டுண்டு நின்றுவிட்டது.

சூசைமுத்தன் ஒண்டிக்கட்டை.

உத்தம கத்தோலிக்கர்களுக்காக என்னதான் சட்டங்களை வகுத்துக் கொண்டாலும், சூசைமுத்தனை இந்தச் சட்டங்கள் அசைத்து விட வில்லை. அவனை ஊருக்கு வேண்டும். இந்தத் தேவை அவனைத் தலை நிமிர்ந்து நடக்கவைத்தது.

சூசைமுத்தனின் கக்கத்திற்குள் ஒரு பை இருக்கும். அந்தப் பைக்குள் ஒரு கத்தரிக் கோல், ஒரு சீப்பு, ஒரு கத்தி, அந்தக் கத்தித் தீட்டுவதற்கான ஒரு கல்லு ஆகியவை இருக்கும். மொத்தத்தில் சொன்னால் இந்தக் கருவிப் பைதான் ஊருக்குள் அவனை 'இராச' அந்தஸ்தில் வைத்திருக்கிறது என்றாவது ஒருநாள் அவன் இந்தக் கருவிப் பையை விட்டெறிந்து விட்டால் ஊரில் மானம் என்னாவது?

ஊரில் நடந்துவிடும் நன்மை தீமைகளில் தான் சூசைமுத்தனின் அதிகாரச் சிறப்புத் தெரியவரும்.

சூசைமுத்தன் தலைப்பந்தியில் இருத்தப் படுவான். எல்லோருக்கும் உணவு படைக்கப் பட்டபின், எல்லோரும் சூசைமுத்தனின் தலையசைப்பிற்காக காத்திருக்க வேண்டும்.

'வழி தவறியவன் - மசுவாதுக்காரன், கலியாணக் கலப்புகளில் படி இறங்கியவன்' என்ற விதங்களுக்குட்பட்ட, எவனாவது ஒருவன் - அல்லது பலரைச் சபையை விட்டு எழுப்பிவிடத்தான் வேண்டுமென சூசைமுத்தன் ஆணையிடுவானானால் அந்த ஆணைக்கு ஊரின் மூப்பர் செவிமடுத்து அதைச் செய்தால்தான் தொடர்ந்து சபை நடக்கும். இன்றுவரை சூசைமுத்தனின் இந்த ஆணை நிறைவேற்றப்பட்டுத்தான் வருகிறது.

சூசைமுத்தன் சபையைச் சுற்றி இராஜ நோட்டம் விடுவான். எல்லோர் விழிகளும் சூசைமுத்தனையே ஏக்கத்துடன் நோக்கும். வீட்டின் தலைவனும், தலைவியும் வீட்டு வாயிற்படியோரம் நின்று அவனைப் பார்க்கும் பார்வை, அவன் காலடியில் மண்டியிட்டுச் கெஞ்சுவது போலிருக்கும். சூசைமுத்தன் வாயிலிருந்து 'சரி' என்ற சொல் பிறந்து விட்டால்தான் எல்லோருக்கும் மூச்சுவரும்.

சூசைமுத்தன் ராஜநடையுடன் சபைக்கு வருவதற்கு முன்பு கையலம்புவதற்காக அவனுக்குக் கை மண்டையில்தான் தண்ணீர் வார்க்கப்படும். உணவருந்தும் போது விடாய்க்காக அவன் தண்ணீர் பருக முடியாது. அப்படிப் பருகும் நிலை ஏற்படின் சிரட்டையில்தான் தண்ணீர் தரப்படும்.

இது குடிமகனை நடத்தும் முறை. குடிமகன் தீண்டத்தகாதவன். பாத்திரங்களில் அவன் கரம் பட்டுவிடக் கூடாது.

சபையில் அவன் தலையசைப்பிற்காக ஏங்கிக் கிடப்பதுடன் அவனுக்குக் கைமண்டையில் தண்ணீர் வார்ப்பதும் சேர்ந்துதான் அவன் 'குடிமகன்' என்ற கௌவரவத்தின் சுருக்கந்தான் 'பரியாரி'என்ற அதி கௌரவப் பட்டம்.

பரியாரி சூசைமுத்தனின் கண்கள் எப்போதும் செக்கச் சிவந்திருக்கும். அவன்

மூக்குமுட்டக் குடிப்பான். 'ஒண்டுக்கு ரெண்டு போட்டால் தான் பரியாரி சூசைமுத்துவுக்கு ஞாபகம் பிறக்கும்' என்பது ஊரில் பரவலான கதை.

தந்தை இறந்துபோக, சூசைமுத்தனுக்கு மிஞ்சியதெல்லாம் தாய்க்கிழவி சவுனம் ஒருத்திதான்.

சவுனம் மகனின் கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஊருக்கு அவள் ராணிகௌரவக் குடிமகள். வெள்ளாப்போடு கூடையை கைநீட்ட வேண்டியதில்லை. பொழுது கிளம்பி வருவதற்கிடையில் அவளின் கூடை நிறைத்துப் போய் விடும். தோணிக்கு ஒரு மீன் வீதம் 'குடிமகளுக்கு' கொடுப்பது அந்த மீனவர்களுக்குக் கஷ்டமான ஒன்றல்ல. பத்தில் ஒன்று என்ற விதத்தில் கோவில் மூப்பர் நாளாந்தம் நோட்டுக்களாக எடுத்துச் செல்லும்போது, கேவலம் இந்தப் பொடி மீனால்தான் என்ன கெட்டுவிடப் போகிறது.

முடிவில் சவுனத்தின் பங்குக் கூறலுக்கு விடப்படும்.அதை வாங்கி விடப் பலர் முயல்வர். ஏனெனில், அந்தக் கூடையில் இருப்பவை தெரிவு மீன்கள். ரகத்துக்கு ஒன்றாகச் சேர்ந்திருப்பவை! சவுனத்திற்குக் கிடைக்கும் அந்த வருவாய்ப் போதுமே இராஜ வாழ்வு வாழ!

சூசை முத்தனுக்கோ கவலையில்லாத வாழ்வு. அன்றாடம் கிடைக்கும் பணத்தை அவன் யாருக்காகவும் மீதப்படுத்த வேண்டியதில்லை.

அந்தச் சுற்றுவட்டாரத்துள் நாலு பேருக்கு மேல் கூடி நின்றால் அங்கே பரியாரி சூசை முத்தனைக் காணலாம்! எல்லோர் குரலுக்கும் மேலாக அவன் குரல் நிற்கும். தேசியம், சர்வதேசியம், இனவெறி, மொழிவெறி, நாத்திகம் இவைகளைப் பற்றியெல்லாம் அவன் பேசுவான். இவைகளை எப்படித்தான் கற்றுக்கொள்கிறானோ? விகடமாகக் கேள்விகள் போட்டு எல்லோரையும் மடக்கிவிடும் பேராற்றல் பெற்றவன் ஊருக்குள் சூசைமுத்து ஒருத்த[illegible]ன்.

ஊரில் நாத்திகம் பேசும் இளவட்[illegible]ங்களோடு சேர்ந்து கொண்டு கத்தோலிக்க பூடத்தின் சின்னத்தனங்களைப் பிய்த்துப் பிய்த்து வைப்பான். இதனால் ஊரில் இளவட்டங்களுக்குப் பணிந்து போகிறான் என்பதல்ல. சில வேளைகளில் இந்த இளவட்டங்களையே சாடித்தாவி மடக்கிவிடுவான்.

நேற்றைக்கு முதல் நாள் மூப்பருக்கும், இவனுக்கும் நாற்சந்திப்பில் தர்க்கம் தொடங்கிவிட்டது. ஒரு ஞானமலையும், ஒரு அஞ்ஞானமலையும் மோதிக்கொள்வதாக நினைத்துப் பெருங்கூட்டமே கூடிவிட்டது. அப்போது சூசைமுத்தன் மூப்பரை மடக்கினானே ஒரு மடக்கு!

'மோட்ச ராட்சியம் எப்படிப்பட்டது?'

இது சூசைமுத்தனின் கேள்வி.

'புனிதமானது. பசி பட்டினி, வஞ்சகம், சூது, பொறாமை எதுவுமே இருக்காத வீடு'

இது மூப்பரின் பதில்.

'மோட்சத்தில் பொறாமை இருக்காதல்லவா?'

'ஆமாம் !'

'கர்த்தரால் படைக்கப்பட்டு மோட்ச வீட்டுக்குள் விடப்பட்ட சம்மனசுகளில், ஏழு மண்டலம் சம்மனசுகள் பொறாமைப்பட்டதனால், கர்த்தர் அவர்களைச் சபித்து நரகத்துள் தள்ளினாரே அது எப்படி? மோட்ச வீட்டுக்குள் பொறாமை எப்படி வந்தது?'

மூப்பர் மடங்கிப் போய்விட்டார். தர்க்க ரீதியாக ஜனக்கூட்டம் ஒத்துக் கொள்ளக்கூடியதாக எதுவும் சொல்ல அவருக்கு ஞானத்திறமை இல்லை அவர் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு போய்விட்டார்.

சூசைமுத்தனின் வாழ்க்கையில் இப்படி எத்தனையோ! ஆனால், நேற்று நடந்து விட்டது மிகவும் பாரதூரமானது. ஊரின் நாற்சந்தியில்! இன்று அதிகாலையோடு மூப்பர் இவனை அழைத்துச் சென்ற போது, இதைப்பற்றி நேற்றைக்கு முதல்நாள் நடந்த தர்க்கத்தைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் இருக்க வேண்டுமென நினைத்துக்கொண்டு தான், சூசைமுத்தன் தலைநிமிர்ந்து மூப்பரோடு சென்றான். அங்கிருந்து திரும்பியபோது அவன் இப்படிச் சுண்டிப்போய் வந்திருக்கிறான்.

அன்னம்மாளின் மகளுக்கு நாளைக்குக் கல்யாணம். அன்னம்மாள் விதவையாக இருந்த காலத்தில்தான் திரேசு இவளுக்குப் பிறந்தாள். திரேசு பரியாரி சூசைமுத்தனின் மகள் என்றுதான் ஊருக்குள் பேசப்பட்டது. சாயலில் அவள் சூசைமுத்தனை ஒத்திருக்காதது மட்டுந்தான் இந்தப் பேச்சுக்கு ஒரு குறை. அவள் பெரிது பெரிதாக வரவர, அவள் கண்களில் ஒன்று தோற்றத்தில் பெரிதாகத் தெரிந்தது.

ஊருக்குள் முந்திய மூப்பரின் மகனான இப்போதைய மூப்பருக்குத் தான் தோற்றத்தில் கண இப்படி. 'அன்னம்மாளின் முழுவியளப் பயன் இது' என்றுதான் கதை பிறந்து அடிபட்டுச் செத்துப் போயிற்று.

'திரேசாவுக்குத் தந்தை இல்லை' என்ற குறையைப் போக்க, அந்தோனி என்பவன் அன்னம்மாளுக்கு இரண்டாந்தாரமாக வந்து சேர்ந்தான் என்று சொல்லி விடமுடியாது. ஏதோ அவனுக்கு அப்போதைக்கப் போது இதங்காண ஒரு துணை வேண்டியிருந்தது. அவனின் மனைவிதான் செத்துப்போனாளே!

ஒதுக்குப் புறச் சதுப்பு நிலத்தில் விளைந்து வரும் அட்டையைப் போல, திரேசு மினுமினுப்பாக வளர்ந்து கல்யாண வாயிற்படியில் நிற்கிறாள்.

ஊருக்குள் இருந்து யாரும் வெளியே பெண் கொடுக்கக்கூடாது. இது பண்டுதொட்டு வந்த வழக்கம். இதை ஒரு மரபாக்கி, இதைக் கட்டிக்காத்து வந்தவர்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டோ, அல்லது இயலாத் தன்மையினாலோ அன்னம்மாள் மட்டுந்தான் தன் மகளை வெளியூரவனுக்குக் கொடுக்கப் பேரகிறாள்.

மரபை மீறிய இந்தச் செயலைத் தடுக்க முற்பட்டவர்கள் அன்னம்மாளை அணுகிய போது எல்லோருக்கும் அன்னம்மாள் சொன்ன பதில் இதுதான்.

'நீங்க என்ர புள்ளையைக் குடிமோனுக்குப் பிறந்த பிள்ளையெண்டு ஊரெல்லாம் சொல்லிக் கெடுத்துப் போட்டியள். அவள் குடிமோனுக்குப் பிறக்கேக்க நீங்க என்ன பார்த்துக்கொண்டா நிண்டீங்க? அதைக் கடவுள் கேட்பார். சரிசரி இப்பெண்டாலுஞ் சொல்லுங்க, யாரெண்டாலும் அவளை எடுத்துக்கொள்றதாயிருந்தால் இந்த கல்யாணத்தை விட்டுறன். என்ன சொல்லுங்கோவன்?'

இந்தக் கேள்விக்கெல்லாம் ஒழுங்கான பதில் கிடைக்கவில்லை. பதில் கூறமுடியவுமில்லை. இவர்களால் முடிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். குருவானவர் வரட்டாமென்று சூசைமுத்தனைக் கல்யாண வீட்டிற்கு வர வேண்டாமென்று தடுத்து வைத்து. குடிமகன் இல்லாப் பந்தியில் இருக்க முடியாதென்று சொல்லி எல்லோரும் வெளியேறி விட வேண்டுமென்பதுதான்.

மரபு மீறியவளைச் சேர்த்துக்கொள்ள, இன்று காலை ஊரே சேர்ந்து சூசைமுத்தனுக்கு விடுத்த பணிவானதும் - அதிகாரமானதுமான வேண்டுகோள் இதுதான்!

சூசை முத்தன் இந்த வேண்டுகோளுக்குச் செவி மடுக்க வேண்டும். மதிப்பிற்குரிய கட்டளைக்குப் பணிந்து போக வேண்டும்!

சூசை முத்தன் திண்ணையோடு முடங்கிக் கிடந்தது. தாய்க்கிழவி சவுனத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. 'குருவானவர் அவனை மனந்திரும்ப வைத்துவிட்டார்' என்ற நினைவினால் அவள் சற்றுவேளை இன்பமடைந்தாள்.

மாலைவரை அவன் அப்படியே குப்புறப்பத்து உழலும் போதும், அந்த இன்பம் நிலைக்கவில்லை. அவன் உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதாக நினைத்து அவனைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள்:

'எணை, சும்மா போய் உன்ரை அலுவலைப் பாரெணை!' அவன் சீறி விழுந்ததும் அவள் ஒதுங்கிக்கொண்டாள்.

இரவு வந்தது.

அன்னம்மாளின் கணவன் அந்தோனி வந்தான்.

'என்ன சூசைமுத்து, என்ரை வீட்டுக் கலியாணத்தைக் குழப்பவா போகிறாய்? ஊருக்கை கதை நடக்குது!'

இப்படி அவன் கேட்டான். சூசைமுத்தன் பேசவில்லை.



ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தனித்துவ முத்திரை பதித்த படைப்பாளி. சிறுகதை, குறு நாவல், என இவரது எழுத்தாற்றலும் தமிழிலக்கிய உலகில் பதித்த தடங்கள் 'தலித்' இலக்கியத்தின் பிதாமகன் என இவரை அடையாளப்படுத்தியுள்ளன. அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வெழுச்சிக் குரலால் இவரது படைப்புக்கள் அனைத்தும் கம்பீரம் காட்டி நிற்கின்றன, என்றால் மிகையல்ல. அவரது சிறுகதைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றான இப்படைப்பினை சமகாலங்களின் பார்வைக்கு தேடித் தருவதில் தீபம் பெருமையடைகின்றது.

'சூசை முத்து, என்ரை மகளின்ரை நன்மையைக் குழப்பிப் போடாதை!"

மீண்டும் அந்தோனிதான் பேசினான். சூசைமுத்தன் பேசவில்லை. சற்றுவேளைக்குப் பின் அந்தோனி மன அலுப்போடு போய் விட்டான். யாரோ ஒருவனுக்காய்ப் பிறவாமல், பிறந்துவிட்ட திரேசுவைத் தன்மகளென்று கூறுபவனை மறுபடியும் சூசைமுத்தன் நினைத்துப் பார்த்தான். அவன் மனது அழுதது.

இரவெல்லாம் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

விடிந்தபோது கோவில் பக்கமாக நான் கைந்து வெடிகள் கேட்டன. அங்கே பலிபீடத்தின் முன்னால் திரேசுவுக்கு மெய்விவாகத் திருச்சடங்கு நடக்கிறது.

அப்போது சூசைமுத்தன் கண்ணயர்ந்து போனான்.

ஆனாலும் அந்த வெடிகளின் அதிர்ச்சி அவனை விழிக்க வைத்தது. சற்று வேளைக்குப் பின்பு அந்தோனி வீட்டிலிருந்து ஆள் வந்தது. அவனை அழைத்து வரும்படி அந்தோனி அனுப்பியிருந்தான்.

சூசைமுத்தன் எதுவும் பேசவில்லை. 'என்ரை அலுவல் எனக்குப் பார்க்கத் தெரியும். நீர் போம்!' இப்படி மொட்டையாகச் சொல்லி அவனை அனுப்பிவிட்டான்.

பத்து மணிக்கெல்லாம் வேறொருவன் வந்தான். அப்போது சூசை முத்தன் வீட்டில் இல்லை. வந்தவன் வெறுமனே திரும்பி விட்டான்.

தாய்க்கிழவி சவுனம் சொன்னாள். 'அவன் ஒருத்தருக்கும் நியாயீனஞ் செய்யான் ராசா. நீ போ அவன் வருவான்.' கலியாண வீட்டில் பெரும்பரபரப்பு.

குடிமகன் சூசைமுத்தன் பந்திக்கு வரவில்லை.

பந்தி வைக்கும் நேரம்!

பெண்கள் வட்டாரத்திலிருந்து குசுகுசுப்பு வந்தது.

'குடிமோன் இல்லாவீட்டிலை நாம் வாய்நனைப் போமோ?' இப்படியொரு குரல்!

'இனிப்பரியாரி வரமாட்டான் போல மோனை!'

இப்படி ஒருத்தி புறப்பட ஆள் சேர்த்தாள்.

பந்தல் முகப்பிலே சூசை முத்தன் தோன்றினான். கண்கள் வழமையை விடச் சிவந்திருந்தன. பலர் முகங்கள் ஏமாற்றத்தால் கறுத்துப் போயின.

அந்தோனி ஓடிச்சென்று அவனை வரவேற்றான்.

அவன் உடம்பை அந்தோனி சந்தனக் குழம்பால் கழுவினான்.

ஆனந்தப் பெருக்கால் அந்தோனியின் உடல் வெடவெடத்தது.

அன்னம்மாள் சூசைமுத்தனுக்கு முன்னால் வந்து, அந்த மகிழ்ச்சியில் கலந்து கொண்டாள்.

சற்று வேளைக்குள் பந்தி வைக்கப்பட்டது. தோல்வியை வெற்றிகரமாகச் சமாளித்துக் கொண்டு எல்லோரும் பந்தியில் இருந்தனர். அவர்களால் சூசைமுத்தனை நிமிர்ந்துகூடப் பார்க்க முடியவில்லை.

ஆமைக் குழம்பின் வாசனை மூக்கைத் துளைத்தது. ஆனாலும் எல்லோரும் சூசை முத்தனின் அனுமதிக்காகக் காத்திருந்தனர்.

சூசைமுத்தன் தலைப்பந்தியில் இருந்தான்.

'என்ன பரியாரி எல்லாஞ் சரிதானே?" நடுப் பந்தியிலிருந்த மூப்பர் முறைப்படி கேட்டார்.

சூசைமுத்தனின் உடல் நிமிர்ந்தது. முன்னும் பின்னுமாகப் பார்த்தான். அடிப் பந்தியிலிருந்து தலைப்பந்திவரை அதன் பின் வாயிற்படிவரை பார்வையை வீசினான். அங்கே அன்னம்மாளும், அந்தோனியும் நின்றனர்: அவர்களின் பரிதாபப் பார்வைகள் இவன் நெஞ்சை ஊடுருவி விட்டிருக்க வேண்டும்!

'என்ன பரியாரி எல்லாஞ் சரிதானே?'

மூப்பரின் குரல் மறுபடியும் கேட்டது. இன்னும் ஒரு தடவை. ஒரே ஒரு தடவைதான் மூப்பர் இப்படிக் கேட்பார். அதற்கிடையில் சூசைமுத்தன் தனது ஆட்சேபனையைத் தெரிவித்துவிட வேண்டும். யாராவது இருக்கக் கூடாதவன்- அதாவது, ஊரின் மரபை மீறியவன், மசுவாதுக்காரன், என்ன விதத்திற்குட்பட்டவர் இருக்கிறார் என்பதை அனுமானித்துச் சொல்லிவிட வேண்டும்.

மறுபடியும், மறுபடியும் அவன் கண்கள் பந்தியை நோக்கிப் பாய்ந்து, வழியில் படியில் ஓய்வுகண்டன.

இப்போ அன்னம்மாளுக்கும், அந்தோனிக்கும் நடுவே திரேசு.

அவள் வாக்குக்கண் கண்ணீரால் முட்டி நின்றது.

அவள் மணப்பெண் கோலத்தில் நின்றாள்.

அவள் முகம் வெளுத்துப்போய் இருந்தது.

சற்றுவேளை உலகமே மௌனத்தல் புதைந்துவிட்டது போன்ற நிலை. எல்லோர் மூச்சுக்களும் சூசைமுத்தன் நெஞ்சிலே மோதுவது போன்ற பிரமைதட்ட, அவன் மூப்பரை ஏற இறங்கப் பார்த்தான்.

மூப்பரின் வாக்குக்கண் சூசைமுத்தனுக்கு முன்னால் பளிச்சிட்டு மின்னியது.

'என்ன பரியாரி எல்லாஞ் சரிதானே?'

மூப்பரின் கடைசிக்குரல் எழுந்து மடிந்தது.

'மூப்பர் இந்தப் பந்தியிலை இருக்கக் கூடாது. அவன் எழும்ப வேணும்!'

சூசைமுத்தன் நிதானமாகச் சொன்னான்.

இது யாராலும் எதிர்பார்க்கப்படாத ஒன்று.

சற்றுவேளை ஏற்பட்ட கலகலப்புக்குப் பின் ஆக்ரோசத்துடன் அவன் மூப்பரின் பக்கம் திரும்பினான்.

அங்கே மூப்பர் இல்லை. பார்வையை மேலே போகவிட்டான் சூசைமுத்தன். வீராவேசத்துடன் மூப்பர் பந்தல் முகப்புக்கப்பால் போய்க் கொண்டிருந்தது. நன்றாகத் தெரிந்தது.

'பரியாரி, மூப்பரை ஏன் பந்தியை விட்டு எழுப்பினாய்?'

வழக்கமில்லாத ஒரு கேள்வி. ஆனாலும் ஒருவன் கேட்டான்.

'மூப்பர் இந்த வீட்டு மசுவாதுக்காரன்!'

இப்போது சூசைமுத்தனின் குரல் வானம்வரை தாவியது.

இது வெளியே செல்லும் மூப்பரின் காதுவரை கேட்க வேண்டுமென்றுதான் சூசை முத்தன் நினைத்திருக்க வேண்டும்.

# இஞ்சியின் மகிமை



சுக்கு, மிளகு, திப்பிலி என்பது திரிகடுகம் எனும் கூட்டு மருந்தாகும். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூலிகைகள் உடலுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கிறது. இஞ்சி மஞ்சள் போலவே இருக்கும் ஒரு விவசாய பயிராகும். வேரில் மஞ்சள் போலவே இருக்கும். இது பல நோய்களுக்கு அருமருந்தாக உள்ளது. ஜலதோஷம் நோய்க்காரணி யான வைரஸைத் தாக்கி அழிக்கிறது் தலைவலியைப் போக்குகிறது இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது்

கொழுப்புச்சத்தைக் குறைக்கிறது மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டி இருதய, சுவாசத் தசைகள் சீராக இயங்க உதவுகிறது.

மலச்சிக்கல் ஏற்படுவதைத் தடுக்கிறது. செரித்தலைச் சீராக்கி வயிற்றுவலி ஏற்படுவதைத் தடுக்கிறது.

மகளிரின் கருப்பை வலிக்கும், மாதவிலக்கு நேரங்களில் அடிவயிற்றில் உண்டாகும் வலிகளுக்கும் நன்மருந்தாக உள்ளது.

தோலில் உண்டாகும் உலர்சருமம், காயங்கள், சிரங்குகள் போன்றவற்றிக்கும் இது நல்ல மருந்தாகும். இஞ்சியானது பசியைத் தூண்டுவதுடன், தேவையற்ற கழிவுகளை வெளிக் கொணர பேருதவி புரிகிறது. உடலின் ஜீரண உறுப்புகள், சிறுகுடல், பெருங்குடல் உள்ளிட்டவை இஞ்சி சாறு மூலம் சுத்தப்படுத்தப்படுகிறது. பெரும்பாலான நோய்களுக்கு காரணமாக இருக்கும் மலச்சிக்கலை அறவே அகற்றி உடலுக்கு புத்துணர்ச்சியை தருகிறது.

பொதுவாக அசைவ உணவு வகைகளை சமைக்கும்போது, வெள்ளைப்பூண்டும், இஞ்சியும் அதிக அளவில் சேர்த்து சமைப்பார்கள். இஞ்சியின் மருத்துவக் குணங்களில் முக்கியமான

ஒன்று உடலின் செரித்தலை துரிதப்படுத்துதல் ஆகும். இஞ்சி சாறை பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும். இஞ்சியை நன்றாக சுட்டு, அதை நசுக்கி உடம்பில் தேய்க்க பித்த, கப நோய்கள் தீரும். இஞ்சி சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும். ஆக மூன்று

தோஷத்தையும் நீக்கும் ஆற்றல் இஞ்சிக்கு உண்டு. காலையில் இஞ்சி சாறில், உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்த தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும். இஞ்சி சாறோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்துவர தொப்பை எனும் பெருவயிறு கரைந்து விடும். இஞ்சி சாறில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தி கூடும். உற்சாகம் ஏற்படும். இளமை பெருகும்.

இஞ்சி சாறுடன், வெங்காய சாறு கலந்து ஒரு வாரம், காலையில் ஒரு கரண்டி வீதம் குடித்துவர நீரிழிவு குறையும். இதய நோயாளிகளுக்காக இந்திய மருத்துவக் கழகம் சமீபத்தில் ஒரு ஆய்வுச் செய்தியை வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் உணவில் ஐந்து கிராம் இஞ்சியைச் சேர்த்துக் கொள்வது, இதய நோயாளிகளுக்கு மாரடைப்பை வராமல் காக்கும் என்கிறது அந்தச் செய்தி.

பொதுவாக நாம் அரிசியையே பிரதான உணவாகத் தினமும் உண்டு வருகிறோம். இப்படிப் பல ஆண்டு காலம் அரிசியை தினசரி உணவாகக் கொள்பவர்களுக்கு, 'பைப்ரினோலிடிக்' செயற்பாடு குன்றி, இரத்தக் குழாய் அடைப்பைக் கரைக்கும் நடவடிக்கையில் சுணக்கம் ஏற்படுவதாகவும், இதனை இஞ்சி சரி செய்வதாகவும் இந்த ஆய்வுச் செய்தி தெரிவிக்கிறது.

இஞ்சியானது இதய இரத்தக்குழாய்கள் எதிலும் அடைப்பு உண்டாகாமல் தடுத்தும், மேலும் உண்டாவதைக் கரைத்து உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இஞ்சியையும், சுக்கையும் உபயோகிக்கும் போது, அதன் தோலை நீக்குவது மிக முக்கியமானது. இல்லை எனில் மாறாக வயற்றுக் கடுப்பு முதலியவை ஏற்படும்.

இஞ்சியை சுத்தம் செய்யும்போது அதன் மேல் தோலை நன்றாக நீக்க வேண்டும் அதன் மேல் தோல் நஞ்சாகும். அதே போல் சுக்கை சுத்தம் செய்யும்போது அதன் மேல் சுண்ணாம்பை தடவி காயவைத்து பின் அதை நெருப்பில் சுட்டு பின் அதன் தோலை நன்கு சீவி எடுக்கவேண்டும். இது மிக முக்கியமானது் சுத்தம் செய்யாமல் உபயோகிக்க வேண்டாம்.

இஞ்சியை சுத்தம் செய்து மேல்தோலை நீக்கிவிட்டு சிறு துண்டுகளாக நறுக்கி 150 கிராம் எடுத்து, அத்துடன் சுத்தமான தேனையும் அதே அளவிற்கு சேர்த்து நான்கு நாள் கழித்து தினமும் ஒன்றிரண்டு துண்டுகளாக ஒரு மண்டலத்திற்கு சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியம் அடைந்து, பித்தம் முழுவதுமாக நீக்கப்பட்டு விடும். ஆயுள் அதிகரிப்பதுடன் முகப்பொலிவும், அழகும் கூடும்.


மலபார் இஞ்சி முறபா பெயர் பெற்றது. இஞ்சியைப் பக்குவம் செய்து சர்க்கரைப் பாகுடன் பதப்படுத்தித் தயாரிப்பது. இது நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். இதனால் வயிற்று உப்புசம், புளியேப்பம், வாந்தி, குடல் கோளாறு, கப நோயால் மார்பில் சளி சேர்ந்து இரைப்பு நோய் தொல்லை வரும்போது மிக்க பயன் தரும். இஞ்சி முறபா தின்பதற்கும் ருசியாக இருக்கும்.

தினம் ஒரு துண்டு இஞ்சியை அரைத்து ஒரு டம்ளர் மோரில் கரைத்துக் குடித்தால் இடுப்புப் பகுதியில் கொழுப்பு சேராமல் பார்த்துக்கொள்ளும். சேர்த்த கொழுப்பையும் கரைக்கும். எந்த பானம் குடித்தாலும், அதில் ஒரு கரண்டி இஞ்சி சாறை கலந்து குடியுங்கள். 40 வயதுக்கு பின் மூச்சை பிடித்துக்கொண்டு அவஸ்தைப்பட வேண்டாம்.

---

# மஞ்சள் மகிமையை அறிவோமா?

நம் உடலை நோயிலிருந்து காக்கும் திறன் மஞ்சளுக்கு உண்டு. மஞ்சள் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது் தொற்று ஏற்படாமல் தடுக்கும் மாபெரும் சக்தி மஞ்சளுக்கு உண்டு. இதனால் தான், இந்து கலாசாரத்தில் முதன்மையான முக்கியத்துவம் மஞ்சளுக்கு



கொடுக்கப்படுகிறது. ஆயுர்வேத மருத்துவத்தில் அதிகளவில் மஞ்சள் பயன்படுத்தப்படுகிறது. நிம்மதியைக் கொடுக்கும் திறன், மஞ்சளின் வாசனைக்கே உரிய குணம். அதன் நிறம் தைரியத்தை கொடுக்கும். மஞ்சள் கிழங்கின் இத்தகைய பெருமை பற்றி யாரும் கண்டு கொள்வதாய் இல்லை. மஞ்சள் பூசிய முகத்திற்கு முன்பெல்லாம் அதிக மவுசு உண்டு. இப்போது கிராமப் பெண்கள் தான் மஞ்சள் பூசுகின்றனர் அதுவும் ஒரு சிலரே.

இந்திய கலாசாரத்தில் மஞ்சளின் முக்கியத்துவம்: இந்து கலாசாரத்தில், சமையலில் மஞ்சள் பயன்படுத்தப்படுவது போல் மற்றவர்கள் பயன்படுத்தவில்லை என்றாலும், அதன் மருத்துவ குணம் கருதி, மருந்துகளில் மஞ்சள் கலந்து தயாரிக்கும் பழக்கம் உலக நாடுகளில் காணப்படுகிறது. மஞ்சள் நிறத்திற்கு அறிவையும், சாதுர்யத்தையும் வளர்க்கும் ஆற்றல் உண்டு. எனவே தான், போட்டிகள், தேர்வுகள், நேரடித் தேர்வுகளைச் சந்திக்கும் நாட்களில் மஞ்சள் நிற ஆடை அணிவது நல்லது என்று சொல்லப்படுகிறது.

ஆனால், "ஆண்கள் மஞ்சள் பயன்படுத்துவதில்லை. ஏன்? ஆற்றலின் வடிவமாய் விளங்கும் பெண்களுக்கு மஞ்சள் அவசியம் இந்த ஆற்றலை வழிநடத்தும் ஆண்களுக்கு மஞ்சள் அவசியமில்லை' என்று, ஜகதீச அய்யர் என்பவர், இந்தியர்களின் கலாசாரம் குறித்த தனது புத்தகத்தில் எழுதியுள்ளார். அறுவடை திருநாளான பொங்கல் பண்டிகையின் போது, பொங்கல் பானையில், மஞ்சள் செடி மங்கல அடையாளமாக கட்டப்படுகிறது. மஞ்சள் கட்டப்பட்ட பானையில், பொங்கும் பொங்கல், அந்த வீட்டின் வளத்தை குறிப்பதாகக் கருதப்படுகிறது.

பண்டிகைகள், விழா கொண்டாட்டங்கள், நற்காரியங்கள் அனைத்திலும், மஞ்சள் சிறப்பிடம் வகிக்கிறது. குங்குமம், வெற்றிலை, பாக்கு, பிளவுஸ் துணி, பழங்கள் மற்றும் பரிசு பொருட்களுடன் மஞ்சள் கிழங்கு வைத்து விருந்தினர்களுக்கு, குறிப்பாக திருமணம் போன்ற நல்ல காரியங்களின் போது வழங்கும் வழக்கம், இந்துக்கள் மத்தியில் காணப்படுகிறது. மஞ்சளின் புனித தன்மையால், அவற்றை திருமணத்தில் கட்டப்படும், மாங்கள நாண் எனப்படும் "தாலிக் கயிறில்' பூசப்படுகிறது.

சமையலில் மஞ்சளின் பயன்பாடு

இந்தியர்களின் சமையல்களிலும், மஞ்சள் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. மஞ்சள் பயன்படுத்தாத, இந்திய சமையல்களை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. இது இயற்கையான நிறமியாக இருப்பதால், பெரும்பாலான உணவு பதார்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் தென்பகுதிகளில், சாம்பார், முட்டைகோசு கறி போன்றவற்றை, மஞ்சள் அதிக சுவையுடையதாக ஆக்குகிறது. அதேபோல், வடஇந்தியர்கள் கொழுக்கட்டையில் மஞ்சளை பயன்படுத்துகின்றனர். இது ஊறுகாயை பதப்படுத்தி பாதுகாக்கவும் உதவுகிறது.

அழகு சாதனமாக பயன்படும் மஞ்சள்

வெகு காலமாகவே இந்தியப் பெண்கள் தங்கள் முகத்தையும், உடலையும் அழகுபடுத்திக் கொள்ள மஞ்சளைப் பயன்படுத்தி வருகின்றனர். முகத்தில் மாசு, மரு நீக்கி பொலிவு கொடுப்பதில் மஞ்சளுக்கு நிகர் வேறில்லை.மஞ்சள் இயற்கை சன்ஸ்கிரீனாக பயன்படுவதால், இந்திய பெண்கள் தோலுக்கு ஊட்டமளிக்கும் பொருளாக பயன் படுத்துகின்றனர். இது முகத்தில் ரோமங்கள் வளர்வதை தடுப்பதோடு, இயற்கை "ப்ளீச்'சாக செயல்பட்டு கடினமான கையை மென்மையாக்குகிறது. இன்னும் சில வீடுகளில் எறும்புகள், பூச்சிகள், கரையான்கள் போன்றவை வராமல் தடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

மஞ்சளின் மருத்துவ குணம்:

* வயிற்றுப் புண்ணை மஞ்சள் ஆற்றும்.
* உடலின் எந்த இடத்தில் கட்டி இருந்தாலும், அதன் மீது மஞ்சள் பூசி, ஒரு இரவு ஊறினால், கட்டி பழுத்து, சீழ் வெ்- ளியேறி விடும்.
* ரத்தத்தைச் சுத்தப்படுத்தும் குணமும் மஞ்சளுக்கு உண்டு.
* உடலுக்கு நிறத்தைக் கூட்டும் தன்மை கொண்டது.
* மிகச் சிறந்த கிருமி நாசினியாக விளங்குகிறது.
* மஞ்சளை தீயில் சுட்டு, அதன் புகையைச் சுவாசித்தால், மூக்கடைப்பு விலகி, சளி நீங்கும்.

- ஆந்தைரிப்போட்டர் -



# சென்னையில் மார்கழி மாத சங்கீத விழா உற்சவம்

இ.குமாரசுவாமி சர்மா
(ஓய்வு நிலை உதவிப்பணிப்பாளர்)





மாதங்களில் நான் மார்கழியாகின்றேன் என்ற மாதவனின் வாக்குக்கிணங்க, சென்னை மாநகரில் ஆண்டுதோறும் மார்கழியையும் மாதவனையும் வரவேற்பதற்கென, சங்கீத இசைக் கச்சேரிகள் கலை கட்டிவிடும். அதற்கு இம்முறையும் விதி விலக்கல்ல. இம்முறை மார்கழி மாத சங்கீதக் கச்சேரியானது சென்னையில் மயிலாப்பூரை அலங்கரித்தது. அலங்காரத் தோரணைகள் கண்ணுக்கு விருந்தளிக்க நல்ல கர்னாடக இசைக் கச்சேரி கள் செவிக்கு விருந்தளித்தன. இதனைக் கண்டுகளிக்கவேன பல இசைப்பிரியரும் வந்திருந்தனர்.

மயிலாப்பூரில் பிரசித்தி பெற்ற, மியூசிக் அகடமி, நாரதகான சபா, ஸ்ரீ பார்த்த சாரதி சுவாமி சபா, கிருஷ்ணகான சபா, வாணி மஹால், பிரம்மகான சபா, பாரதி வித்தி யாபவன் கலாரசனா, தமிழ் இசைச் சங்கம் போன்ற மண்டபங்களில் இந்த கச்சேரிகள் நடைபெற்றன. பக்கவாத்தியங்களுக்கெனவும் இசைக்கலைஞர்களை வாசித்திருந்தனர். காலை, மாலை, இரவு என மூன்று வேளை களிலும் மயிலாப்பூர் முழுவதும் கானமழையால் நனைந்தது. பெரும்பாலும் மாலையிலேயே பெருந்திரளான மக்கள் இசைக்கச்சேரிக்கு வருகை தந்திருந்தனர். இதற்கு காரணமாக மிகப் பெரும் கலைஞர் களின் இசைநிகழ்ச்சிகள் ஒழுங்கு படுத்தப் பட்டிருந்த மையைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இக்கச்சேரியில் கலந்துகொண்ட இசைக்கலைஞர்களாக, சஞ்சேய் சுப்ரமணியம், ரி.வி.சங்கரநாராயணன், உன்னிக்கிருஷ்ணன், நெய்வேலி சந்தான கோபாலன், - மல்லாடி சகோதரர்கள் கே.ஜே.யேசுதாஸ், என்.விஜேசிவா -கர்நாடகசகோதரர்கள் - சிக்கல் குருசரண், ரி.வி.கோபால கிருஷ்ணன் - ஹைத்திராபாத் சகோதரர் களான ஓ.எஸ். அருண், ரி.எம். கிருஷ்ணா அருணா சாய்ராம், ரஞ்சனி காயத்திரி சுதா ரகுநாதன், டாக்டர் எஸ்.சௌமியா, டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன், காயத்ரி வெங்கட் ராகவனன் .காயத்திரி கிருஷ் எஸ்.மகதி அசோக் ரமணி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

வளர்ந்து வரும் இளங்கலைஞர்களான குன்னக்குடி எம் பாலமுரளிகிருஷ்ணா, சித்ஸ்ரீராம் பரத்சுந்தர், ஏ.எஸ். முரளி, எஸ். சாகேதராமன், திருச்சூர் சகோதரர்கள் கச்சேரியும் நடைபெற்றது. அதேநேரம் ரஞ்சினி, காயத்திரி சகோதரிகளின் இசை நிகழ்வு ரசிகர்களினால் பலத்த பாராட்டினைப் பெற்றமை சிறப்பம்சமாகும்.

லால்குடி- சி.ஜே.ஆர். கிருஷ்ணன், லால்குடி- விஜய லஷ்மி கணேஷ் குமரேஷ், வயலின்- ராஜேஷ் வைத்யா, வீணை -எஸ். சஷாங், புல்லாங்குழல் - என். ரவிக்கிரன், சித்ரவீணை - எல். சங்கர், வயலின் - ஏ.கன்யாகுமாரி ஆகியோர் சிறப்பாக தனிவாத்தியம் வாசித்த முதல் தர இசைக்கலைஞர்களாவார்.

உமையாள்புரம் சிவராம், கே.வி. விரசாத், திருச்சி- சங்கரன், தஞ்சாவூர்- முருகபூபதி, திருவாரூர் -வைத்தியநாதன்,பி. கணபதிராமன், பூங்குளம் சுப்ரமணியம், மன்னார்குடி-ஈஸ்வரன், திருவாரூர் வைத்தியநாதன் பி. கணபதிராமன், பூங்குளம் சுப்ரமணியம், மன்னார்குடி ஈஸ்வரன், திருவாரூர்- பக்தவத்சலம் திருச்சூர் மோகன், கடம் என். கார்த்திக், ஜி.சந்திசேகர சர்மா ஆகியோர் சிறந்த இசைப்பாடகர்களின் கச்சேரிகளில் சிறப்பாக மிருதங்கம் கடம் என்பன வாசித்துப் பாரட்டுக்கள் பெற்றவர்கள்.

ஆயிரம் ரூபாயிலிருந்து நூறு ரூபாய் வரையில் அனுமதிச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டன. அதேநேரம் முன்கூட்டிய பருவச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளக் கூடிய விதமாக அமைந்தன். இந்த இசை நிகழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் உட்பட இலங்கையிலிருந்தும் பெருந்திரளான தமிழர்கள் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக சாதனையாளராக மாயா





- வாசினி -

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் என்று பாடிய பாரதி யின் தமிழ் வழிப் பேத்தி ஒருத்தி இன்றைக்கு உலகலாவிய ரீதியில் மேற்கத்தேய இசைத்துறையில் கொடிகட்டிப் பறக்கின்றாள் என்பது ஒட்டுமொத்த தமிழருக்கான பெருமையே - அதுவும் இலங்கைத் தமிழச்சி என்ற வகையில் நாங்களும் பூவோடு சேர்ந்த நாராக மாறலாம்.

இன்றைய உலகில் பெண் சாதனையாளர்கள் அதிகரித்துக்கு கொண்டு வருகின்ற நிலையில், அவர்களது சாதனைக்கான சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் மலிந்துவிட்டன என்றே கூறவேண்டும். ஆனால் இவர் நிகழ்த்தியதோ அரிதிலும் அரிதான சாதனை என்றே கூறிக்கொள்ள வேண்டும். அப்படியென்ன சாதனையை அவர் நிகழ்த்திவிட்டார். அவர் யார் என்ற கேள்விகள் மனதிற்குள் எழலாம்.

அவர் வேறு யாரும் அல்ல 'மாயா' என அழைக்கப்படும் மாதங்கி அருட்பிரகாசம். மேற்கத்தேய உலகில் இசைத்துறையில் புகழ் பூத்தவர்களுள் ஒருவர். உலகில் புகழ்பெற்ற 10 தமிழர்களுள் ஒருவர் என்ற பெருமையையும் இவருக் குண்டு. அதேநேரம், இம்முறை இறுதியாண்டுக்கான இசைப் பங்களிப்புக்காக பிரித்தானிய அரச குடும்பத்தினரால் வழங்கப்படும், M.B.E என அழைக்கப்படும், member of the order of the British Empire என்ற பதக்கத்தையும் வென்றிருந்தார். அவ்விருதானது இம்மாதம் 14 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பிரித்தானிய இளவரசர் வில்லியம் அவர் களின் கையால், லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் மாளிகை யில் வைத்து பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

1975 ஆம் ஆண்டு சூலை மாதம் 18 ஆம்திகதி, அருள்பிரகாசம் (அருளர்), கலா அருட்பிரகாசம் என்ற இலங்கையைச் சேர்ந்த தமிழ் தம்பதிகளுக்கு மகளாக, லண்டனின் அவுன்சுலோ என்ற நகரில் பிறந்தார். ஆறுமாத குழந்தையாக இலங்கைக்குத் திரும்பிய இவர், தனது 11 வயதில், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மீளவும் லண்டனை நோக்கி நகரவேண்டியேற்பட்டது. 2000 ஆம் ஆண்டுகளில் இசைத்துறை காலடி எடுத்து வைத்த இவர், பாடகி, இசையமைப்பாளர், இசைத்தயாரிப்பாளர், ஓவியர், வடிவமைப்பாளர் எனப் பல்துறை ஆற்றல் மிக்கவர்.

2004 ஆம் ஆண்டில் 'சண்ஷவர்', 'காலாங்' ஆகிய பாடல்கள் மூலமாக இசை ரசிகர்கள் மத்தியில் பிரபல்யமடைந்த இவர், 2005 ஆம் ஆண்டு 'அருளர்' என்று தனது தந்தையின் பெயரில் முதலாவது அல்பத்தை வெளியிட்டார். 2007 ஆம் ஆண்டு தனது 2 ஆவது அல்பத்தை தனது தாயாரான கலாவின் பெயரில் வெளியிட்டார். 'கலா' அல்பத்தில் இடம்பெற்ற 'பேப்பர் பிளேன்ஸ்' என்னும் பாடல் மாயா என்கின்ற மாதங்கி அருட்பிராகசத்துக்கு பிரிட்டன், கனடா, அமெரிக்க உட்பட மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்த இசை ரசிகர்கள் மத்தியில் பெருத்த வரவேற்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

இவர் இசைத்துறையில் முன்னிலைக் கலைஞர்களுள் ஒருவராக இருக்கின்ற நிலையில், 2012 ஆம் ஆண்டு அமெரிக்க தேசிய கால்ப்பந்தாட்ட லீக் இறுதிப் போட்டியில் சுப்பர் போல் இசை நிகழ்ச்சி நிகழ்த்திய பாடகி களுள் ஒரு- வராகும். இது பல கலைஞர்களின் கனவாக இருக்கின்ற பட்சத்தில் இவர் அதனை நனவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலா (2007), அருளர் (2005), மாதங்கி (2013), vicki leelx 2010, AIM, Piracy funds terrorism 2004, papel planes 2008, How many votes fix mix 2008 போன்ற இசை அல்பங்களை வெளியிட்டுள்ளதுடன், Studio Albums -05, Music video -28, EPs -2, Singls -33, mixtapass -2 களைப் பாடியுள்ளார். அதே நேரம் இவர் இதுவரை 27 விருதுகளை இதுவரையில் சுவிகரித்துள்ளார். இவரது பாடல்கள் 68 விருதுகளுக்கென பரிந்துரைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தையான அருளர் என அழைக்கப்படும் அருட்பிரகாசம் என்பவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும், ஈழப்புரட்சி அமைப்பின்(ஈரோஸ்) ஸ்தாபகர்களில் முக்கியஸ்தரும் ஆவார். 1977 களில் இவரால் எழுதப்பட்ட 'லங்காராணி' என்னும் நாவல் இனப்பிரச்சினை தொடர்பாக எழுந்த முதல் நாவலாகும். இவர் 03.12.2019 ஆம் ஆண்டு தனது 71 ஆவது வயதில் இறைபதம் எய்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1986 களில் லண்டனுக்கு இடம்பெயர்ந்த இவரது குடும்பம், அப்போதைக்கு சூழ்நிலை காரணமாக,
தாயாரும் தொழில் செய்ய வேண்டிய நிர்பந்த நிலை ஏற்பட்ட போது, ஆங்கில மொழியறிவு தேவைப்படாத தொழிலான தையற்தொழிலைத் தெரிவுசெய்தார்., கடந்த 30 வருட காலமாக அத்தொழிக்காகவும் தனது மகளின் இசைப் பயணச்சாதனைக்காவும் அவர் உழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


குறிப்பாக பிரித்தானிய அரசியார் வழங்கும் விருதுகளுக்கான, பதக்கங்களுக்கு ரிப்பன் தைக்கின்ற பணியினைச் செய்கின்ற, இரு பெண்களில் இவரது தாயாரும் ஒருவர். மாயா தான் பெற்ற விருதினை, தனது வாழ்நாளை தனக்காக அற்பணித்து, சொற்ப சம்பளத்தில் தொழில் செய்து தன்னை ஆளாக்கிய, தனது தாயாருக்கு சமர்ப்பிப்பதாக தனது இன்ஸ்டர் கிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கைக் காட்டூன் ஓவியக் கலைஞர்கள்

## விஜயசோம (Wijesoma)



**17** ஆம் திகதி புரட்டாதி மாதம் 1947 இல் பிறந்த இவர் முறையான கல்வியினை பெற்றதில்லை. யுத்த காலங்களில் அவரது கல்வி சீர்குலைந்திருந்தது. "எனது உண்மையான கல்வி பொது நூலகம் மற்றும் அருங்காட்சியகத்தில் இருந்தது" என்ற விஜயசோமவின் கூற்று இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. சிறு வயது முதல் ஓவியத்தில் ஆர்வமான இவர் பல்வேறு சித்திரப் போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்களும் பெற்றுள்ளார். இவர் ரைம்ஸ் பத்திரிகையில் காட்டூன்கள் வரைய




விரும்பினார். எனினும் அங்கே வே-றொருவர் அப் பணியைத் தொடர்ந்து வந்தமையால் இவரது ஆசை உடனடியாக



நிறைவேறாது போனது. இருப்பினும் மனம் தளராத இவர் கலை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளில் பங்குபற்றும் தனது பள்ளிப் பருவப் பழக்கத்தைத் தொடர்ந்தும் செய்து பல விருதுகளையும் வென்றார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்குக் காட்டூன் வரைய அதன் ஆசிரியர் கோரியபோது உடனேயே இலங்கையின் அரசியல்வாதிகள் உடன்வந்தார். அதிலிருந்து பல்வேறு அரசியல் காட்டூன்களைப் படைத்தார். இவற்றுள் அவர் வரைந்த பொக்கட் காட்டூன் "வட் எ லைஃப்" வாசகர்களிடையே பெரிதும் பிரமல்யமானது.

விஜயசோமவின் ஆரம்பகாலக் காட்டூன்கள் அக்காலப் போக்குகளுக்கு ஏற்ப எடுத்துக்காட்டுடன் ஒரு செய்தித் தலைப்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன. இவரிடம் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தினசரி காட்டூன் வரையும்படி வினவியபோது "நான் வறண்டு விடுவேனோ" எனப் பயந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.


இலங்கை போராடாமல் பெற்ற சுதந்திரத்தை வைத்துக்கொண்டு திகைத்துப்போன கொலட்டின் காட்டூன்கள் அந்தக் காலத்தின் பதிவுகளாய் இருந்தன என்றால் மிகவும் பயங்கரமான காலத்தின் பதிவுகள் விஜயசோமவின் காட்டூன்கள் எனலாம். இனப்பிரச்சனை இத் தீவு முழுவதிலும் குருதியை ஓடவிட்ட காலத்தில் 1980களில் இருந்து இற்றை வரையான பதிவுகளாக இவரது காட்டூன்கள் விரவிக் கிடக்கின்றன.



இவர் யுத்தத்தை வெடிகுண்டாகவும், திடீர் சம்பவங்களை இராணுவத் தொப்பியாகவும், விடுதலைப் புலிகள், தமிழர்களைப் புலிகளாகவும், பயங்கரவாதத்தினை T-56 ரகத் துப்பாக்கியாகவும் உருவகப்படுத்தித் தனது படைப்புக்களைச் சித்தரித்துள்ளார். "புஞ்சி சின்கோ" இவரது பிரதான பாத்திரப் படைப்பாகும்.

1950, 60 காலப்பகுதியில் "Times" பத்திரிகை நிறுவனத்திலும், 1970களில் "Lake house" நிறுவனத்துடனும் இணைந்து "Observer", "Silumina" பத்திரிகைகளிலும், மற்றும் "ஜனதா", "நவயுக" போன்ற பத்திரிகைகளிலும் காட்டூன் சித்திரங்களை வரைந்தார்.

1980களில் "The Island", "திவயின, போன்ற பத்திரிகைகளில் அரசியல் காட்டூன்களை வரையத் தொடங்கினார். பொதுவாக இவர் காட்டூனிஸ்ட்டாகப் பணிபுரிந்த பத்திரிகைகள் பெரும்பாலும் இனவாதப் பத்திரிகைகளாகக் காணப்பட்டமையினால் இவரது காட்டூன்களில் இனவாதம் உட்பொதிந்து வெளிக்கிளம்புவதைக் காணலாம். புலிகளை வரைந்தாலும் அதற்கு இவர் பொட்டு வைக்க மறப்பதில்லை. இப் பொட்டினை அனைத்துத் தமிழ்ச் சமூகத்தின் குறியீடாகவே கொள்ள முடியும். விடுதலைப் புலிகளுக்கு எதிராக என்று, அது ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்திற்கு எதிராக இவரது காட்டூன்களில் அமைந்து விடுவதைக் காணலாம்.







இவரது காட்டூன்கள் சாதாரண மக்கள் இயல்பாக விளங்கிக்கொள்ளும் வகையில் கருத்தாழம் மிக்கதும், அதேவேளை எளிமையான கோடுகளால் ஆனதுமாகக் காணப்படும். வசை பாடுதலுக்கும், பாராட்டுதலுக்கும், கொலை அச்சுறுத்தல் விடுவதுமான அரசியல்வாதிகளின் ஆதரவும், எதிர்ப்பும் மிக்க நபராக இவர் காணப்படுகின்றார். கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் காட்டூன் துறையுடன் உருக்கமான பார்வை கொண்ட காட்டூன் ஓவியராக விஜயசோம காணப்படுகின்றார்.



# தெருவாசகம்

இப்போது யாழ்பாணத்தில் நிறைய புத்தகங்கள் வெளிவருகின்றன...

⊙ ஆமாம் எழுத்தாளர்கள் கவிஞர்கள் கூடிப் போனார்கள் வாசகர்கள் தான் இல்லை

* * *

உங்கட மூத்தமகனுக்கு வெளிநாட்டுப் பொம்பிளை இருக்கு பேசி முடிப்பமே?
ஏன் அவவுக்கு வெளிநாட்டிலை மாப்பிளை இல்லையோ...?

⊙ அப்படியில்லை இங்கத்தைய மாப்பிள்ளை என்றால் அடக்க ஒடுக்கமாக இருப்பான் என்று பொம்பிளை பகுதி நினைக்கினம்

* * *

இப்ப ஊர் வெங்காயத்தின்ரை விலை உச்சம் எல்லோரும் வெங்காயம் செய்யத் துவங்கீட்டினம்...!

⊙ வெங்காயத்தின் உற்பத்தி உச்சம் என்றால் விலை குறைந்துவிடும் உற்பத்தி குறைந்தால் விலை கொடி ஏறிவிடும் இல்லையேல் வெங்காயத்தை இறக்குமதி செய்து விலையை குறைச்சுப் போடுவாங்கள் என்ன நாடோ என்ன அரசோ?

* * *

பஸ்ஸிலை இனிமேல் அரசாங்கம் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிற பாடலைத் தான் போட வேணுமாம...!

⊙ அப்ப இனி நேயர் விருப்பம் இல்லை அரச விருப்பம் தான் என்று சொல்லு

* * *

எங்கடை மண்ணில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தீராது போலிருக்கு ?

⊙ ஓ... இப்ப இருக்கிற அரசியல்வாதிகளை காணாமல் ஆக்கும் வரை அது சாத்தியமில்லை

# கிரக நிலையும் இராசி பலனும் இந்த வாரம்

ஜனவரி 26 முதல் பெப்ரவரி 01 வரை (தை 12 முதல் 18 வரை)



கணித்தவர்
ஜோதிட மாமணி, முனைவர் முருகு பால முருகன்
Dip in astro, B.L, M.A.astro. PhD in Astrology.
No: 19/33 வடபழனி ஆண்டவர் கோயில் தெரு,
தபால் பெட்டி எண் - 2255. வடபழனி,
சென்னை - 600 026 தமிழ்நாடு, இந்தியா.
cell: 0091 7200163001. 9383763001.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சுக்கி, | திருக்கணித கிரக நிலை | | |
| சனி, சந்தி சூரியன், புதன் | | | |
| கேது, குரு | செவ் | | |

## கிரக மாற்றம்

31-01-2020 கும்பத்தில் புதன் அதிகாலை 02.53 மணிக்கு

மேஷம் - 31-01-2020 மாலை 06.09 மணி முதல் 03-02-2020 அதிகாலை 05.40 மணி வரை.

## இவ்வார சந்திரன் சஞ்சரிக்கும் ராசிகள்

மகரம் - 24-01-2020 காலை 07.39 மணி முதல் 26-01-2020 மாலை 05.39 மணி வரை.

கும்பம் - 26-01-2020 மாலை 05.39 மணி முதல் 29-01-2020 அதி காலை 05.29 மணி வரை.

மீனம் - 29-01-2020 அதிகாலை 05.29 மணி முதல் 31-01-2020 மாலை 06.09 மணி வரை.

## இவ்வார சுப முகூர்த்த நாட்கள்

27.01.2020 தை 13 ஆம் தேதி திங்கட்கிழமை திருதியை திதி சதயம் நட்சத்திரம் சித்தயோகம் காலை 09.30 மணி முதல் 10.30 மணிக்குள் மீன இலக்கினம். வளர்பிறை

30.01.2020 தை 16 ஆம் தேதி வியாழக்கிழமை பஞ்சமி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் சித்தயோகம் காலை 07.30 மணி முதல் 09.00 மணிக்குள் கும்ப இலக்கினம். வளர்பிறை



**மேஷம் அசுவனி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்.**

எந்த ஒரு விஷயத்தையும் ஒளிவு மறைவின்றி மனம் திறந்து பேசும் குணம் கொண்ட மேஷ ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு ஜீவன ஸ்தான மான 10-ல் சூரியன், புதன் சஞ்சரிப்பதும், 11-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும் சிறப்பு என்பதால் உங்களுடைய மதிப்பும் மரியாதையும் மேலோங்க கூடிய வாரமாக இவ்வாரம் இருக்கும். குரு பார்வை ஜென்ம ராசிக்கு இருப்பதால் பண-வரவுகள் சிறப்பாக இருந்து உங்களுடைய அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நில வும். கணவன்-மனைவியிடையே இருந்த கருத்து வேறுபாடு கள் விலகி ஒற்றுமை அதிகரிக்கும். திருமண சுபகாரியங் களுக்கான முயற்சிகளில் அனுகூலமான பலன் கிடைக்கும். பொன் பொருள் சேரும். சிலருக்கு அசை யும் அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். வெற்றி தரும் நாட்கள் - 26, 27, 28, 1.



**ரிஷபம் கிருத்திகை 2,3,4-ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் 1,2-ஆம் பாதங்கள்.**

பிறர் தம் வார்த்தைகளில் குற்றம் குறை கண்டு பிடிக்காதவாறு பேசும் ஆற்றல் கொண்ட ரிஷப ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி சுக்கிரன் 10-ல் சஞ்சரிப்பதும் 9-ல் [illegible] சஞ்சரிப்பதும் சிறப்பு என்பதால் எதிர்பாராத உதவிகள் கிடை[illegible]து உங்களுக்குள்ள நெருக்கடிகள் எல்லாம் குறையும். 2-ல் ராகு, 7-ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் நெருங்கியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சுபகாரிய முயற்சிகளில் சாதகப் பலன் கிட்டும். எடுக்கும் முயற்சிகளில் எதிர் நீச்சல் போட்டாவது வெற்றி பெறுவீர்கள். தொழில் வியா-பாரம் செய்பவர்கள் கூட்டாளிகள் மற்றும் தொழிலாளர்களிடம் விட்டு கொடுத்து நடப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலையிருக்கும். எதிர்பார்த்த உயர்வுகள் கிடைப்பதில் சற்று கால தாமதமாகும். வெற்றி தரும் நாட்கள் - 27, 28, 29, 30, 31.



**மிதுனம் மிருகசீரிஷம் 3,4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ஆம் பாதங்கள்.**

எந்தவித கடினமான வேலைகளையும் பொறுப்புடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட மிதுன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6-ல் செவ்வாய், 7-ல் குரு சஞ்சரிப்பது தொழில் பொருளாதார ரீதியாக ஏற்றமிகுந்த பலன்களை தரும் அமைப்பாகும். புதிய வாய்ப்புகள் கிடைக்கப் பெற்று அபிவிருத்தியை பெருக்கி கொள்ள முடியும். திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் சில தடைகளுக்குப்பின் அனுகூலம் உண்டாகும். பணம் கொடுக்கல் - வாங்கலில் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி லாபம் அடைவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். ஒரு சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அமையும்.

வெற்றி தரும் நாட்கள் - 29, 30, 31, 1.



**கடகம் புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.**

கற்பனை திறனும் நல்ல ஞாபக சக்தியும் கொண்ட கடக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6-ல் கேது, 7-ல் புதன் சஞ்சரிப்பதால் எதிர்நீச்சல் போட்டாவது அடைய வேண்டியதை அடைந்து விடுவீர்கள். பணவரவுகள் தாராளமாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். குரு 6-ல், சூரியன், சனி 7-ல் சஞ்சரிப்பதால் ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்வது, வியாபார ரீதியாக செல்லும் பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களின் திறமைகள் பாராட்டப்படும். வெளியூர் வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரிய விரும்புபவர்களின் விருப்பங்களும் நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் அதிக ஈடுபாட்டுடன் செயல்பட்டால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும்.

வெற்றி தரும் நாட்கள் - 26, 1.



**சிம்மம் மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம்.**

தனக்கு நிகரில்லாதவர்களிடம் பழகுவதை தவிர்க்கும் குணம் கொண்ட சிம்ம ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி சூரியன், சனி சேர்க்கைப் பெற்று 6-ல் சஞ்சரிப்பதும் பஞ்சம ஸ்தானமான 5-ல் குரு சஞ்சரிப்பதும் அற்புதமான அமைப்பாகும். நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கக் கூடிய வாரமாக இவ்வாரம் இருக்கும். பணம் பல வழிகளில் தேடி வரும். சிலருக்கு சொந்த வீடு, வாகனம் வாங்க வேண்டும் என்ற எண்ணங்கள் நிறைவேறும். வியாபாரம் சிறந்த முறையில் நடைபெற்று லாபத்தை உண்டாக்கும். பெரிய மனிதர்களின் ஆதரவுடன் அனுகூலமான பலன்களை அடைவீர்கள். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதன் மூலம் அலைசலைக் குறைத்துக் கொள்ள முடியும். கொடுக்கல்- வாங்கலில் சரளமான நிலை இருக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள்.

வெற்றி தரும் நாட்கள் - 26, 27, 28.



**கன்னி உத்திரம் 2,3,4-ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2-ஆம் பாதங்கள்.**

எவ்வளவு அவசரமான காரியமாக இருந்தாலும் மற்றவர்களின் சௌகர்யங்களை ஆராய்ந்து செயல்படும் பண்பு கொண்ட கன்னி ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி புதன் பஞ்சம ஸ்தானமான 5-ல் சாதகமாக சஞ்சரிப்பதும் முயற்சி ஸ்தானமான 3-ல் செவ்வாய் சஞ்சரிப்பதும் உங்களுடைய முயற்சிகளுக்கு வெற்றியை தரும் அமைப்பாகும். குடும்பத்தில் நிலவிய பிரச்சி னைகள் விலகி மகிழ்ச்சி உண்டாகும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் பெரிய தொகைகளை ஈடுபடுத்தாது இருப்பது உத்தமம். உத்தியோகஸ்தர்கள் பணியில் திறம்பட செயல்பட்டு அனைவரின் பாராட்டுதல்களை பெறுவார்கள். எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கப்பெற்று மனமகிழ்ச்சி உண்டாகும்.

வெற்றி தரும் நாட்கள் - 27, 28, 29, 30.



**துலாம் சித்திரை 3,4-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்.**

வசீகர தோற்றமும், உறுதியான பேச்சாற்றலும் கொண்ட துலா ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2-ல் செவ்வாய், 4-ல் சூரியன், சனி சஞ்சரிப்பதால் பேச்சில் நிதானமாக இருப்பது நல்லது. உங்களுக்கு வீண் அலைச்சல், இருப்பதை அனுபவிக்க இடையூறுகள் ஏற்படக்கூடிய வாரமாக இவ்வாரம் இருக்கும். பணவரவுகள் சற்று ஏற்ற இறக்கமாக இருந்தாலும் தேவைகள் பூர்த்தியாகும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தும் போது சிந்தித்துச் செயல்படுவது உத்தமம். கொடுக்கல்-வாங்கல் போன்றவற்றில் கவனமுடன் செயல்பட்டால் வீண் விரயங்களை தவிர்க்க முடியும். உத்தியோகஸ்தர்கள் பணியில் நிம்மதியுடன் செயல்பட முடியும்.

வெற்றி தரும் நாட்கள் - 29, 30, 31, 1.



**விருச்சிகம் விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை.**

முன்கோபம் உடையவராகவும், எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும் விளங்கும் விருச்சிக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2-ல் குரு, 3-ல் சூரியன், சனி சஞ்சரிப்பதால் தாராள தனவர வுகள், நீங்கள் நினைத்தது நடக்கும் யோகம் இவ்வாரத்தில் உள்ளது. கடந்த கால நெருக்கடிகள் எல்லாம் விலகி சகல விதத்திலும் முன்னேற்றங்களை அடைவீர்கள். குடும்ப ஒற்றுமை ஓரளவு சிறப்பாக இருக்கும். சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் அனுகூலப் பலன் உண்டாகும். தொழிலில் சிறப்பான முன்னேற்றம் இருக்கும். பயணங்களால் பெரிய மனி தர்களின் நட்பும். புதிய வாய்ப்புகளும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகளில் தாமத நிலை ஏற்பட்டாலும் நல்ல நிர்வாகத் திறனுடன் கௌரவமாகப் பணியாற்ற முடியும்.

வெற்றி தரும் நாட்கள் - 26, 1.



**தனுசு மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்.**

பல சாதனைகளைப் படைக்கும் வல்லமையும், தற்பெருமையும் அதிகம் கொண்ட தனுசு ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2-ல் சூரியன், சனி, 12-ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் வரவுக்கு மீறிய வீண் செலவுகள் ஏற்படும் என்பதால் நீங்கள் எந்தவொரு காரியத்திலும் உணர்ச்சி வசப்படாமல் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்து செயல்பட்டால் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கலாம். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றி மருத்துவ செலவுகள் செய்ய நேரி டும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி இருக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. உற்றார் உறவினர்களை அனுசரித்து செல்வது உத்தமம். குரு பார்வை 7-ஆம் வீட்டிற்கு இருப்பதால் திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். மாணவர்கள் தேவையற்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. வெற்றி தரும் நாட்கள் - 27, 28.



**மகரம் உத்திராடம் 2,3,4-ஆம் பாதங் கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.**

மனதில் எவ்வளவு துயரங்கள் இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் அனைவரிடமும் சகஜமாக பழகும் குணம் கொண்ட மகர ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் புதன், 2-ல் சுக்கிரன், 6-ல் ராகு, 11-ல் செவ்வாய் சஞ்சரிப்பது அனுகூலமான அமைப்பு என்பதால் பணவரவுகள் சிறப்பாக இருந்து அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். கடந்த கால சோதனைகள் எல்லாம் மறைந்து வலமான பலன்களை பெறுவீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைத்து கடன் பிரச்சினைகள் குறையும். பொன் பொருள் சேரும். கணவன்- மனைவி விட்டு கொடுத்து நடந்தால் ஒற்றுமை சிறப்பாகவே இருக்கும். அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ள நேரிடும். கொடுக்கல்-வாங்கலில் சரளமான நிலை இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களை பெற்று மகிழ்ச்சி அடைவார்கள்.

வெற்றி தரும் நாட்கள் - 26, 29, 30, 31.



**கும்பம் அவிட்டம் 3,4-ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3-ஆம் பாதங்கள்.**

உண்மை பேசுவதையே குறிக்கோளாக கொண்டிருக்கும் கும்ப ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் சுக்கிரன், லாப ஸ்தானத்தில் குரு, கேது சஞ்சரிப்பதால் ஏற்றமிகுந்த பலன்களை அடைவீர்கள். தாராள தனவரவுகள் ஏற்பட்டு உங்களது அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபிட்சமும் நிறைந்திருக்கும். சிலருக்குச் சொத்து வாங்கக் கூடிய வாய்ப்பும் அமையும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றி நற்பெயரை எடுப்பீர்கள். செவ்வாய் 10-ல் இருப்பதால் தொழில் ரீதியாக லாபகரமான பலன்கள் கிடைக்கும். நல்ல வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் பணியில் திறம்பட செயல்பட முடியும். எடுக்கும் முயற்சிகளுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வெற்றி தரும் நாட்கள் - 27, 28, 1.



**மீனம் பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி .**

மற்றவர்களின் சுக துக்கங்களையும் தன்னுடைய சுக துக்கங்களாக நினைக்கும் பண்பு கொண்ட மீன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் சூரியன், சனி, புதன் சஞ்சரிப்பதால் எதிர்பாராத தன சேர்க்கைகள் ஏற்பட்டு உங்களது நீண்ட நாள் கனவுகள் எல்லாம் நிறைவேறும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் அனுகூலமான பலன்கள் உண்டாகும். தாராள தனவரவுகளால் அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். திருமண சுபகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சி அளிக்கும். கணவன்-- மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் பணியில் திறம்பட செயல்பட்டு உயர-திகாரிகளின் பாராட்டுதல்களை பெறுவார்கள். புதிய வேலை தேடுபவர்கள் கிடைப்பதை பயன்படுத்திக் கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்புடன் செயல்படுவார்கள்.

வெற்றி தரும் நாட்கள் - 26, 29, 30, 31.

# தகமையில்லாத் தகமைகள்

- மோகன் வைத்திலிங்கம் -

கீழ் காணும் விடயம் நகைச்சுவைக்காக எழுதப்பட்டதொரு விடயமாக இருந்தாலும் இது தற்போதைய அரசியலுக்கு வருபவர்கள் என்ன பின்னணியிலே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள் அல்லது தேர்ந்தெடுக்கப் பட்டு வருகிறார்கள் என்ற விடயத்தைப் புட்டுப் புட்டு வைப்பதனால் இதை இங்கு தருகிறோம். உண்மையில் இது ஒரு முகநூலில் வந்த ஆங்கிலப் பதிவு.அதை தமிழாக்கம் செய்திருக்கிறோம்.

ஒரு இந்தியக் குடிமகன் நேர்முகம் ஒன்றிற்குத் தோன்றுகிறான்.

"ஏன் நான் உன்னை இந்தத் தொழிற்சாலையின் முகமையாளராகத் தெரிவு செய்ய வேண்டும்?" - என்று நேர்முகம் செய்பவர் கேட்கிறார்.

பரீட்சார்த்தி "ஐயா எனது சிறு பராயத்தில் எனது பாட்டியை எமது வீட்டு வேலைகாரன் கொலை செய்துவிட்டான். (அவர் எனக்கு கால்பந்து விளையாட்டைக் கற்றுத் தந்தவர் என்று இன்னும் எனது நினைவில் இருக்கிறது) அதனால் நான் அவன் செய்கையில் மீது கோபமடைந்திருக்கிறேன். சிறிது காலத்தின் பின்னர் எனது தந்தையார் எமது வீட்டுப் பாது காவலனால் கொல்லப்பட்டுவிட்டார். அதனால் நான் இன்னும் அதிக கோபத்துடன் இருக்கிறேன். எனவே தயவு செய்து அந்த வேலையை எனக்குத் தாருங்கள்." என்று சொன்னார்.

நேர்முகம் செய்பவர் "உனக்கு என்ன பயித்தியமா? நீ உனது பாட்டியினுடைய மற்றும் தந்தையினுடைய கொலைகளை அடிப்படையாக வைத்து எப்படி இந்த முகாமையாளருக்குரிய வேலையைக் கேட்கலாம்." என்று கேட்க,

பரீட்சார்த்தி "இந்த நாட்டுக் குடிமகனான ராகுல் காந்தி இதே காரணங்களை வைத்துப் பிரதம மந்திரிக்கான பதவியைக் கேட்கும்போது ஏன் நான் அதே காரணங்களை வைத்து இந்தத் தொழிற்சாலையின் முகாமையாளர் பதவியைக் கேட்கக் கூடாது?" என்று சொல்கிறார்.

நேர்முகம் செய்பவர் ???????? !!!! ???? (அவர் தன்நிலையையும் தனது நாட்டின் தலைவிதியையும் எண்ணித் தலையில் கைவைத்துக் கொண்டார்.



இதைப் பார்க்கும்போது பல ஆண்டுகளுக்கு முன்னர் சிரித்திரன் இதழ் ஒன்றில் நகைச்சுவையாக வந்த அட்டைப் படம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்த ஒருவர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுகிறார். உனது தகமைகள் என்ன? என்று அங்கே கேட்கப்படுகின்றபோது பரீட்சார்த்தி சொல்வார் "மந்திரியின் சொந்தம்" என்பது தான் தனது உச்ச பட்சத் தகமை என்று. அந்தச் சித்திரம் ஒரு நகைச்சுவையாக வெளிவந்திருந்தாலும் வெளிவந்த காலப்பகுதியில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகள் அப்படியான தோற்றப் பாட்டையே கொண்டிருந்தன. ஒருவருக்கு அரச உத்தியோகம் ஒன்று கிடைக்க வேண்டுமாயின் அவருக்கு ஆழுங்கட்சி அரசியல் பின்னணி அல்லது அந்தக் கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதி ஒருவரின் பின்னணி இருக்க வேண்டும் என்றது எழுதப்படாத விதிகளில் ஒன்று. இப்படியான சூழ்நிலையை. அன்று உருவாக்கிய பெருமை ஸ்ரீமாவோ அரசையே சாரும். நிர்வாக சேவைகளில் அறிவும் அனுபவமும் குறைந்த தகுதியற்றவர்கள் அதிகாரிகளாக வரத்தொடங்கியது அக்காலமே. அது யுத்தகாலம்வரை ஈபிடிபி கட்சி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வரை அந்த முறை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் காலகட்டத்திலேயேதான் பல வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுப் பலர் தமக்குப் பொருத்தமற்ற கதிரைகளையும், வேலைகளையும் பெற்றுக் கொண்டனர். அதனால் தொழில் தரம் குறைந்ததோடு, அவர்களிடத்தே காணப்பட வேண்டிய பண்பாற்றலும் குறைந்து போயிற்று.

# அறிவுக்காக வாழ்பவர்களை நான் நேசிக்கிறேன்

— செலீனா ஹஸ்மா —

புத்தகங்கள் என் கனவு என்பதைவிட விட புத்தகங்கள் உருவாக்கும் பிரம்மாண்டமான கனவுக்குள் நான் நடமாடுகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். பிறந்து வளரும் குடும்பச் சூழல், பாலின பேதங்கள் உருவாக்கும் தடைகள் அனைத்தையும் கடந்து செல்ல இந்தக் காகிதக் கதவுகளைத் திறந்தபோதுதான் வழி கிடைத்தது.

என் வாழ்க்கையில் நான் முதலும் கடைசியுமாக செய்த திருட்டு மூன்றாம் வகுப்புப் படிக்கையில் பள்ளி நூலகத்தில் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்ததுதான். அப்போது அது தவறு என்றுகூடத் தெரியாது. அது தெரியவந்து வகுப்பறையில் வைத்து ஆசிரியைக் கண்டித்தபோது இளம் மனதில் பெரும் காயமாகியது. ஆனால், அந்தக் காயத்திலிருந்துதான் இடையறாது வளர்ந்தது வாசிப்பு என்ற பெருங்கனவு.

பணம் கொடுத்து புத்தகங்களை வாங்கவெல்லாம் கையில் காசு இருக்காது என்பதால் எனது கல்லூரி நாட்கள் பெரும்பாலும் நூலகத்தில்தான் கழிந்தன. பள்ளியிலும் கல்லூரியிலும் எனது வாசிப்புக்காகவே ஒரு தனித்த



அடையாளம் கிடைத்தது. அது ஒவ்வொன்றிலும் எனக்குத் தனிப்பட்ட ஒரு கண்ணோட்டத்தை உருவாக்கித்தந்தது. நான் பேசுகிற சொற்கள் இலக்கியப் பிரதிகள் வழியே உருவாகி வந்தன. அது அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. அது புதிய உறவுகள் உருவாகக் காரணமாக இருந்தது. அந்த என்னை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஒரு சபையில் எழுந்து நின்று பேசும்போது நமக்கு ஒரு வெளிச்சத்தைத் தருபவை எழுத்தின் வழியே என்னை ஆட்கொண்ட ஆசான்களின் சொற்களாக இருந்தன. புத்தகங்கள் காட்டிய உலகம் அன்றாடங்களிலிருந்து வேறுபட்டிருந்தன. வாழ்வில் பிற வெற்றி தோல்வி எல்லாம் இதன் முன் அபத்தமான சொற்களாகப் பட்டன. என்னை ஒரே நேரத்தில் 16-ம் நூற்றாண்டிலும், 26-ம் நூற்றாண்டிலும் வாழ்பவளாக ஆக்கின. என்னை நானே தள்ளியிருந்து காணச்செய்தன.

பள்ளி இறுதியில் நான் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றேன். உயர்கல்விக்கான பல்வேறு வாய்ப்புகள் இருந்தன. ஆனால், நான் பிடிவாதமாக ஆங்கில இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்தேன். அது என் வாசிப்பின் வழிகளை அகலத் திறந்தன. தேர்ந்தெடுத்தது ஆங்கில இலக்கியம் என்பதால் இயல்பிலேயே உலக இலக்கியங்களின் அறிமுகம் கிடைத்தது. ரஷ்ய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க இலக்கிய நூல்கள் எனக்கு உலக அரசியல் குறித்த, மனித மனங்களின் அடுக்குகள் குறித்த பார்வையை அளித்தது. அப்போதே கிடைத்த நீட்சே, ஃபூக்கோ, சார்த்ர், மார்க்ஸ் போன்ற தத்துவவியலாளர்களின் அறிமுகம் எனது ஆழ்ந்த வாசிப்புக்குப் பெருமளவில் கைகொடுத்தன. என்னைப் பொறுத்தவரை புத்தகங்களை நமக்கு அறிமுகம்செய்வது இன்னொரு புத்தகம்தான். அவையே ஒரு சங்கிலித் தொடரின் ஒவ்வொரு கண்ணியையும் கோர்க்கின்றன.

புதிதாக வாசிக்கத் தொடங்கும் நண்பர்கள் எங்கிருந்து தொடங்குவது என்று கேட்கிறார்கள். அது என்னைக் குழம்பச்செய்யும் கேள்வி. வாசிப்பு என்பது ஒரு செடியைப் படிப்படியாக வளரச்செய்யும் முயற்சி. பலவற்றையும் படித்து நமக்கான புத்தகம் எதுவென கண்டுபிடித்துக்கொள்வது ஒரு முறை. சிறந்த ஆசிரியர்கள் மூலமாக அடையாளம் காண்பது இன்னொரு முறை. இந்த வாசிப்பே எழுதுவதற்கான உந்துதல்களைத் தந்தன. நான் கல்லூரியில் முதுகலை படிக்கும்போதே என் பேராசிரியர்களின் முயற்சியால் என் முதல் கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. என் மனம் கவிதையின் வழியாகவே சிந்திக்கிறது. கவிதையின் வழியாகவே வாழ்கிறது என்று தோன்றுகிறது. எனது வாசிப்புதான் எனது வெளிச்சமாக உள்ளது. அதுதான் என்னைத் தொடர்ந்து எழுதச் சொல்கிறது. இப்போது மார்க்ஸியம், திராவிடம் சார்ந்த எழுத்துகள் பெரிதும் என்னை ஆட்கொண்டிருக்கின்றன.

அறிவுக்காக வாழ்பவர்களை நான் நேசிக்கிறேன். அது முகத்தில் இயல்பாகவே ஒளியைக் கூட்டிவிடுகிறது.

# மணவிலக்கம் என்னும் கருத்தியல் கருவி: ஜோதிர்லதா கிரிஜாவின் தலைமுறை இடைவெளிகள்



அதற்கான வக்கீல் நோட்டீஸ் விரைவில் உங்களை வந்தடையும். அதுதான் என்னிடமிருந்து உங்களுக்கு வரவிருக்கும் அடுத்த தபாலாக இருக்கும்"

கணவனோடு சேர்ந்து வாழ்வதே பெண்ணின் அடையாளம் என நினைக்கும் அம்மாவிலிருந்து விலகப்போகும் பானுமதி, அம்மா அவளது அப்பாவைச் சார்ந்து வாழ நேர்ந்த சூழலைச் சரியான விதத்தில் முன்வைக்கிறாள். தன் வாழ்க்கைக்கான - உணவு, உடை, உறையுள் என்ற அன்றாடத் தேவைக்கான வழியில்லாத நிலையில் தான் ஒரு பெண், ஆணைச் சார்ந்து வாழும்படி நெருக்கடிக்குள்ளாகிறாள். இல்லையென்றால் அவனது செயல்பாடு களையும் முறையற்ற பாலுறவுத் தேடல் களையு சகித்துக்கொள்ள மாட்டாள் எனச் சொல்கிறாள். அம்மாவுக்கும் மகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல் மொழி பெண்ணின் - மகளின் அறிவையும் நிகழ்கால நியாயங்களையும் பேசுகின்றன.

"உன்னை எட்டு வருஷம் தள்ளி வைத்துக் கொடுமைப் படுத்தின அப்பாவைத் தேடிண்டு ஆனா என்னை மாதிரியும் சில பேர் நடக்கத் தொடங்கி இருக்கா. என் மாதிரியான பெண்கள் தொகை அதிகமா-காமல் இருக்கணும்னா அதுக்கு ஒரே வழி ஆண்கள் திருந்தனும்..

குடும்ப அமைப்புக்குள் நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும் பெண்ணுக்குக் கிடைக்கும் அவமரியாதைகளையும் முன்வைக்கும் மகள், அந்த அமைப்பு ஒருவித்தில் ஆண்டான் - அடிமைத் தன்மையைக் கொண்டிருக்கிறது என்ற கடுமையான விமரிசனத்தையும் முன்வைக்கிறாள். இந்த உலகத்திற்குத் தேவை சின்னதான சமத்துவ வாழ்வு. வேறெங்கோ இருப்பதாகச் சொல்லப்படும் சொர்க்கம் என்பது எல்லாரையும் சமமாக ஏற்கும் நிகழ்கால வாழ்க்கையிலேயே கிடைக்கும். அதை நமது குடும்பத்திற்குள் ஏற்படுத்த வேண்டுமென்றால் கண-வனும் மனைவியும் இடைவெளியை அதிகரிக்காத இணைகளாகத் திகழவேண்டும். என்னுடைய கண-வனின் நோக்கம் சுயநலமானது. என்னுடைய அப்பா - உன்னுடைய கணவர் உன்மேல் செலுத்தியது ஆதிக்கம். சுயநலமும் ஆதிக்கமும் இல்லாத மனிதர்களால் ஆன குடும்ப வாழ்க்கையை நான்

**பேராசிரியர் அ.இராமசாமி**

வேண்டுகிறேன். அதை உருவாக்க நினைக்கும் இப்போது முதல் கட்டமாக மணவிலக்கத்தைக் கோரப் போகிறேன் எனச் சொல்கிறாள்.

"வயித்துப் பிழைப்புக்காக ஒருத்தரை அண்டி இன்னொருத்தர் வாழுறது என்கிற நிலைமையில-தான் அடிமைத்தனம்கிற் கேவலமே உருவாறது.. எல்லாரும் சமம்கிற சின்ன நியாயத்தைப் பெரிய மனசோட ஏத்துண்டு எல்லாருமே வாழத்தொடங்கினா இந்த உலகம் சொர்க்கமாயிடும் சுருக்கமாச் சொன்னா, ஒவ்வொருத்தரும் அவா அவா சொந்தக் கால்களாலே நிக்க முடிஞ்சா இது மாதிரிக் கொடுமைகளை எதிர்க்கிற தைரியம் சிறுகச்சிறகாவது வரும். நீ உன் சொந்தக் கால்களாலெ நிக்க முடியாமத்தான் அப்பாவை தேடிண்டு உன் மதிப்பு மரியாதை கவுரவம் இதை எல்லாம் மூட்டை கட்டி வைச்சுட்டுப் போனோங்கிறத நினைச்சுப் பார்த்தா.. என் கோபம் உனக்கு புரியும்

ஆதிக்கமனத்து ஆண்களிடமிருந்து விலகிவிடுவதே பெண்களின் லட்சியமாக இருக்கக் கூடாது சமத்துவம்

## எழுதப்படும் பெண்களும் எழுதும் பெண்களும் – 28

போய் அவர் கால்லே விழுந்து வாழ்ந்தியே. எதுக்காக? வயித்துப் பிழைப்புக்கு வழி இல்லாததால் தானே? ஓட்டலில் வேலை செஞ்சுண்டிருந்த தாத்தா செத்துப் போனதும் நாளைய சோத்துக்கு என்ன வழின்னு தெரியாத நிலையில் அப்பாவைத் தேடிண்டு ஓடினே.. என்னத்துக்காக..?"

"பானு! நீ கேக்கிற கேள்வி ரொம்ப நியாய மான கேள்வியாகவே இருக்கட்டும். ஆனா சோறு மட்டுமே வாழ்க்கையிலெ லட்சியம்கிறது சரியில்லே. ஒரு பொண்ணு தன் புருஷனோட வாழ்றதுதான் அவளுக்கு நல்லதுங்கிறது அனாதி காலம் தொட்டு இருந்துண்டிருக்கிற வழக்கம்"

"இருக்கட்டும். ஆனா புருஷன் புருஷனாய் இருக்கணும் அட்லீஸ்ட் மனுசனாவாவது இருக்கணும்.."

"அம்மா ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கோ. காலம் மாறிண்டிருக்கு. நீ வாழ்ந்த காலம் வேற. நாங்க வாழுற காலம் வேறு. என் மாதிரி சில பெண்கள் தான் இப்படி தைரிய மான முடிவுக்கு வரா. மத்தவா மாறல்ல. பரம்பரை பரம்பரையா பெண்கள் கிட்ட உன் மாதிரி பெரியவா வளர்த்து வந்திருக்கிற பயம். கோழைத்தனம். சமூகத்தைப் பார்த்து நடுங்குகிறது. கணவனே தெய்வம் நினைக்கிறது. இது மாதிரியான குணங்கள்ளாம் இன்னும் நம்ம பெண்களை விட்டு போகல்லே. அதுக்கு ரொம்ப நாள் ஆகும்.. பேணும் ஆண்களைக் கண்டறிந்து அவர்களோடு இணைந்து உருவாக்கும் மறுமண வாழ்க்கையையும் கோடி காட்டுகிறது ஜோதிர்லதா கிரிஜாவின் கதை. என்னைத் தள்ளிவைத்த கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றபின் சந்திரனோடு புதுவாழ்வைத் தொடங்கப் போகிறேன் என்பதை அம்மாவிடம் சொல்லவில்லை என்றாலும் அவள் அதைச் செய்யத்தான் போகிறாள். ஏனென்றால் சந்திரன் இவளைப் புதிவிதக் கருத்தியலை ஏற்கும் ஆண் என நம்புகிறாள். அதனை நினைவோட்டமாக எழுதுகிறார் கதாசிரியர்.

பெரும்பாலான ஆண்கள் இன்னமும் தங்கள் நியாயமில்லாத பழைய உரிமைகளை வைத்துக் கொண்டு பெண்களைப் படுத்திக் கொண்டிருக்கிற நிலையில் சந்திரனைப் போன்றவர்களும் சிறுகச் சிறுக தோன்றத் தொடங்கி இருப்பதையும் அவள் நினைத்துப் பார்த்தாள். இனி தன்னையொத்த பெண்களுடையவும் சந்திரனைப் போன்ற இளைஞர் உடையவும் எண்ணிக்கை கால ஓட்டத்தை ஒட்டி கொஞ்சமாக பெருகும் என்று எண்ணி அவள் தனக்குள் மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டாள்

எனக்கதை முடிகிறது. விவாகரத்தை முன் நிபந்த னையாக்கித் தாயோடு வாதாடும் பானு மதியும் விவா கரத்துக்குப் பின்னான அவளின் வாழ்க்கையில் பங் கேற்கப் போகும் சந்திரனும் மரபு வாழ்க்கையிலிருந்து விலகிய நவீன வாழ்க்கையின் பிரதிநிதிகள். இவர்க ளைப் போன்றவர்களின் எண்ணிக்கைப் பெருக்கமே நவீனத்துவ வாழ்க்கையின் அடையாளங்கள்.



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

"தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை தடைகளைத் தகர்த்துப் போராடுவோம்," என்று எமது தலைவர் சம்பந்தன் திருகோணமலை நகராட்சிமன்ற நகர மண்டபத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் கலந்து பொங்கி எழுந்திருக்கிறார் என்றால் பாருங்களேன்! ஆனால் இந்த வீர வசனங்களைப் பல ஆண்டுகளுக்கு முன்னரும் சம்பந்தன் சொல்லக் கேட்டிருக்கிறேனே! முன்பு வெவ்வேறு இடங்களில் சொன்னவர், இந்தத் தடவை பொங்கல் அன்று பொங்கலை இரசித்து உண்ட களிப்பின் பின்பு பேசி இருக்கிறார்.

அத்துடன் நின்றுவிடவில்லை. "எமது போராட்டத்தைத் தோற்கடிப்பதற்குப் பலர் முயற்சி செய்தனர். அது கைகூடவில்லை. ஆனால் அது இன்னும் பல மடங்கு பலம் கொண்டதாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதுவும் மக்கள் ஆணையுடன்." என்று வேறு ஆர்ப்பரித்திருக்கிறார்.

பாவம் இன்னும் தமிழ் மக்களை மடையர்கள் என்று எண்ணி அரசியலை முன்னெடுக்கிறார் அவர். திருகோணமலையில் நின்று சொன்ன அந்த வார்த்தைகளை அவர் யாழ். மண்ணில் சொல்லமாட்டார். தடி கொடுத்து அடி வாங்குவாரோ என்ற பயமாக இருக்கலாம்.

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று கூடி, ஒரு மித்த குரலில் எவருக்கம் அடிபணியாது செயற்பட்டு வருகிறோம்.அதைக் கண்டு அரசே பயப்படுகிறது. அதனால் சர்வதேசமும் எம்மை அங்கீகரித்து "தமிழ் மக்களுக்கத் தீர்வைக் கொடுங்கள் ராஜபக்ஸகளே" என்ற அவர்களுக்கு அழுத்தத்துக்க மேல் இழுத்தமாகக் கொடுத்துக் கொண்டு வருவதனால், அந்த அழுத்தத்தைத் தாங்க முடியாது அவர்கள் அலறுகிறார்கள்." என்று சொல்லாமல் விட்டதே மேல் என்ற எண்ணகிறேன்.

முழுப் பூசனிக்காயை அப்படியே சோற்றுப் பானைக்கள் போட்டு அமுக்கி வெளியே தெரியாத மாதிரி என்று எண்ணிக் கொண்டல்லவா சம்பந்தர் பேசுகிறார்.அவர் சொன்னதைப்போல எங்கே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி ஒரு மித்த குரலில் செயற்படுகிறார்கள்? ஆளையாள் பிடித்து உண்ணாத குறையாக அல்லவா அவர்கள் செயற்பாடு இருக்கிறது. அத்துடன் நாடாளுமன்ற கதிரைகளும் இன்னும் சில நாட்களில் பறிபோய்விடும். வரப்போகும் புதிய தெரிவுக்குப் பின் சம்பந்தர் இதே வார்த்தையைச் சொல்லட்டும். ஏற்றுக் கொள்ளுகிறோம்.

இவர்கள் சர்வதேசத்தை அழுத்த, அழுத்த ராஜபக்ஸக்கள் எம்மைப் போட்டு அழுத்துகிறார்களே! அது சம்பந்தனுக்குத் தெரியாதா! இப்படியெல்லாம் எம்மை ஏமாற்றச் சொல்லும் பொய்யையும். புரட்டையும் தெற்கிலுள்ள ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்துக் கொட்டைஎழுத்துக்களில் வெளியிட அதனைப் பார்த்துச் சிங்கள மக்கள் அரசை அழுத்துகிறார்கள். அந்த அழுத்தம் தாங்கமுடியாத ராஜபக்ஸ க்கள் எம்மைப் போட்டு எல்லா விதத்திலும் அழுத்துகிறார்கள் என்பது இந்த மூடருக்கு எங்கே விளங்கப்போகிறது?

சரியான விளக்கமில்லாத அரசியல் வாதிகளால் துன்பப்படுவது யாராக இருக்கலாம்? மக்கள்தான் துன்பப்படுகிறார்கள். இதைவிட வேறு ஒரு விடயம். எமது கட்சியைவிட்டுப் போனவர்களே! திரும்பி வாருங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன் என்றவாறு சுமந்திரனின் பேச்சு இருக்கிறது. "எமது கட்சியில் வந்து இணையுங்கள்" என்று கூக்குரலிடும் சுமந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பை எப்போது கட்சியாகப் பதிவு செய்திருக்கிறார்? அவர் பதிவு செய்தது எமக்குத் தெரியாத ஒரு புதிய விடயமாக இருக்கிறதே! அவர் பேசும்போது வரிக்குவரி தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் கட்சி, கட்சி என்று சொல்லுவதன் நோக்கம் என்ன?

இது போன்ற விளக்கமற்ற பிறவிகளைத் தமிழ் அரசியல்வாதியாகக் கொண்ட எமது சமூகம் பாவப்பட்ட சமூகமாகத்தான் எனக்குத் தெரிகிறது. மக்களுக்குச் சேவை செய்ய என்று வருபவர்கள் முதலில் தம்மை ஒரு முறை நிலைக் கண்ணாடிக்கு முன் நின்று பார்த்து "மக்களை வழிநடத்த எனக்குத் தகுதி இருக்கிறதா?" என்ற கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுவிட்டு வருவது நலம்!



# மாதவன் மகேஸ்வரனின் “அப்பால்”

**மூன்றாம் பாலினத்தவரின் அடிமன ஆசையை வெளிப்படுத்தும் “அப்பால்”... குறும்படம்**

ஈழத்துத் திரையில் மிகவேகமாக பரவி வரும் குறும்பட வைரஸ்களுள் ஒன்று மாதவன் மகேஸ்வரனின் “அப்பால்” குறும்படம். மிகச் சுருக்கமாக திருநங்கைகளின் அடி மன விருப்பை ஆழமாகவும், மிக வித்தியாசமாகவும் வெளிக்காட்டியுள்ளது .திருநங்கைகளின் மனநிலையில் நின்றுபுதிய பாய்ச்சலைக் கொடுத்துள்ளார் ம.மாதவன். குறிப்பாக இலங்கையை விட அதிகமாக திருநங்கைகளை தமிழ் நாட்டில் காணலாம்.தமிழ் நாட்டில் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் மூன்றாம் பாலினத்தவர்கள் அண்மைக் காலமாக தான் பல்வேறு துறைகளில் சாதிக்காத் தொடங்கியுள்ளனர் .

தினமும் கடை கேட்டலை (கைதட்டி காசு சேகரிப்பது) ஆங்காங்கே பலஇடங்களில் காணலாம். அதேபோன்று இரயில் பயணங்கள் , தியாகராஜ நகர் போன்ற பொது இடங்களில் இவர்களை அதிகம் காணலாம். மே மாதங்களில் கொண்டாடப்பட்டு வரும் கூளவாகம் கூத்தாண்டர் திருவிழாவில் இலட்சக்கணக்கில் திருநங்கைகள் ஒன்று சேர்வதையும் தமக்கான அங்கீகார நாளாக இந்த நாளைக் கொண்டாடுவதையும் காணலாம். கூத்தாண்டவர் திருவிழாவில் திருநங்கைகள் தாலி கட்டிக் கொள்ளும் நாளில் அத்தனை மகிழ்வாக தம்மை அலங்கரித்து தாலி கட்டிக் கொள்வதும் இறுதி நாள் அன்று தாலி அறுத்து வளையல் உடைப்பதும் மனங்களைக் கனக்கச் செய்யும் நிகழ்வுகள்.

அவர்களின் வாழ்க்கை என்பதும் இப்படித்தான் கனவுகளோடும் கற்பனைகளோடும் மட்டுமன்றி கண்ணீர் கலந்த வாழ்வியலாகவும் உள்ளது.இத்தகைய சவால்களுக்குள்ளும் தங்களால் சாதிக்க முடியும் என்ற மனத்தைரியம் அவர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் திருநங்கைகள் என்றதும் அசிங்கமானவர்கள், அவலட்சனமானவர்கள் என்ற பார்வையும் கேலி மன நிலையும் பலரிடம் உள்ளது. முரட்டுத்தனமான அதிகாரமனநிலை கொண்ட ஆணாதிக்க மனங்களில் திருநங்கைகள் அருவருப்பானவர்கள் என்றே நோக்கும் அதேவேளையில் அவர்களுக்கு உள்ளமும் உணர்வும் இல்லை அதனால் எம்முடைய காமத்தேவைக்கு பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற கீழ்த்தரமான மன நிலையில் பலரை காணமுடியும்.

தமிழ் நாட்டில் குடும்பங்களால் சமூகத்தால் விரட்டப்பட்ட பல திருநங்கைகள் தமக்கென ஒரு திருநங்கைகள் குடும்பத்தை தெரிவு செய்து அவர்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.கல்வி தொழில் உழைப்பு என்றுமுன்னேறியவர்கள் போக சிலர் ஆங்காங்கே சில கூலி வேலைகளையும் செய்கின்றனர். சிலர் தவிர்க்கமுடியாமல் விபச்சார தொழிலையும் மேற்கொள்கின்றனர். இத்தகைய தன்மைகள் அதிகம் கூளவாகம் திருவிழாவில் காணமுடியும். இதன் பின் கடந்த வருடம் முதல் திருநங்கைகளுக்கு என்று சில தொழில் துறை திட்டங்களையும் தமிழ் நாட்டில் அறிமுகம் செய்துள்ளனர்.

ஆனால் இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் திருநங்கைகள் பலர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தம்மைத் தாம் தம் உடல் உள நிலை சார்ந்து மனசால் வேதனைப்படுபவர்களாகவே உள்ளனரே தவிர அவர்களை பார்த்து விமர்சனம் செய்யும் நிலை சமூகத்திடம் இல்லை என்றே சொல்லமுடியும்.

‘ஏக்கங்கள்’ , ‘என்னாச்சு’, கர்மசூத்திரம் ” உட்பட ஆறு குறும்படங்களை இயக்கியுள்ளார் நாளைய இயக்குநர் ம.மாதவன் இதுதவிர மூன்று இசை வீடியோவையும் இயக்கியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதியில் திரைகண்ட “அப்பால்” குறும்படம் மிக துல்லியமாக ஒளிப்பதிவு செய்யப் பட்டுள்ளது. தம்மை அலங்கரித்து அழகு பார்ப்பதில் ஆர்வம் கொண்டவர்கள் திருநங்கைகள்.அத்தகைய தொரு ஆர்வ நிலைப்பாடாகவே இக்குறும்படம் ஆரம்பம் கொள்கின்றது.

சில மேக்கப் பொருட்கள் அழகு சாதனப்பொருட்கள் பூச்சுக்கள் கண்ணாடி மேசையில் பரப்பப்பட்டுள்ன. அதன் முன்னால் கதிரையில் அமர்ந்திருக்கும் அவள் அத்தனை அழகாக சேலை அணிந்து தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அலங்கரிக்கும்போது நகப்பூச்சுடன் ஆரம்பமாகும் உரையாடல் அவளை உறுத்துகின்றது. இந்த சமூகத்தில் சமூகம் அவளை கற்றுக்கொள்வதைவிட சமூகத்தை அவள் கற்றுக்கொள்வதனையே முக்கிய கருவாகக் கொள்கின்றாள். இத்தகைய நிலையில் “ நானில்லாமல் நீ வாழ்ந்திடுவியா”? என்கிறது ஆண் மனம். அவள் அந்த ஆண் மனதிற்கு விடுக்கும் சவாலில் அந்த மனச்சாட்சியை உடைத்துக் கொள்கின்றாள். தான் சுயமாக வாழ விரும்புவதையே சுட்டிக் காட்டுகின்றாள். அந்த நிமிடத்துடன் குறும்படம் நிறைவு கொள்கின்றது.

அவளின் கண்களும் முகத்தின் பிரகாசமும் பெரும் ஒளி வீச்சுடன் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்குறும்படம் தொடர்பாக நாளைய இயக்குநர் மா. மாதவன் குறிப்பிடுகையில்

“ அப்பால் குறும்படம் திருநங்கைகளின் உளவியல் சார்ந்த கருத்து நிலை கொண்டது. தென்னிலங்கையில் பல சிங்கள திருநங்கைகள் நண்பர்களை சந்தித்து உள்ளேன். அவர்களுடன் கதைத்தும் உள்ளேன். அப்படி கலந்துரையாடும் போது மனதில் வந்த எண்ண அலைதான் இது.எங்களுக்கு இது புதுவிசியமாக இருக்கும் ஆனால் அவர்களுக்கு அங்கீகாரம் தேவை.இந்த அங்கீகாரத்தை பெற்றுக் கொடுப்பவர்களுள் ஒருவராக நானும் இருக்கவே முயற்சி செய்கின்றேன். சில திருநங்கைகள் படிச்சு முன்னேறியுள்ளனர். சிலரை செக்ஸ் தேவைக்கு பயன் படுத்துகின்றனர். இது தவறான நோக்கம் . ஆனால் இந்த குறும் படத்தயாரிப்பின் பின் பல நண்பர்கள் கிடைத் துள்ளனர். இதனை பார்த்து விட்டு சிங்கள நண்பர்கள் கேட்டார்கள் எங்களை “மிஸ் யூஸ்” பண்றது பற்றியா செய்தாய்? என்று நினைத்தனர். பின்பு விபரமாக சொன்னதும் சந்தோசப்பட்டனர். ” என்றார்



இதுபற்றி நண்பர் டிலான் டயஸ் கூறுகையில் ” திருநங்கைகளின் மன உணர்வு என்பதுஅவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட நிலை இல்லை. இயற்கை நிலைப்பாட்டை முதலில் எல்லோரும் புரியவேண்டும் பகுத்தறிவும் புரிந்துணர்வும் உள்ளவன்ஒருபோதும் ஏளனம் செய்யமாட்டான். அர்தநாதீஸ்வரர் வடிவம் சரிபாதியாக பிரிக்கப்பட்டுள்ளது திருநங்கைகள் இடை நிலையில் பிரிக்கப் பட்டுள்ளனர். இதுதான் வித்தியாசம் ” என்றார். மேலும் டிலான் டயஸ் குறிப்பிடுகையில் “ சொன்ன விதம் உண்மையான உணர்வு எல்லாம் சரி. ஆனால் இந்த கதைசொல்லல் முறைமை சாதாரண மனிதர்களுக்குப் புரியாது. மேல் மட்டத்தினர் தான் புரிந்துகொள்வார்கள். என்கருத்தெரிய நான் 15 வருடங்களாக தான் திருநங்கைகளைப் பற்றிஅறிந்தேன். அன்று எனது நண்பர்கள் 60-65 வயதுடைய தாத்தாமார் தான். அவர்களின் கதைகளும் கருத்துப் பதிவுகளும் தத்துவங்களும் தான் எனக்கு சமூக அறிவைத் தந்தது. அதன்பின் தான் நான் புத்தகங்கள் இணையங்கள் வாயிலா மூன்றாம் பாலினத்தவர் பற்றி அறிந்தேன். உண்மையில் ஓர் ஆண் பெண்ணையும், ஒரு பெண் ஆணையும், புரிந்து கொள்வதை விட இரு உணர்வுகள் பற்றியும் இலகுவில் புரிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் திருநங்கைகளால் தான் முடியும். இவர்களின் ஆளுமை பற்றியும் உணர்வு பற்றியும் விவாதம் வைத்துள்ளனரே தவிர எங்கும் நியாயமான முடிவுகள் வெளிவரவில்லை ” என்றார்.

ஜெயலிங்கம் என்பவர் குறிப்பிடுகையில் “யாழ்ப்பாணம் குருநகரில் திருநங்கைகள் நடனக் குழுவினர் உள்ளனர். அதனூடாக தம் வருமானத்தைச் சேகரிக்கின்றனர். மீன் வியாபாரம் செய்தல், அழகு சாதனப் பொருட்கள் விற்பது ஆகிய தொழில்களை செய்கின்றனர். சிறப்பாக குடும்பம் நடாத்தி வருகின்றனர். எம்மைப்போல் தான் அவர்களுமே தவிர அவர்களைப் பார்த்து நாம் மிரட்சி கொள்ளத் தேவையில்லை. என்றார்.

வெள்ளவத்தையை சேர்ந்த பிரதீபன் சங்கரலிங்கம் குறிப்பிடுகையில் “ மிகச் சிறப்பான குறும்படம் மிக சருக்கமான ஆனால்இனிமையான ” குறும்படம் ” என்றார்.மேலும் இக்குறும்படத்தின் ” மனச்சாட்சி உடைவு ” பற்றி சிந்திப்போமாயின் ஈழப் பாரம்பரியம் ஆணாதிக்கத்தினால் கட்டுண்டது. அந்தக் ” கட்டுத்தான் நான் இல்லாமல் நீ வாழ்ந்திடுவாயா--? ” என்ற கேள்வியைக்கொடுக்கின்றது. அந்த கேள்வியை உடைக்கும் உத்தியாகவும் “அப்பால்” நோக்கப்படக்கூடியது.

- யாழ். தர்மினி பத்மநாதன் -

# எழுத்திலிருந்து திரைக்கு


பகுதி - 3



புதுமைபித்தன்

# நல்ல சினிமா பார்க்கலாம்

ந. கேசவராஜன்



நிதர்சனம் நிறுவனம் இயக்குனர் மகேந்திரனை கிளிநொச்சிக்கு வரவழைத்திருந்தது. எதிர்பாராமல் எனது மதிப்புக்குரிய இயக்குனருடன் பழக வாய்ப்பு கிடைத்தமையிட்டு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. அவரது வருகையை நிதர்சனம் நிறுவனம் அன்றைய ஆதவன் கல்லூரி மாணவர்களுக்கு பயனள்ளதாக்க செயன்முறை அமர்வுகளை ஏற்பாடு செய்து நடாத்தியது. வளவாளர் மகேந்திரன் அவர்கள் மட்டுமே. மூன்று மாதங்கள் அவர் அந்த மாணவர்களுடன் செலவழித்தார்.

தனது செயன்முறை அமர்வுகளுக்கு முன்பாக நிதர்சனம் நிறுவனம் தயாரித்திருந்த படங்களை ஒன்றும் விடாமல் பார்த்தார். சில படங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்தார்.பிரமித்தார். காரணம் எந்த அடிப்படை வசதிகளின்றியும் அத் திரைப்படங்கள் தரமாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தான் இலட்சியமாகக் கொண்ட சினமா வடிவத்தை இங்கு பார்ப்பதாகவும் கூறி



இயக்குனர் மகேந்திரனை

உணர்ச்சி வசப்பட்டார்.

இப்படியான சூழலில் தான் எனக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. இதுவரை நான் வாசித்திராத புதுமைப் பித்தனின் சிற்றன்னை குறுநாவலை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் கண்டேன். உதிரிப்பூக்கள் திரைப்படத்தின் மூலக்கதை அது தான் என நினைவு வர இரவல் எடுத்துச் சென்று வாசித்தேன். வாசிக்க வாசிக்க எனக்கு அதிர்ச்சிகளே ஏற்பட்டன. காரணம் சிற்றன்னைக்கும் உதிரிப்புக்களுக்கும் எந்தச் சம்பந்தத்தையும் என்னால் காணமுடியவில்லை. பெரும் குழப்பம் என் மனதில். நான் பார்த்ததாக நினைத்திருக்கும் படம் உதிரிப் பூக்கள் அல்லவோ எனும் சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. எனினும் அது பற்றி நேரடியாக இயக்குனர் மகேந்திரனிடம் கேட்க தயக்கம். வெட்கம். அவர் இயக்கிய படங்கள் சிலவற்றின் டிவிடி பிரதிகளை அவர் கொண்டு வந்திருந்தது எனக்குத் தெரிந்திருந்தது. அதனால் அவரிடம் சென்று உதிரிப்பூக்கள் டிவிடி அவரிடம் உள்ளதா என்று கேட்டேன். அவர் தான் இயக்கிய படங்களில் அது மட்டுமே தன்னிடம் டிவிடி பிரதியாக இல்லை என்று கூறினார்.


நான் பல இடங்களிலும் அந்த டிவிடியைப் பெற்றுக் கொள்ளத் தேடினே். எதிர்பாராத இடத்திலிருந்து கிடைத்தது. படத்தைப் பார்த்தேன். ஆம் அது நான் கருதியிருந்த படம் தான். எனவே நான் நேரடியாகவே அவரிடம் படத்திற்கும் சிற்றன்னை குறு நாவலுக்கும் தொடர்பில்லாததைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் எனக்கு அருமை யான பாடமாகவும் படைப்பாளிக்கு இருக்க வேண்டிய படைப்பு நேர்மையைப் பற்றிக் கற்பிப்பதாகவும் இருந்தது.

சிற்றன்னை நாவலை அவர் வாசித்து முடித்ததும் அதில் வரும் கதாபாத்திரங்களில் சிலவற்றை மட்டும் உள்வாங்கி அதன் பிரதான கதாபாத்திரமான நேர்மையான நற்குணம் கொண்ட பேராசிரியர் சுந்தரவடிவேல் பாத்திரத்தை முற்றிலும் எதிர்மறையான துர்க்குணம் கொண்டவராக இருந்தால் கதை எவ்வாறிருந்திருக்கும் என்று யோசித்ததில் தனக்கு உதிரிப் பூக்கள் கதை தோன்றியதாகவும் அதன் பின் சில புதிய பாத்திரங்களை உருவாக்கி திரைக்கதை அமைத்ததாகவும் குறிப்பிட்டார்.

உண்மையில் வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு சிற்றன்னையும் உதிரிப் புக்களும் வெவ்வேறு கதைகளாகத் தான் தேன்றும். அது போல் அவை வெவ்வேறான கதைகளே. திரைப்படத்தின் மூலக்கதை என்று சிற்றன்னையைக் குறிப்பிடாவிட்டிருந்தாலும் கூட எவரும் குற்றம் சொல்லியிருக்கப் போவதில்லை. கதை யின் முழு உரிமையையும் மகேந்திரன் அவர்களே வைத்திருந்திருக்கலாம். ஆனால் அதை அவர் புதுமைப்பித்தனுக்கே வழங்கினார். வழங்கியது மட்டுமல்ல மூலக்கதைக்குரிய பணத்தொகையை புதுமைப்பித்தனின் குடும்பத்தாருக்கு தயாரிப்பாளருடன் நேரில் சென்று வழங்கியும் இருக்கிறார். அதற்கான காரணத்தை அவர் தெளிவாகவே சொல்கிறார்." நான் சிற்றன்னையை வாசித்திராவிட்டால் உதிரிப்பூக்கள் உருவாகியிராது. அதன் தார்மீக உரிமை சிற்றன்னைக்கே" என்றார்.

இது தான் படைப்பு நேர்மை என்பது. மற்றவர்களது கதையைத் திருடி அதை தம்முடையதாகக் கூறிக் கொண்டு சில பிரபல இயக்குனர்கள் படமாக்குவதும் அதற்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்ததையும் செய்திகளாக நாமறிந்து கொண்டிருக்கிறோம். மிக அண்மையில் பிரபல நட்சத்திரம் நடிக்க வெற்றிப் பட இயக்குனர் என்ற பெயர் பெற்றிருந்த ஒருவர் இயக்கிய திரைப்படம் ஒரு உதவி இயக்குனரின் கதையே என்று வழக்குத் தொடுக்கப்பட்டிருந்ததும் பின் அந்த உதவி இயக்குனருக்கு கதைக்காக ஒரு தொகைப் பணம் செலுத்தப்பட்டதையும் நாம் ஊடகங்களில் அறிந்த கொண்டது தான். இவ்வாறானவர்கள் மத்தியில் இயக்குனர் மகேந்திரன் அவர்களின் பெயர் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியதே.

அதே போல் முள்ளும் மலரும் திரைப்படத்திலும் நடந்துள்ளது. உமாசந்திரன் எழுதிய முள்ளும் மலரும் நாவலை பாதி வரை மட்டுமே வாசித்து விட்டு




உருவாக்கப்பட்ட படம் தான் இது. மையப்பாத்திரமான வின்ச் ஒபரேட்டர் காளியை புலியொன்று தாக்கி அவன் கையொன்றை இழக்கும் அத்தியாயத்தோடு மகேந்திரனின் அந்த நாவல் வாசிப்பு நின்று விடுகின்றது. காளியின் வித்தியாசமானத் தன்மானக் குணத்தையும், கடும் பிடிவாதத்தையும, தனது உயர் அதிகாரியான பொறியி யளார் மீதான வெறுப்பையும் அவன் தன் தங்கை மீத கொண்டிருக்கும் பாசத்தையும் மட்டுமே நாவலிலிருந்து பெற்றுக்கொண்டு தன்னியல்புப் படி முன்னும் பின்னும் சம்பவங்களை உருவாக்கி திரைக்கதையை உருவாக்கியிருக்கிறார். புலி தாக்கியதில் கையை இழப்பதாக இருந்த சம்பவத்தைக் கூட போதையில் காளி தெருவில் படுத்திருக்கும் போது லொறி ஒன்று ஏறியதால் கையை காளி இழப்பதாகச் சம்பவத்தை மாற்றியெழுதியுள்ளார். அந்தச் சம்பவத்தினாலும் பொறியியலாளர் மீது அவனுக்கு வெறுப்பு அதிகமாக் காரணமாக்குகிறார்.

படம் தரத்திலும் வசூலிலும் பெரு வெற்றி பெற்றது. நூ றாவது நாள் வெற்றிவிழாவுக்குப் பின்பே அவர் நாவலின் மிகுதியை வாசித்திருக்கிறார். அது திரைப்படத்திலிருந்து முற்றாக வேறுபட்டிருந்திருக்கிறது. நானும் பின்வந்த நாட்களில் அந்த நாவலை வாசித்திருந்தேன். அது வெறும் சாதாரண நாவலாகவே இருந்தது. நாவலில் கண்டபடி முழுமையாகப் படமாக்கப்பட்டிருந்தால் அது பத்தோடு பதினொன்றாகப் போயிருக்கும். அன்றைய எழுத்து வர்த்தகச் சந்தைக்கேற்றபடி உமாச்சந்திரனால் எழுதப்பட்ட நாவல் திரைத்துறைக்கேற்ற வகையில் வடிவ மாற்றம் செய்யப்பட்டதால் மிகச் சிறந்த தரமான வெற்றிப்படமொன்று நமக்குக் கிடைத்தது. முள்ளும் மலரும் நாவலும் பெருமை பெற்றது.

நாம் மேற்கண்டவற்றிலிருந்து சில படிப்பினைகளைப் பெறுகிறோம்.

1) எழுதப்படுகின்றவை எலலாவற்றையுமே திரைப்படமாக்க முடியாது. திரைப்படமாக்கும் கூறுகள் அவற்றில் இருந்தால் மட்டுமே அவைத் திரைப்பட உருவாக்கத்துக்குரியவையாக இருக்கும்.

2) எழுத்திலக்கியங்கள். வாசிப்பதற்கானது. எழுத்தாளனின் எண்ணத்தில் உருவாகி வாசிப்பவர் எண்ணத்துள் பிரவேசிப்பவை. திரைப்படங்கள் காண்பியத்தின் பண்புகளுடன் விம்பங்களாக பார்வையாளருக்குத் கதை சொல்பவை.

3) எழுத்திலக்கியத்தில் எழுதப்பட்டவற்றை அப்படியே நேரடியாகத் திரைப்படமாக்கினால் அது சரியான விளைவைத் தராது. திரைமொழிக் கேற்ப திரைவடிவம் ஆக்கப்பட வேண்டும்.

4) திரைக்கதையாக்கத்துக்குரிய பண்புகளைக் கொண்டிராத எழுத்திலக்கியத்திடமிருந்தும் சிலவற்றைத் திரைப்படம் பெற்றுக் கொள்ளலாம். பாத்திரக் குணாம்சம். பிரச்சினைகளின் மூலங்கள் போன்றனவற்றைத் திரைக்கதை எழுத்தாளன் பெற்று புதிய வடிவில் திரைக்கதையை உருவாக்க முடியும். அங்கே நிகழ்களம் கூட மாறலாம்.

5) திரைப்படைப்பாளி நிச்சயம் தேடல் உள்ளவராகவும் வாசிப்பீடுபாடு உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

எல்லாவற்றுக் மேலாக முதலில் திரைக்கதை எழுது வதில் படைப்பாளி பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். இதுவே தற்போது நமக்குப் பற்றாக்குறையாக உணரப்படுகின்றது. ■



# அங்கதன் பதில்கள்

⇨ **எமது சமூகம் என்னத்தை நோக்கிநச் செல்கிறது?**

சு.சத்தியராஜ், பண்ணாகம்

▶ மாற்றத்தையும் ஏற்றத்தையும் நோக்கி செல்லவேண்டிய நிலையில் ஏமாற்றத்தை நோக்கியே செல்கிறது.

⇨ **வாழ விருப்பமில்லை என்று தூக்குப்பொட்டுத் தப்பிய ஒருவருக்கு நீங்கள் சொல்லும் அறிவுரை என்ன?**

மு.ரமணி, சாவகச்சேரி

▶ தூக்குக் கயிறே நீ வாழவேண்டு மென்று விரும்புகிறது நீ மட்டும ஏன் சாக விரும்புகிறாய்? கயிறுக்கு தெரியுது உயிரின் பெறுமதி

⇨ **பண்பாடு பண்பாடு என்று சொல்லியே பண்பாட்டைக் கெடுப்பவனை என்ன செய்யலாம்?**

வ.காயத்திரி, கொடிகாமம்.

▶ அவர்கள் பண்பாட்டின் பெயராம் தன்பாட்ட பார்ப்பவர்கள்! அவர்பாடு பெரும்பாடாப் போகும் போது தாமே உணர்ந்து திருந்தத்தான் வேண்டும்.

⇨ **அரசியலில் கண்ணாமூச்சி விளையாடும் ஒரு அரசியல்வாதியைச் சந்தித்தால்?**

பொ.வரதராஜன், மூளாய்

▶ அவர் பக்கமே திரும்பிப் பார்க்காது கண்ணை மூடிக்கொண்டு அப்பால் சென்று விட வேண்டியது தான்

⇨ **மண் கொள்ளைக்கும் எமது தாய் மண்ணை கொள்ளையிடுபவனுக்கும் என்ன வித்தியாசம்?**

செ.பவுத்திரன், மருதங்கேணி

▶ ஒரு வித்தியாசமுமில்லை இரு தரப்பினருமே மண்ணாய் போகவேண்டுமென மக்களால் சபிக்கப்பட வேண்டியவர்களே!

⇨ **கைலாசத்தைக் கடவுளின் உறைவிடம் என்றோம்! நிலாவையும் கடவள் என்றோம்! அதில் மனிதன் இறங்கி ஆட்டம் போடுகிறானே! கடவுள் ஒன்றும் செய்யாரா?**

ச.பவுத்திரன், சித்தன்கேணி

▶ அவரும் ஒன்றும் செய்யார். அவரால் ஒன்றும் செய்யவும் முடியாது. அவர் தூணிலும் தூசியிலும் துரும்பிலும் கூட இருப்பவராச்சே!

⇨ **மாட்டைக் கோமாதா என்ற வழிபட்டுக் கொண்டு, அதனை வெட்டி உண்ணும சைவ மானுடனைப் என்ன செய்யலாம்?**

கு.பரிமளா, குடத்தனை

▶ காசியில் எரிந்த உடலையே புசிக்கின்ற 'அகோரிகள்' என்கிற சாமியார்களை என்ன செய்யப்போகிறீர்கள்.

⇨ **வாழ வழி இல்லை என ஏங்கித்தவிக்கும் ஒருவருக்கு புத்திமதி ஏதாவது?**

ம.கருப்பையா, நெடுங்கெணி

▶ வாழ இடமே இல்லாது அலைந்து தவிப்பவர்களைப் பார்த்து ஆறுதல் அடையலாம். இடம் இருந்தால் நிச்சயம் வழியும் இருக்கவே செய்யும் தேடிப்பிடிக்க முயற்சி செய்தால் போதும்.

⇨ **சுடலை ஞானம் என்றால் என்ன?**

பொ.மாலன், சாவக்கச்சேரி

▶ செயலற்றுப் போகும் நிலையில் ஏற்படும் அறிவிலிகள் பேசும் தத்துவம்

⇨ **செக்கு மாடு என்று திட்டுகிறார்கள். அதன் உழைப்பு மகத்தானது என்று நான் சொல்லுகிறேன்...??**

பா.அகிலா, ஆனைக்கோட்டை

▶ உண்மைதான் பற்றற்ற நிலையில் பணியாற்ற செக்குமாடுகளால் மட்டுமே முடியும்.

⇨ **தமிழ் அரசியல் பரப்புக்குள் குழறுபடி தொடங்கிவிட்டது. என்ன செய்யலாம்?**

ம.பூபாலன், வல்லை

▶ மேடைகளில் குழறித் திரிந்தவர்கள் தங்களுக்குள் முட்டி மோதி குழறத் தொடங்கியிருக்கிறார்கள் அவ்வளவுதான்!

⇨ **ஜனாதிபதியின் அதிரடிச் செய்திகள் சற்றுக் குறைந்து போயிருக்கிறதாத் தெரிகிறது.**

வ.மணிமாறன், நயினாதீவு

▶ இது தேர்தலுக்கு முந்திய அமைதி மட்டுமே!

⇨ **சுமந்திரன் தனக்கொரு அணியைத் திரட்டுவதாகக் கேள்வி. கூட்டமைப்ப என்ன செய்யும்?**

வ.ரஞ்சிதபாலன், கொல்லங்கலட்டி

▶ படை நடத்த அணிவகுத்து செல்லும் கம்பீர மற்றவர்கள் அணிதிரட்டி என்ன பயன்

⇨ **போலித் தொலைபேசி அழைப்பை நம்பி ஏமாறும் கூட்டத்துக்கு உங்கள் அறிவுரை என்ன?**

தே.சங்கீதன், கோண்டாவில்

▶ கதாப் பாத்திரங்களுக்காக தமது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருக்கும் கலா ரசிகையை கதிகலங்க விடாது பாதுகாத்தாலே போதும்...!

⇨ **யாழ்ப்பாணத்தில் காணும் சுவரோவியங்களின் பின்னணி என்ன?**

ம.மலரவன், சுன்னாகம்

▶ வெல்வது உறுதி. தோற்பது நிச்சயம்... இது அரசியல் கட்சிகளின் தாரக மந்திரம் ... இந்த மகத்துவமே அரசியல் கட்சிகளை தொடர்ந்து இயங்க வைக்கிறது.

⇨ **தொலைக் காட்சி நாடகத்துக்காக பலதையும் அர்ப்பணிக்கும் ஒரு மனைவியை எப்படித் திருத்துவது?**

ப.டானியல், குருநகர்

மாதாந்தம் ரிவி சனலுக்கு கட்டும் பணத்தை நிறுத்திப் பாருங்கள்.

⇨ **அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவோம் என நம்பிக்கையுடன் இருக்கும் கட்சிக்கு பொது மகனாகச் சொல்ல ஏதாவது உண்டா?**

லி.நாகேஷ்வரன், வவுனியா

▶ மக்கள் எப்பொழுதும் "காதிலை பூ கந்தசாமிகள் அல்ல

⇨ **சொர்க்கத்துக்கப்போக ஏதாவது 'சோட் கட்' உண்டா?**

ஐ.மாரிமுத்து, நாகர்கோவில்

▶ யாழ் நகர வீதிகளில் விரைவாக வாகனங்களில் பயணித்துப் பாருங்கள் சொர்க்கத்துக்கு 'சோட் கட்" தெரிந்துவிடும்.

⇨ **கூட்டமைப்புக்குள் அடிதடி தொடங்கிவிட்டதாம். சுமந்திரனும் சரவணபவனும் கம்பு சுத்தப் புறப்பட்டு விட்டனராம். உண்மையா?**

வ.பரன், மண்டைதீவு

▶ அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா ஆசனம் கிடைத்தால் பிரச்சனைகள் தீர்ந்துவிடும்.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :..............................................

முகவரி :..............................................

..............................................

தொலை பேசி இல. ..............................

---

'யாழ்ப்பாணம் மக்கள் அங்கு சிங்களவர்கள் வாழ்வதை விரும்புவதில்லை. விகாரைகள் கட்டுவதற்கு அனுமதிக்கிறார்களில்லை அங்குதான் அடிப்படைவாதம் விதைக்கப்படுகிறது." இவ்வாறு மல்வத்து பீடத்தின் அநுநாயக்கர் திம்புல் கும்புரெ விமலரத்ன தேரர் கூறியுள்ளார்.

இந்த நாட்டில் இனவாதம் - மதவாதம் எல்லாம் எங்கு கருக்கொண்டது எவர்களால் எவர்களின் ஆசீர்வாதத்துடன் வளர்த்தெடுக்கப்பட்டது அதன் மூலம் எத்தகைய இனக்கலவரங்கள்- இந்த நாட்டை நாசம் செய்தது என்று ஒன்றும் தெரியாதவர் போல் அநுநாயக்கர் பேசுவதில் அவர் தன் நெஞ்சறியக் கூறும் பொய்.

சிங்கள இனவாதமும் பௌத்தமதமும் எவருடைய ஆசீர்வாததுடன் ஒரு சிறிய அழகிய அமைதியாக இருக்க வேண்டியநாட்டை சீரழிவுக்குட்படுத்தியது என்பது உலகறிந்த உண்மை.

இந்நிலையில் யாழ் மக்களிடம் அடிப்படைவாதம் விதைக்கப்படுகிறது என்ற அநுநாயக்கரின் கண்டுபிடிப்பு நகைப்புக்கிடமானது. ஆன்மீகவாதிகள் அரசியல் பேசுவது நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

☆☆☆ ☆☆☆ ☆☆☆

கடைசியில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு பத்தாண்டு இழுத்தடிப்புக்கு பிறகு ஐ.நா.சபையின் வதிவிடப் பிரதிநிதியுடனான சந்திப்பின் போது அவரிடமே முடிவைச் சொல்லிவிட்டார்.

அவர் சொன்ன பதில் காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் உயிருடன் இல்லை.

அவர்கள் உயிரோடு இல்லாமல் போனதிற்கு விடுதலைப்புலிகள் தான் காரணம் அவர்கள் தான் காணாமல் போனோரை அழைத்து சொன்றனர் அல்லது இழுத்துச் சென்றனர்.

இந்தப் பதிலைத்தான் இறுதியில் சொல்வார்கள் அரசதரப்பினர் என்பது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினருக்கும் பெரும்பாலும் தெரியும்.

ஆனால் இதனைச் சொல்ல இந்தப் பத்தாண்டு இழுத்தடிப்பு ஏன்?

ஆனாலும் மக்கள் இதனை நம்பவோ- ஏற்றுக்

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

கொள்ளவோ போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

படைதரப்பினரிடம் சரணடைந்தவர்களையும் மக்கள் அறிவார்

படைத்தரப்பினர் கடத்தியும் -பிடித்தும் - கைது செய்தும் கொண்ட போனவர்களையும் மக்கள் அறிவர்.

படைதரப்பினரிடம் தாங்களே நேரில் கையளித்த எமது உறவுகளை மக்கள் அறிவர்

அவர்கள் புலிகள் புலிகளால் எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற மக்களின் கேள்வியை ஐ.நா வதிவிடப் பிரதிநிதி நிச்சயம் கேட்டிருக்கவே மாட்டார். மக்கள் கேட்கவும் துணிய மாட்டார்.

ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பது ஒரு முதுமொழி ஆனால் ஏழை அழுத கண்ணீர்?

☆☆☆ ☆☆☆ ☆☆☆

சிங்கலே - மற்றும் இராவண அமைப்புக்களின் பிக்குகள் செம்மலை நீராவியடி - பிள்ளையார் கோவில் பகுதிக்குள் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு நிலமை-களை பார்வை யிட்டுள்ளதாக செய்தி வெளி வந்துள்ளது.




தமிழ்த் தீவிரவாதிக-ளால் அங்குள்ள பிக்குகளுக்கு இடையூறுகள் ஏற்படுவதாகவும் அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கு நில மைகளை பார்வையிட்டுள்தாக செய்தி வெளிவந்துள்ளது.

தமிழ்த் தீவிரவாதிகளால் அங்குள்ள பிக்குகளுக்கு இடையூறுகள் ஏற்படுவதாகவும் அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பௌத்தத்தை வளர்கவுமே தாம் அங்கு வருகை தந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எதுவானாலும் நீராவியடி நிலவரம் தொடர்ந்தும் கல-வரமாகத் தான் இருக்கும் போலிருக்கிறது.

# விளையாட்டு உலகில்

காவலூர் ஞானம்

## 22 வயதில் ஒரு 100




2006இல் மாஜி இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்ரெயிர் குக் ஒரு செஞ்சரி இளவயதில் ஒரு சதம் அடித்து சாதனை ஏற்படுத்திய பின்னர், தற்பொழுது இங்கிலாந்துக்கு அணிக்காக விளையாடும் இங்கிலாந்து வீரர் போப் ஒரு செஞ்சரி அடித்துள்ளார். 14 வருடங்கள் கழித்துதனது ஆறாவது டெஸ்டில் சதமடிக்த்துள்ள இவரது வயது 22வருடங்கள் 15 நாட்கள். இதுவரையில் ஏழு துடுப்பாட்ட வீரர்கள் (Denis Compton, Jack Hearne, Len Hutton, Alastair Cook, David Gower, Peter May, Colin Cowdrey) இச் சாதைனையைப் படைத்திருக்கிறார்க்ள. இவர்கள் எழுவருமே இங்கிலாந்து அணியின் ஒப்பற்ற துடுப்பாட்டக்காரர்கள். இப்பொழது புதிதாகச் சேர்ந்திருக்கும் போப் ஒரு அசத்தலான துடுப்பாட்ட வீரராகத் திகழ்வார் என்று பலராலும் நோக்கப்படுகிறார்.

## வல்லவனுக்கு வல்லவன் வருகிறான்





இன்று உலக டென்னிஸ் அரங்கில் அச்சமூட்டும் மும்மூர்த்திகள் Federer, Nadal, Djokovic. இவர்களுக்கு பெருஞ்சவாலாக வந்திருக்கும் ரஷ்ய நாட்டு வீரர்தான் Daniil Medvedev. இந்த வாரம் ஆரம்பமாகும் அவுஸ்திரேலியன் ஓபின் சுற்றுப் போட்டியில், நட்சத்திர வீரர்கள் மூவரும் இவரை எதிர்கொள்ளுவது சுலபமாக இருக்கப்போவதில்லை. 2019இல் மாத்திரம் இந்த 23 வயது இளம் வீரர் 59 மோதல்களுக்கு அதிகமாக வென்றுள்ளார். இப்படி இதுவரையில் எவருமே இவ்வளவு பெரிய தொகை போட்டிகளில் வென்றதில்லை. யு.எஸ். ஓபன் இறுதி மோதல் வரை இவர் வந்திருக்கிறார். நடாலுடன் மோதியபோது. எதிராளி பெரிய போராட்டத்தின் முடிவில்தான் இவரை தோற்கடிக்க முடிந்திருக்கின்றது. Masters 1000, Cincinnati, Shanghai ஆகிய மூன்று சுற்றுப்போட்டிகளிலும் கடந்த ஆண்டு வென்ற இவர், அவுஸ்திரேலிய ஓபின் சாம்பியனாகுவாரா?

## புதிதாக ஒரு டார்லிங்

ஹாலிவுட் நடிகராகவும், அமெரிக்க குத்துச்சண்டை பிரபல்யமாகவும் இருக்கும் ஜோண் சேனா தன் நீண்ட கால காதலி நிக்கி பெல்லாவை விட்டுப் பிரிந்தது பழைய கதையாகி விட்டது. இப்பொழுது 29 வயதான ஞாயல ஞாயசயைவணயனநா என்பவர், 42வயதான சேனாவின் புதுக்காதலியாகி இருக்கிறார்.சமீபத்தில் மெக்ஸிக்கோவில் இடம்பெற்ற ஆளைள டீரவவ றுழசடன போட்டியில் மகுடம் சூட்டியவர் இந்த அழகி.







## ஆருடம் சொல்லும் பந்து வீச்சு


ஒருவரின் பந்து வீச்சு சறுக்கினால் அணிக்கு தோல்விதான் என்றால் நீங்கள் நம்பத் தயாரா? ஆனால் அடுத்தடுத்து சந்திக்கும் அணியின் தோல்விகள் இதை நம்ப வைக்கின்றன. இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 2-வ்து ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க்கினால் ஒரு விக்கெட் கூட வீழ்த்த முடியவில்லை. 78 ரன்கள் விட்டுக் கொடுத்தார். அதில் 8 பவுண்டரி, ஒரு சிக்சர் அடங்கும்.இவர் 60 ரன்களுக்கு மேல் விட்டுக்கொடுத்த போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றதே கிடையாதாம் என்றார்கள். போட்டி முடிவும் அப்படித்தான்!இதற்கு முன் மான்செஸ்டரில் 2015-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக 79 ரன்கள் விட்டுக்கொடுத்துள்ளார். 2013-ல் பர்மிங்காமில் நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிராக 75 ரன்கள் விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டும், இந்தியாவுக்கு எதிராக 2019-ல் 74 ரன்கள் விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டும், 2018-ல் மெல்போர்னில் இங்கிலாந்துக்கு எதிராக 71 ரன்கள் விட்டுக்கொடுத்து இரண்டு விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார். நம்புகிறீர்களா?

## விருது நாயகன்

4000 ஓட்டங்கள் என்ற இலக்கை தொட்டதோடு,100 விக்கெட்டுகளையும் வீழ்த்திய 7வது சாதனையாளராகி இருக்கிறார் இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ். தெ.ஆபிரிக்காவிற்கு எதிராக ஒரு சதமடித்துள்ள இவர், சமீபத்தில் கடந்த 2019ஆம் ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த வீரருக்கான 'சேர் கார்ஃபீல்ட் சோபர்ஸ்' விருதை இவர் வென்றிருந்தார்.இங்கிலாந்து அணிக்கு விளையாடிய பொதம், பிளின்ரொப் ஆகிய இருவருடன் இவரையும் இணைத்து,








யார் இவர்களில் சிறந்த பன்முக ஆட்டக்காரர் என்ற விவாதங்களும் ஆரம்பித்து விட்டன. சிறந்த ஒருநாள் வீரராக இந்தியாவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோஹித் ஷர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளராக அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பெட் கம்மின்ஸ், தெரிவு செய்யப்பட்டுள்ளார்.












இந்தப் பத்திரிகை இல.151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால் 26.01.2020 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.